DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

# உதயன்

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1368 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 24, 2022

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

## கனடிய கடவுச் சீட்டைப் பெறுவதற்காக மொன்றியால் நகரில் நீண்ட நாட்கள் காத்திருக்கும் மக்கள்... காத்திருப்போர் வரிசை நீண்டு சென்றும் பயனில்லை என மக்கள் விசனம்...



தங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தேவையான கனடிய பயணச்சீட்டைப் பெறுவதற்காக மொன்றியால் நகரின் பல பகுதிகளில் காத்திருப்போர் வரிசை நீண்டு சென்றும் அதனால் பயனில்லை என மக்கள் விசனம் கொண்டுள்ளனர். தினமும் நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முயன்றாலும் முன்னைய விண்ணப்பங்களை கவனத்திற்கு எடுக்க வேண்டும் என்பதற்காக புதிய விண்ணப்பங்களை ஏற்கத் தயாரில்லை என பதிலளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக 23ம் திகதி வியாழக்கிழமையன்று ஒட்டாவா பாராளுமன்றத்திலும் எதிர்க்கட்சி உறுப்பினர் கேள்வி எழுப்பியதில் நீண்ட நேரமாக இந்த விடயம் தொடர்பாக விவாதம் நடைபெற்றது என்றும் அறியப்படுகின்றது.

(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

## உலகத் தமிழர்களின் மனங்களை இணைக்கும் Miss Tamil Universe 2022 நாளை மறுநாள் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது



பல வருடங்களுக்கு முன்னர் கனடாவில் வாழும் இளம் பெண்களின் ஆற்றலை வெளிக்கொண்டு வரும் வகையில் நடத்தப்பெற்ற இந்த போட்டியானது தற்போது சர்வதேச மட்டத்திற்கு சென்றுள்ளது. இதன் மூலம். இந்த **Miss Tamil Universe 2022** நிகழ்வு உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் மனங்களை நிச்சயம் இணைக்கிறது என்றே கூறலாம்.

நாளை மறுநாள் 26-06-2022 ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலான **Hilton Toronto/ Markham Suites Conference Centre** இல் நடைபெறவுள்ள **Miss Tamil Universe-2022** போட்டி நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கே உள்ள படத்தில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் திருமதி சசிகலா நரேன் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது போட்டியில் பங்கு பற்றும் இளம் பெண்கள் அவரோடு அமர்ந்திருப்பதைக் காணலாம் (படம்: ஐயா4யு)

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
416 2888882
RE/MAX REALTRON BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM







## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Manufacturing Workers & General Labour Needed

உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை

**Manufacturing Workers and General Labour Needed for Full-time Morning Shifts**
**Looking for Workers to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for long-term positions.**
**Located in Scarborough near Markham and Ellesmere.**
**Salary starting from $16.00 + with benefits.**

Contact - Essan : 647-993-2872

### Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

**We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.**

**Responsibilities:**
**-Present and sell company products to potential customers**
**-Find and cold-call new prospects in existing and in new markets**
**-Prospect and contact potential customers while generating quality leads**
**-Must be result-driven and reach agreed sales targets by the deadline**
**-Resolve customer inquiries and complaints about the products**
**-Strong organization, and communication skills and be goal-oriented**
**-Ability to work in B2B corporate sales environment**
**-Must have a professional appearance and manner**

**Qualifications:**
**-Must have 2 or more years of outside sales experience**
**-Great written and verbal communications skills**
**-Good Microsoft Office abilities**
**-Ability to build a great and strong rapport with clients**
**-Strong negotiation skills**
**-Deadline and detail-oriented**
**-Exceptional Time Management skills and Organizational Skills Required**
**-Must have a valid driver's license and reliable transportation**
**-Bonus: has experience in the pallet industry**

**Benefits:**
**-Competitive base salary + Uncapped commission**
**-On-going training and development to ensure your success**
**-Health Benefits option available**

Contact - Essan : 647-993-2872

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

### ATSIN LAW சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### மணமகள் தேவை

**யாழ்ப்பாணத்தில் கௌரவமான குடும்பத்தில் பிறந்தவரும் தற்போது அவுஸ்த்திரேலியாவில் Civil Engineer ஆக பணியாற்றுகின்றவரும் Australia நிரந்தரப் பிரஜையும் 1976ம் ஆண்டு பிறந்தவருமான மணமகனுக்கு மணப்பெண் ஒருவரை அவருடைய உறவினர்கள் தேடுகின்றனர். எந்த நாட்டிலிருந்தும் விண்ணப்பிக்கலாம். மணமகன் விவாகரத்து பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் விபரங்களுக்கு 647-667-8176 என்னும் தொலைபேசி இலக்கத்திலோ அன்றி layanthan24@yahoo.ca என்னும் மின்னஞ்சல் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.**

### இலங்கை உணவகங்களில் வேலை வாய்ப்பு

**Perth, Niagara Falls,** மற்றும் **Blue Mountain** ஆகிய நகரங்களில் சிறப்பாக இயங்கிவரும் இலங்கை உணவகங்களில் இலங்கை உணவுகளை தயாரிக்கத் தெரிந்த சமையல் வல்லுனர்களும் **(cooks),** சமையல் உதவியாளர்களும் **(kitchen helpers)** உடனடியாகத் தேவை. அனுபவம் அவசியமில்லை. தகுந்த சம்பளமும் தங்குவதற்கு இடமும் உணவும் வழங்கப்பெறும்.

தொடர்புகளுக்கு செந்தூரன்:
**416 - 569 - 8173**

### வேலைக்கு ஆட்கள் தேவை

**Bloomington & McCowan**

**Stouffville** நகரில் உள்ள **Golf Club** இற்கு **Cook & Dishwasher** உடனடியாக தேவை.
**Full tie or Part time.**

**Please call or text : Ravi**
**416-909-9651**

உதயன் கதிரோட்டம்

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இலங்கை அரசின் தமிழினப் படுகொலைகளை இனிமேல் மூடிவைக்க முடியாது என்பதை அறிவித்த கனடாவின் பிரம்ரன் மாநகரம்

2009 ஆண்டில் மட்டுமல்ல. அதற்கு முன்னரும் பின்னரும் இலங்கை அரசினாலும் ஆயுதப் படைகளினாலும் கொல்லப்பட்டவர்களின் இழப்பின் கொடுமையை 'இனப்படுகொலை' என்று எம்மவர்கள் உச்சரிக்க முற்பட்ட போது பல நாடுகளும் தனி நபர்களும் நியாயம் வழங்க வேண்டிய அமைப்புக்களும் அதைவிட இலங்கையில் உள்ள தமிழ்த் தலைவர்கள் சிலர் கூட அதற்கு தடையாக இருந்தாரகள். எங்கள் வாய்களை மூடி வைக்கச் சொன்னார்கள். "அப்படி சொன்னால் அது நாம் பிறந்த மண்ணை அவமானப்படுத்தும் செயல்" என்றார்கள் சிலர்.

இவ்வாறாக 2009ம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபையாலும் ஏனைய மனித உரிமைகளுக்கான உயர் பீடங்களும் இவ்வாறான தமிழினப் படுகொலைகளை ஏற்க மறுத்தும். இலங்கை அரசிற்கு எதிராகச் செயற்படக் கூடாது என்று எடுத்த தீர்மானங்களும் எம்மையும் எமது மக்களையும் மிகுந்த வேதனைகளுக்கு உள்ளாக்கின.

ஆனால், மேற்குலக நாடான கனடாவில் பிரம்ரன் மாநகர சபை என்னும் உள்ளூராட்சி மன்றம் எடுத்த முனைப்பின் காரணமாக, இன்றைய நாள் புலம்பெயர் தமிழர் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதிய சிறப்பான நாளாக எழுந்து நிற்கின்றுத. முள்ளிவாய்க்காலில் நிர்மூலமாக்கப்பட்டு, அழித்துச் சிதைக்கப்பட்ட இலட்சோப லட்சம் ஈழத்தமிழருக்கான நினைவுத் தூபியை அமைப்பதற்கான ஆரம்பப் படியாகவும் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகவும் இன்று பிரம்ரன் மாநகர சபையும் அதன் முதல்வர் பெற்றிக் பிரவுண் அவர்களும் அவரது சக சபை அங்கத்தவர்களும் இணைந்து எடுத்த முடிவின் பிரகாரம் இலங்கை அரசின் தமிழினப் படுகொலைகளை இனிமேல் மூடிவைக்க முடியாது என்பதை இந்த மாநகராட்சி மன்றம் உலகிற்கு அறிவித்ததன் மூலம் எமது காயங்களுக்கு மருந்து தடவியதைப் போன்ற உணர்வை எமக்களித்துள்ளுத..

ஆமாம்! இன்று கனடாவின் பிரம்ரன் மாநகரில் எடுக்கப்பெற்ற ஆரம்ப நடவடிக்கைகளின் ஒரு பகுதியான எம்மீது நிகழ்த்தப்பெற்ற இனப்படுகொலைகளை நிரூபிக்கும் அடையாளமான நினைவுத் தூபிக்கான மாதிரிவடிவத்தை பிறம்ரன் பெருநகர் இன்று உத்தியோக பூர்வமாகப் பிரகடனப் படுத்திய நிகழ்வு உள்ளாட்சி அமைப்பின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றதும் அங்கு பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவையாகும்.

கனடா பிராம்டன் நகரில் அமையப் போகும் 'தமிழினப்படுகொலை நினைவுத் தூபி'யின் மாதிரி வடிவம் காட்சிபடுத்தப்பெற்றது. அந்தக் காட்சியை எமது மக்கள் உட்பட பலர் கண்டு களித்து ஆனந்தக் கண்ணீர் வடித்ததை கண்டதாக பல சாட்சிகள் தோன்றியுள்ளன.

இந்த துணிச்சலான காரியத்தை நிறைவேற்றியதன் மூலம், இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியே தமிழ் இனப்படுகொலைக்கான நினைவாலயத்தை கனடா பிரம்ரன் மாநகரசபை உருவாக்க முன் வந்தமை மிகுந்த மன மகிழ்வைத் தருகின்றது. கனடாவில் பேசப்படும் ஒரு அற்புதமான பூங்காவான 'செங்கூசி பூங்கா'வில் பிராம்ரன் நகரசபை இந்த நினைவாலயம் கட்டுவதற்கான நிலத்தை ஒதுக்கித் தந்துள்ளமை ஓர வரப்பிரசாதம் என்றே நாம் கருத வேண்டியதாகும். இதற்கு காரணம். கோடை காலத்தில் லட்சோப இலட்சம் மக்கள் கூடுகின்ற ஒரு முக்கியத்துவம் பெற்ற இடமாக இது கருதப்படுகின்றது. எனவே இங்கு கூடுகின்றவர்களுள் குறைந்தது இருபத்தைந்து வீதமான மக்களாவது எமது மக்களின் வலிகளுக்குச் சான்றாக விளங்கும் இந்த நினைவுத் தூபியைத் தரிசித்து அது எதற்காக அங்கு நிறுவப்பெற்றுள்ளது என்பதையும் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும் என்றும் நாம் நம்பலாம்.

இருபதாம் நூற்றாண்டில் நடந்து முடிந்த மிகப் பெரிய இனவழிப்பாக ஈழத்தமிழருக்கு நடந்தேறிய இனப்படுகொலை இருந்த போதிலும், அதனை இனவழிப்பு என்று ஐ. நா சபையும், மேற்குலக சமூகங்களும் இற்றைவரை இனப்படுகொலை என்று பேச மறுக்கின்றன.

இந்நிலையில் கனடா பிராம்ரன் மாநகரசபையின் தமிழ் இனத்திற்கான இந்த அங்கீகாரம் ஒரு உயர்ந்த அங்கீகாரம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அத்துடன் இந்த தூபியானது இலங்கை அரசிற்கு ஒரு அவமானச் சின்னமாகவே விளங்கும் என்பதையும் நாம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

தொழிற்சாலையில் உடனடி வேலை வாய்ப்பு



ஸ்காபுறோவில்
Markham & Finch சந்திப்பிற்கு அருகில் இயங்கிவரும் அலுமாரி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் உடனடியாகத் தேவை.

அனுபவம் விரும்பத்தக்கது.

-> Cabinet Maker - அலுமாரி செய்பவர்
-> Saw Operator - பலகை வெட்டுபவர்
-> Cabinet Installer - அலுமாரி பூட்டுபவர்
-> Spray Painter - பெயின்ட் அடிப்பவர்

தொடர்புகளுக்கு: (416) 994-7776

ACCOUNTING ASSISTANT WANTED

Busy accounting firm in Scarborough, requires Accounting Assistant. Fluent in English and Tamil and computer literacy.
Required Accounting Graduates only, Experience not required, we will train
Interested applicants resume to acctgtrainee@gmail.com

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: 416-894-6244

Restaurant வேலை வாய்ப்புக்கள்

Yonge and Eglinton சந்திப்புக்கு அருகில் இயங்கிவரும் கனடிய உணவகம் ஒன்றுக்கு:
Full Time அல்லது Part Time Line Cooks மற்றும் Dish Washers உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

அனுபவம் விரும்பத்தக்கது.
ஆர்வமுடையோர் 416-627-6452 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

Help Wanted

தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

ஆண், பெண் இருவரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு Jeya
647-669-2739

கனடிய செய்திகள்
Canadian News

# Ontario's Provincial Minister Raymond Cho Team hosted 'Scarborough North Victory Celebration and Volunteer Appreciation Night'

## ஒன்றாரியோ அமைச்சர் றேமண்ட் சோ தேர்தல் பிரச்சாரக் குழு ஏற்பாடு செய்த "வெற்றிக் கொண்டாட்டமும் தொண்டர்கள் கௌரவிப்பு நிகழ்வும்"




கனடாவின் நீண்ட கால அரசியல் அர்ப்பணிப்பாளரும், தொடர்ச்சியாக தேர்தல் வெற்றிகளை தனதாக்கிக் கொண்டவரும் ஒன்றாரியோ மாகாண அமைச்சருமான கௌரவ றேமண்ட் சோ தேர்தல் பிரச்சாரக் குழு ஏற்பாடு செய்த "வெற்றிக் கொண்டாட்டமும் தொண்டர்கள் கௌரவிப்பு நிகழ்வும்" சிறப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ் பேசும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரான லோகன் கணபதி அவர்களும் அங்கு கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினார்.

தமிழ்க் கலாச்சாரத்தின் கலை சார்ந்த அடையாளமான பரதநாட்டிய உருப்படி ஒன்றை சக்தி நர்த்தனாலயா நாட்டியப் பள்ளி மாணவிகளான செல்விகள் தியானா ரவிசங்கர் மற்றும் பவிஸ்னா ரட்ணசிங்கம் ஆகியோர் வழங்கி சபையோரை மகிழ்வித்தனர்.










## ஜீன் 2 தேர்தலில் என்டிபி கட்சி ஒன்பது இடங்களை இழந்தது ஏன் என்பதை ஆழ்ந்து நோக்க வேண்டும் என்கிறார் முன்னாள் தலைவி ஆண்ட்ரியா ஹோர்வத்



நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட ஒன்றாரியோ மாகாண கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கமானது டக் போர்ட் தலைமையில் அதிக பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்த கடந்த ஜூன் 2 தேர்தலில் தமது என்டிபி கட்சியானது ஒன்பது இடங்களை இழந்தது ஏன் என்பதை கட்சியின் முக்கிய தலைவர் ஆழ்ந்து நோக்க வேண்டும் என ஆண்ட்ரியா ஹோர்வத் தெரிவித்துள்ளார். தலைமைப் பதவியிலிருந்து வெளியேறும் அவர். எவ்வளவு காலத்திற்கு மாகாண சபை உறுப்பினராக பதவி வகிப்பேன் என்பதை தமது வானொலி பேட்டியொன்றில் தெரிவிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நடைபெற்று மூன்று வாரங்களுக்குப் பிறகு, அவரது ஒன்றாரியோ மாகாண புதிய ஜனநாயகக் கட்சியினர் 2018 இல் 40 இடங்களிலிருந்து 31 இடங்களுக்கு கீழே தள்ளப்பட்டனர். இதன் மூலம் கட்சி 9 ஆசனங்களை இழந்தது. என்ற கவலையை அன்றியா அவர்கள் வானொலி பேட்டியில் பகிர்ந்து கொண்டார். ஆனால் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக இருக்க போதுமான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்றாரியோ என்டிபி கட்சிக்கு உள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"என்னுடன் இருந்த தலைமைத்துவப் பொறுப்பு இன்றுடன் முடிவடைகிறது," என்று கடந்த புதன்கிழமை அன்றியா ஹாவர்த் கூறினார் "எங்கள் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒரு சிறந்த குழு உள்ளது, அது அவ்வளவு வலிமையானது அல்ல, இது எனக்கு மிகவும் கவலையளிக்கின்றது," என்று அவர் கனடாவின் சிபிசி வானொலியின் மெட்ரோ மார்னிங்கில் என்னும் எட்டு நிமிட பேட்டி நிகழ்ச்சியில் அவர் மேலும் தெரிவித்தார்.

அன்றியா ஹார்வத் அவர்கள் தனது தொகுதியில் வெற்றி பெற்றாலும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பெற்ற அந்த இரவன்று தான் கட்சியின் தலைமைப் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

மெட்ரோ மார்னிங் நிகழ்ச்சியின் தொகுப்பாளர் இஸ்மாயிலா ஆல்ஃபாவிடம் ஹார்வத் பின்வருமாறு கூறினார். "மக்களுக்கு போதுமான இடையூறுகள் இருந்தன, அவர்கள் அன்றாட வாழ்க்கையில் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து நின்று பார்க்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். மேலும் மாற்றத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலான வாக்காளர்களிடம் இருக்கவில்லை. எனினும் எமது என்டிபி கட்சி எடுத்த தீவிர முயற்சியானது டக் போர்டின் சவாலை சிறப்பாகச் சந்தித்தது வெற்றி கொண்டிருக்கலாம்" என்று அவர் உறுதியாகக் கூறினார்.

கடந்த நான்கு ஒன்றாரியோ மாகாணத் தேர்தல்கள் மூலம் 13 ஆண்டுகள் தலைவராக பணியாற்றிய அன்றியா ஹோர்வத், "எங்கள் பிரச்சாரம் எவ்வாறு செயல்பட்டது என்பதன் அடிப்படையில் நாம் பார்க்க வேண்டிய மற்ற விஷயங்கள் உள்ளன. "தரையில் என்ன நடக்கிறது, மக்கள் களத்தில் நடக்கும் பிரச்சாரத்தைப் பற்றி எப்படி உணருகிறார்கள் என்பதைத் திரும்பக் கேட்க நான் காத்திருக்கிறேன், ஏனென்றால் அங்குதான் வெற்றி அல்லது தோல்வி. பற்றிய காரணங்களை நாம் அறிந்து கொள்ளலாம்" என்றார்.

## கனடிய கடவுச் சீட்டைப் பெறுவதற்காக மொன்றியால் நகரில் நீண்ட நாட்கள் காத்திருக்கும் மக்கள்....
## காத்திருப்போர் வரிசை நீண்டு சென்றும் பயனில்லை என மக்கள் விசனம்...




தங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தேவையான கனடிய பயணச்சீட்டைப் பெறுவதற்காக மொன்றியால் நகரின் பல பகுதிகளில் காத்திருப்போர் வரி-சை நீண்டு சென்றும் அதனால் பயனில்லை என மக்கள் விசனம் கொண்டுள்ளனர்.

தினமும் நூற்றுக்கணக்கான விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முயன்றாலும் முன்னைய விண்ணப்பங்களை கவனத்திற்கு எடுக்க வேண்டும் என்பதற்காக புதிய விண்ணப்பங்களை ஏற்கத் தயாரில்லை என பதிலளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக 23ம் திகதி வியாழக்கிழமையன்று ஒட்டாவா பாராளுமன்றத்திலும் எதிர்க்கட்சி உறுப்பினர் கேள்வி எழுப்பியதில் நீண்ட நேரமாக இந்த விடயம் தொடர்பாக விவாதம் நடைபெற்றது என்றும் அறியப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது; கனடாவின் மொன்றியால் மாநகரில் சில இடங்களில் இயங்கிவரும் கனடிய கடவுச் சீட்டு வழங்கும் அலுவலகங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் மக்களால் நிரம்பி வழிவதாகவும் ஆனால் கடவும் வழங்கும் நடவடிக்கைகள் மிகவும் தாமதமாகவே இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது 22ம் திகதி புதன்கிழமையன்றும், நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் பயணங்களுக்குத் தேவையான புதிய கடவுச் சீட்டை பெறுவோம் என்ற நம்பிக்கையில் டவுன்டவுன்மொன்றியால் கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு வெளியே காத்திருந்தார்கள் என்றும் அங்கு அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களோடு சென்று காத்திருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்த வாரம் ஒவ்வொரு நாளும் அலுவலகத்திற்கு வெளியே ஏராளமான மக்கள் கூடினர், ஏனெனில் - அவர்களில் பலர் 48 மணி நேரத்திற்குள் புறப்படும் பயணத் திகதிகளைக் கொண்டுள்ளனர் - தங்கள் கடவுச்சீட்டைப் புதுப்பிக்க அல்லது முதல் முறையாக கனேடிய பாஸ்போர்ட்டைப் பெற முயற்சிக்கின்றனர். இவ்வாறு அங்கு சென்ற ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடவுச் சீட்டு வழங்கும் செயற்பாடுகளுக்கு பொறுப்பான கனடாவின் சமூக மேம்பாட்டு அமைச்சர் கரினா கோல்ட் ஒட்டாவாவில் பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் கடவுச் சீட்டு அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் விண்ணப்பதாரிகள் பயணம் செய்து புறப்படும் தேதிகளுக்கு முன் கடவுச் சீட்டுக்களைப் பெற உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அறிவித்துள்ளார்.

ஆனால் வரிசையில் காத்திருக்கும் மக்கள், உண்மையில் அமைச்சரின் அறிவிப்பை தாங்கள் நம்பவில்லை என்றும், அதிகாரிகள் அனைவரையும் சரியான நேரத்தில் ஒன்று திரட்டி செயலாக்க முடியாது என்றும் வதந்திகள் பரவுவதாகவும் தங்களுக்கு தகுந்த நேரத்தில் கடவுச் சீட்டு பெற முடியும் என்ற நம்பிக்கை இல்லை என்றும் கூறுகிறார்கள்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு காணப்படுவதாகவும், 48 மணித்தியாலங்களுக்குள் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளும் "அவசர" முறையைப் பயன்படுத்துவதனால் தாமதம் ஏற்படுவதாகவும் கடவுச் சீட்டு வழங்கும் விவகாரங்களுக்கான அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் "கோட்டா கோ கம்" அணியின் உறுப்பினர் வட பகுதிக்கு விஜயம் செய்து மக்கள் குறைகளை கேட்டறிந்தனர்



இலங்கையில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் "கோட்டா கோ கம்" அணியின் உறுப்பினர் வட பகுதிக்கு விஜயம் செய்து மக்கள் குறைகளை கேட்டறிவதில் ஆர்வம் காட்டி வருவதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். அத்துடன் வட பகுதியில் நீண்ட காலமாக தமது உறவுகளைத் தேடி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணமற்போனவர்களின் உறவினர்களைச் சந்தித்தம் அவர்கள் உரையாடியுள்ளனர்.

இந்த வகையில்ர்கிளிநொச்சி பிரதேச தமிழ் மாணவர்களுக்கு ஒரு தொகை அப்பியாசப் புத்தகங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். போராட்டக்காரர்களின் வடக்கு விஜயத்தின் ஒரு அங்கமாக புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இந்த சந்திப்புக்கள் கடந்த வாரம் இடம்பெற்றன.

கோட்டா கோ கம நூலகத்தில் அன்பளிப்புச் செய்யப்பட்ட அப்பியாசப் புத்தகங்களில் ஒரு தொகைப் புத்தகங்கள் இதன்போது கிளிநொச்சி ஸ்கந்த புரம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன என அறியப்படுகின்றது.

அத்துடன் பிரதேச தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் போராட்டக்களத்தின் தென்னிலங்கை இளைஞர்கள் தகவல்களை கேட்டு அறிந்து கொண்டுள்ளனர். தென்னிலங்கை சிங்கள மற்றும் வடக்கு தமிழ் மக்கள் இடையே பலமான நேசப்பாலமொன்றை கட்டியெழுப்பி நாட்டின் நலன் கருதிய போராட்டத்தில் இருதரப்பும் இணைந்து செயற்படுவதற்கான வழியேற்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கம் என்று கோட்டா கோ கம போராட்டக்கள ஒருங்கிணைப்பாளர்கள் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் தெரிவித்துள்ளனர். அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக் கழகமாணவர்களின் பிரதிநிதிகளையும் "கோட்டா கோ கம்" அணியின் உறுப்பினர்ள் சந்தித்து உரையாடினர்.



# பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம் அளவெட்டியிலும் முன்னெடுப்பு




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இராசதானியத் திட்டத்தின்கீழ் அளவெட்டியில் விவசாயிகளுக்குத் தானியங்களை வழங்கியுள்ளது. நாட்டில் நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக விரைவில் உணவுப்பஞ்சம் ஏற்படலாமென பல்வேறு தரப்பினரும் எச்சரித்து வருகின்றனர். இதற்கு முகங்கொடுக்கும் விதமாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தமிழ் மக்களின் உணவுப் பண்பாட்டில் இருந்து வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கும் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்ற தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகவே அளவெட்டியில் நேற்று திங்கட்கிழமை (20.06.2022) விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் விவசாயச் சம்மேளனத்தின் தலைவர் வை. சின்னப்பு தலைமையில் விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இத்திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கமளித்தார். ஓய்வுநிலைப்பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தானியங்களின் செய்கைமுறை பற்றி விளக்கமளித்ததோடு விவசாயிகளின் சந்தேகங்களையும் தெளிவுபடுத்தினார். இந்நிகழ்ச்சியில் அளவெட்டி மற்றும் அயற்கிராமமான மல்லாகம் கல்லாரையைச் சேர்ந்த 25 விவசாயிகளுக்குக் குரக்கன், வரகு, பயறு, காராமணி விதைகள் உடனடி விதைப்புக்கென வழங்கப்பட்டுள்ளன.





வழங்கப்படும் விதைகளின் எடையின் இரட்டிப்பு மடங்கு விதைகளைச் சுழற்சிமுறையில் வேறு விவசாயிகளுக்கு வழங்கும்பொருட்டு அறுவடையின் பின்னர் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் கையளிக்கவேண்டும் என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதும் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கன.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4






# தமிழ்நாடு ஆசிரியர் சங்க தலைவர் பி.கே. இளமாறன் காலமானார்

இந்தியா செய்திகள்
India News

தமிழ்நாடு ஆசிரியர் சங்க தலைவர் பி.கே.இளமாறன் திடீர் உடல்நலக்குறைவால் சென்னையில் காலமானர். மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, சென்னை வியாசர்பாடியில் உள்ள இல்லத்தில் ஆசிரியர் இளமாறன் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலும், இளமாறனின் மறைவு காரணமாக அவரது குடும்பத்தினருக்கு ஆசிரியர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# நடிகரும் தேமுதிக கட்சியின் தலைவருமான விஜயகாந்த் காலிலிருந்த 3 விரல்கள் அகற்றப்பட்டன



நடிகரும் தேமுதிக கட்சியின் தலைவருமான விஜயகாந்த் அவ்வப்போது மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அந்த வகையில், சமீபத்தில் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அங்கு வழக்கமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவரது காலில் இருந்து 3 விரல்கள் அகற்றப்பட்டதாக கூறப்படுகிறது. அவரது காலில் ரத்த ஓட்டம் சீராக இல்லாத காரணமாக அறுவை சிகிச்சை செய்து 3 விரல்கள் அகற்றப்பட்டதாக மருத்துவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. தற்போது அவர் நலமுடன் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அறிந்த ரசிகர்கள், விஜயகாந்த் விரைவில் நலம் பெற வேண்டி பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

# அரிவாளை பிடிங்கி மகனை வெட்டிக்கொன்ற தந்தை.. நீதிமன்ற வளாகத்தில் நடந்த பயங்கரம்





சொத்துப் பிரச்சனை காரணமாக தந்தையை வெட்ட வந்த மகன் போலீசார் முன்னிலையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் கவர்னகிரி சுந்தரலிங்கம் நகரில் தமிழ் அழகன் என்பவர் வசித்து வருகிறார். இவருக்கும் இவரது மகன் காசிராஜனுக்கும் ஏற்கனவே சொத்துப் பிரச்சனை காரணமாக முன்விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. அவ்வப்போது இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், குடும்பத்தினர் சமாதானம் செய்துவந்தனர். இதையடுத்து காசிராஜன், தனது தந்தை மீது தூத்துக்குடி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ஆஜராவதற்காக இன்று காலை தமிழ் அழகன், அவரது சகோதரர் கடல் ராஜா மற்றும் உறவினர் ஆகியோர் நீதிமன்றம் வந்துள்ளார். வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தல் ஆஜராகி விட்டு நீதிமன்றம் எதிரே உள்ள பகுதிக்கு நடந்துசென்றுள்ளனர்.

அப்போது அங்கு வந்த காசிராஜன், தன்னுடைய தந்தை உள்ளிட்ட 3 பேரையும் அரிவாளால் வெட்ட முயன்றுள்ளார். இதில் சுதாரித்துக் கொண்ட தமிழ் அழகன், கடல் ராஜா, காசிதுரை ஆகியோர் காசிராஜனிடம் இருந்து தப்பித்தனர். மேலும் அவரிடம் இருந்து அரிவாளை பிடிங்கி காசிராஜனை கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்துள்ளனர். இதனால் நீதிமன்றம் மற்றும் காவல்நிலையம் வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த கொலை தொடர்பாக மத்திய பாகம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் படுகாயம் அடைந்த 3 பேர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தூத்துக்குடியில் நீதிமன்றம் மற்றும் காவல் நிலையம் எதிரே நடந்த இந்த கொலை சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற பீடி இலைகள் பறிமுதல்



**தூ**த்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற ரூ.17 லட்சம் பீடி இலைகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு சமீப காலமாக மஞ்சள், பீடி இலை, களைக்கொல்லி மருந்து உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன.

இதனை அவ்வப்போது கியூ பிரிவு போலீசார், கடலோர பாதுகாப்பு போலீசார் மடக்கி பிடித்து வருகின்றனர்.

அதேபோன்று போதை பொருட்கள் கடத்தலும் நடந்து வருகிறது. இதனால் மாவட்ட மரைன் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் தொடர்ந்து கடத்தல் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் தூத்துக்குடி தருவைகுளம் அருகே உள்ள கடற்கரையில் இருந்து இலங்கைக்கு பீடி இலை கடத்தப்படுவதாக தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், இன்ஸ்பெக்டர் விஜயஅனிதா தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஜீவமணி மற்றும் போலீசார் ரகசிய கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, போலீசை பார்த்ததும் கடற்கரையில் இருந்த ஒரு படகு வேகமாக கடலுக்குள் புறப்பட்டு சென்றது.

இதைத் தொடர்ந்து போலீசார் மீனவர்களின் உதவியுடன் மற்றொரு படகில், கடலுக்குள் சென்ற படகை விரட்டி சென்றனர். அப்போது அந்த படகில் இருந்தவர்கள், மறைத்து வைத்து இருந்த மூட்டைகளை தூக்கி கடலில் வீசினர். பின்னர் அங்கிருந்து வேகமாக தப்பிச் சென்று விட்டனர்.

பின்னர் கடலில் மிதந்து வந்த மூட்டைகளை போலீசார் சேகரித்தனர். மொத்தம் 38 மூட்டைகள் இருந்தன.

அந்த மூட்டைகளை பிரித்து பார்த்தபோது, ஒவ்வொரு மூட்டையிலும் சுமார் 45 கிலோ எடை கொண்ட பீடிஇலைகள் இருந்தன. மொத்தம் 1,700 கிலோ பீடி இலைகள் இருந்தன. இதன் இலங்கை மதிப்பு சுமார் ரூ.17 லட்சம் என்று கூறப்படுகிறது.

மேலும் கியூ பிரிவு போலீசார், பீடி இலை மூட்டைகளை கடலில் வீசிவிட்டு தப்பிச் சென்ற கும்பல் குறித்து விசாரித்து, அவர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

Hilton
TORONTO/MARKHAM SUITES CONFERENCE CENTER & SPA
WE ARE HIRING

Benefits
- Team Member plus Friends & Family rate at family of brands worldwide,
- Free one meal during working shift
- Complimentary parking

Full Time
- Bartender
- Banquet Chef
- Banquet Supervisor
- Banquet Porter
- Busperson
- Dishwasher
- Housekeeping Supervisor
- Lobby Attendant
- Maintenance
- Maintenance Coordinator
- Assistant Front Office Manager
- Wedding & Special Events Manager
- Pastry Chef
- Room Attendant
- Sous Chef
- Security Guard
- Switchboard Operator
- Third Cook
- Third Cook Pasty

Part Time
- Guest Service Agent
- Night Auditor
- Room Attendant
- House Person
- Security Guard
- Dishwasher
- Restaurant Server

APPLY NOW

Send Your Resume Today!
HR@markhamsuites.com

Hilton Toronto/Markham Suites Conference Centre & Spa
8500 Warden Avenue, Markham, Ontario L6G 1A5





# இரு கைகளும் இல்லாத தமிழக மாணவி பிளஸ் டூ தேர்வில் வெற்றி பெற்றார்

இந்தியா செய்திகள் India News

மயிலாடுதுறையில், இரண்டு கைகள் இல்லாத பெண், சிறுவயதிலேயே தாய் தந்தையரால் புறக்கணிக்கப்பட்டு, ஆதரவு இல்லத்தில் வளர்ந்து, தற்போது நம்பிக்கையுடன் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி, அதில் தேர்ச்சி பெற்று தன்னம்பிக்கைக்கு உதாரணமாக திகழ்கிறார். அவரது வெற்றி, அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

தமிழகம் முழுவதும் பிளஸ் 2 பொதுத் தேர்வுகள், கடந்த மே மாதம் 5-ம் தேதி தொடங்கி நடைபெற்றது. இதில், மயிலாடுதுறை அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், லெட்சுமி என்ற மாணவி இரண்டு கைகளும் இல்லாத நிலையில் ஆசிரியர் உதவியுடன் தேர்வு எழுதினார். பிறந்தபோது இரண்டு கைகளும் இல்லாத பெண் குழந்தை என்பதால், பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டு மயிலாடுதுறை ஆதரவற்றோர் காப்பகமான அன்பகத்தில், இரண்டு வயது குழந்தையாக இருந்ததில் இருந்து தற்போது வரை அங்கேயே வளர்ந்து வருகிறார் லெட்சுமி. இரண்டு கைகள் இல்லாத நிலையில், சிறிதும் மனம் தளராமல் தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதிய மாணவி லட்சுமி, இத்தேர்வில் 277 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளார். தேர்ச்சி பெற்ற மாணவியை, காப்பக நிர்வாகி மற்றும் சக மாணவ மாணவியர்கள் பாராட்டி இனிப்பு வழங்கினர். "தோல்வியுறும் மாணவமாணவியிர் லெட்சுமி தேர்ச்சி பெற்றிருப்பதை உதாரணமாகக் கொள்ள வேண்டும். அவரது வெற்றி பாராட்டுக்குரியது" என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

# பிச்சைக்காரருக்கு 24 ஆண்டுகளுக்குப் பிறகு வந்த ஆசிரியர் அரசுப்பணி

ஆந்திரா மாநிலம் பாத்தப்பட்டனம் அருகே உள்ள பெத்தசேதி கிராமத்தைச் சேர்ந்தவர் 55 வயதான கேதாஸ்வர ராவ். சிறுவயதில் பெற்றோரை இழந்த இவர், உடன்பிறந்தவர்களால் வெறுக்கப்பட்டு வேலையின்றி யாசகம் பெற்று வாழ்ந்து வருகிறார். இதற்கிடையே, 1994ல் ஆசிரியர் அரசுப்பணிக்கு தேர்வெழுதி தேர்ச்சிபெறாத கேதாஸ்வர ராவ், 1996, 1998 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்வில் தேர்ச்சி பெற்றுப் பதிவு செய்தபோதும் பணி கிடைக்காமல் போனது. அதன் பின்னர், உணவு, உடையின்றி ஒருவேளை உணவிற்காக ஏங்கி வந்த இவருக்கு 26 ஆண்டுகள் கழித்து தற்போது பணி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வுபெறும் வயதில் பணி ஆணை வந்திருக்கும் செய்தியைக் கிராம இளைஞர்கள் வாயிலாக தெரிந்துகொண்ட கேதாஸ்வர ராவ், சான்றிதழ்கள் வைத் திருப் பதால் மாணவர்களுக்கு பாடம் நடத்த ஆர்வமுடன் இருப்பதாக இன்ப அதிர்ச்சி அடைந்துள்ளார். பிச்சைக்காரராக இருந்து அரசு ஊழியராக உள்ளவரை கிராம இளைஞர்கள் குளிக்க வைத்து முடிதிருத்தம் செய்து கேக் வெட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.





# பிரமாண்டமான இருசக்கர மோட்டார் வாகனத்தில் ஐரோப்பாவை வலம் வரும் நடிகர் அஜித்

சினிமா

நடிகர் அஜித் குமார் இருசக்கர மோட்டார் வாகனத்தில் ஐரோப்பாவை வலம் வரும் புகைப்படங்கள், சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன. அஜித்தின் வலிமை திரைப்படம் கலவையான விமர்சனங்களை பெற்ற நிலையில் அடுத்த படத்தை வெற்றிபெற செய்ய படக்குழுவினர் வேலை செய்து வருகின்றனர். இன்னும் பெயரிடப்படாத இந்த படத்திற்கு ஏகே 61 என்பது தற்காலிக தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது. வலிமை படத்தை இயக்கிய எச். வினோத் தான் இந்த படத்தையும் இயக்கி வருகிறார். ஏகே 61 படத்தில் வங்கிக் கொள்ளை என்பது முக்கிய காட்சிகளாக அமையும் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதன் அடிப்படையில் மவுண்ட் ரோடு போன்று ஐதராபாத்தில் செட் அமைக்கப்பட்டு படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. தொடர்ச்சியாக ஒன்றரை மாதங்களுக்கும் மேலாக படப்பிடிப்பு நடைபெற்று நிலையில் முதல்கட்ட படப்பிடிப்பு கடந்த சில நாட்களுக்கு முன்பாக நிறைவு பெற்றது. இதையடுத்து அடுத்த கட்ட படப்பிடிப்பிற்காக படக்குழுவினர் தயாராகி வருகின்றனர். இடைப்பட்ட இந்த நாட்களில் அஜித் தனது இருசக்கர மோட்டார் வாகனத்தில் ஐரோப்பாவை வலம் வந்து கொண்டிருக்கிறார். இதுதொடர்பாக பிரிட்டனில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன. இந்த பயணத்தின்போது அஜித் தனக்கு விருப்பமான பி.எம். டபிள்யூ நிறுவனத்தின் இருசக்கர மோட்டார் வாகனத்தை பயன்படுத்தியுள்ளார்.

1200 சிசி திறன் கொண்ட இந்த வாகனத்தில் 6 கியர்கள் உள்ளன. ஏகே 61 படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு புனேவில் விரைவில் தொடங்க உள்ளது. இந்த படத்தில் அஜித்துடன் மஞ்சு வாரியர், சமுத்திரக் கனி உள்ளிட்டோர் நடிக்கின்றனர்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




MOBILE CONSULAR SERVICES - 2022
SRI LANKA CONSULATE GENERAL, TORONTO

25TH JUNE (SATURDAY)
FROM - 09.30 A.M.
TO - 04.30 P.M.

VENUE: INTER-CITI LOGISTIC
10 THORNMOUNT DRIVE
TORONTO ON M1B 3J4

YOU CAN OBTAIN THE FOLLOWING CONSULAR SERVICES

1. Apply for New Passport
2. Translation of Driving License
3. Attestation of Documents to Obtain Dual Citizenship
4. Handing over Dual Citizenship Applications
5. Attestation of Power-of-Attorney
6. Attestation of Affidavit/Notice of Marriage/Parental Consent/Docs. for Opening Second Bank Account
7. Apply for Registration of Births & Deaths
8. Any Other Consular Assistance

For Instructions And Documents Needed For The Service You Require Please Visit The Consulate Website - www.torontoslcg.org

Kindly Bring Originals and a Set of Photo Copies

Payments for Services to be Paid in Cash Only.

Inquiries : Phone - 416 323 9133 or E-Mail : srilanka@bellnet.ca

Thushara Rodrigo
Consul General
Sri Lanka Consulate General

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மக்கள் பாவனைக்கு உட்படுத்துவது தொடர்பில் கவனம்



ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மக்கள் பாவனைக்கு உட்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று கடற்றொழில் வள அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா குறித்த துறைமுகத்தை பார்வையிட்ட பின்னர் மேலும் அபிவிருத்திற்கு உட்படுத்துவதன் ஊடாக சிறந்த பயனைப் பெறுவதற்கு தீர்மானித்துள்ளதாக அங்கு குறிப்பிட்டார்.

கடந்த 2008ஆம் ஆண்டில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் 2013 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியும், துறைமுக அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஸவால் திறந்து வைக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்ட போதிலும். ஆனால் ஒரு வர்த்தக கப்பல்கூட ஒலுவில் துறைமுகத்துக்கு இது வரை வரவே இல்லை. ஏனெனில் மணல் நிரம்புவதால், இதுவரை எவ்வித பயனையும் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் பிரகாரம் ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தின் செயற்பாடுகளை சம்பிரதாயபூர்வமாக மீள ஆரம்பிப்பதற்கும் குறித்த துறைமுகத்திற்கு மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம் அஸ்ரப்பின் பெயரினை வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

எனவே இவ்விடயத்தில் வீணான அரசியல் செய்யாமல் அனைத்து தரப்பினரும் முன்வந்து ஒத்துழைப்புகளை வழங்க வேண்டு என கேட்டுக்கொண்டார்.

இதன் போது துறைசார் அதிகாரிகள் மீனவ சமூகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த கால விஜயத்தின் போது முதல் கட்டமாக மீன் பதனிடும் தொழில் கூடங்கள் போன்றவை நிர்மாணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட நிலையில் மீனவ சமூகத்தின் பாவனைக்கு அமைச்சரால் கையளிக்கப்பட்டுள்ளன.

பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட துறைமுகத்தை பராமரிப்பதற்கு துறைமுக அபிவிருத்தி அதிகார சபை மாதாந்தம் 56 இலட்சம் ரூபாய் வரை செலவிட நேர்ந்தது. இந்நிலையில் கடற்றொழில் வள அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் பகீரத முயற்சிகளை தொடர்ந்து துறைமுக அமைச்சு, கடற்றொழில் வள் அமைச்சு ஆகியன கூட்டாக அண்மையில் சமர்ப்பித்த அமைச்சரவை யோசனை மூலமாக கடற்றொழில் அமைச்சின் பொறுப்பில் ஒலுவில் துறைமுகம் வந்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.







# இலங்கைக்கு தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் மேலும் ஒரு தொகுதி அத்தியாவசிய பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

## 61 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் அனுப்பிப்பு



இலங்கை மக்களுக்கு தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் மேலும் ஒரு தொகுதி அத்தியாவசிய பொருட்கள் புதன்கிழமை (22) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்கள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள உள்ள நிலையில் அந்த மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் தமிழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மத்திய அரசின் அனுமதியுடன் கடந்த மே மாதம் ஒரு கப்பலில் பொருட்கள் சென்னையில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரிசி, பால் பொருட்கள், மருந்துப் பொருட்கள் பெறப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்தில் வி.டி. சி.சன் என்ற கப்பலில் பொருட்கள் ஏற்றப்பட்டு இந்த கப்பல் பயணத்தை தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தமிழக உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆர். சக்கரபாணி, தமிழக சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பெ.கீதாஜீவன், மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா.ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் புதன்கிழமை (22) கொடியசைத்து அனுப்பி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், "பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள உள்ள மக்களுக்கு உதவுவதற்காக இரண்டாவது கட்டமாக இன்று (22) இந்த கப்பலில் 14,700 டன் அரிசி, 250 டன் ஆவின் பால் பொருட்கள், 50 டன் மருந்து பொருட்கள் என மொத்தம் 61 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் மூன்றாம் கட்டமாக பொருட்கள் அனுப்பபடும்" என்றார்.

**- மன்னார் நிருபர்**








# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

## தப்பி ஓடிய கார் பொலிஸாரால் மீட்பு!



வவுனியா நொச்சுமோட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா பறனட்டகல் கிராமத்தை சேர்ந்த 42 வயதுடையவர் தனது மைத்துனருடன் அறுவடை இயந்திரத்திற்கு எரிபொருள் பெறுவதற்காக குறித்த இயந்திரத்தினை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடுநோக்கி சென்றுகொண்டிருந்தபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து பறன்நட்டகல் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தவரை அதே திசையில் பயணித்த கார் மோதியதில் 42 வயதுடைய பாலகிருஸ்ணன் என்ற நபர் பலியானதுடன் மைத்துனர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் விபத்து ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்ற நிலையில் ஓமந்தை பொலிஸார் காரின் இலக்கத்தினை அறிந்து குறித்த காரினை கைப்பற்றி ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனா.

# மனித உரிமை மீறல்களுக்கான நீதியை தாமதிப்பது பொறுப்புச் சொல்வதில் அரசை விடுவிப்பதாக அமைகின்றது

## - அரசியல் கைதியின் தயாரின் அஞ்சலியில் நிரோஷ்



தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கு நீதிகேட்டு போராடும் தாய்மார் நீதி கிட்டாமலேயே படிப்படியாக மரணித்துப்போகும் அவலம் தொடர்கின்றது. தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி. மீறப்பட்ட மனித உரிமைகளுக்காக ஆட்சியாளர்களுக்கு அளிக்கப்படும் கால அவகாசம் பொறுப்புச் சொல்லுதலில் இருந்து அரசை விடுவிப்பதற்கான உத்தியாகவே அமைகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அரசியல் கைதி பார்த்திபனின் தயாரின் இறுதிச் சடங்கு இன்று ாயிற்றுகிகிழமை திருநெல்வேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. அங்கு அஞ்சலியுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், போருக்குப் பின் 13 ஆண்டுகளாகியும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறப்படவில்லை. கடந்த 26 ஆண்டுகளாக பிள்ளையை அரசியல் கைதியாக பிரிந்து அப்பிள்ளையின் விடுதலைக்காகப் போராடிய தாய் இன்று மரணித்துள்ளார். அதுபோன்று கடந்த வராம் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் சகாதேவன் நிலக்சனின் தாயார் மரணமடைந்தார். அவரும் படுகொலை செய்யப்பட்ட மகனுக்காக நீதி கேட்டு போராடிய தாய் ஆவார்.

இதுபோன்று 2000 நாட்களை அண்மித்து நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய் தந்தையரும் நீதி கிட்டாமலேயே போராட்டக்கொட்டில்களிலேயே மடிந்து போகும் அபாயத்தினை காண்கின்றோம். இவ்வாறு சாவடைவோர் பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்காத காரணமாக உடல் உள ரீதியில் நலிவடைந்தே மாண்டு போகின்றனர்.

இவ்வாறாக நிலைமை மோசமடைகின்றது. இந்தத் தாயின் மகன் பயங்கரவாதத் தடைச் சட்டம் காரணமாக 26 ஆண்டுகளாக சிறையில் நீதியின்றி விடுதலைக்காக ஏங்குகின்றார். அவர் தண்டிக்கப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மனித உரிமைகளை நசுக்கும் காட்டுமிராண்டித்தனமான சட்டம் என உலகம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான அநீதியான சட்டங்களின் வாயிலாகவே அப்பாவிகள், அல்லது சிறு குற்றங்களுடன் தொடர்புபட்ட தமிழ் இளையோர் சிறைகளில் தசாப்தக்கணக்கில் சித்திரவதை செய்யப்படுகின்றனர். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கள் அரசியல் கைதிகள் விடயத்தில் முழுமையான நேர்மையினைப் பின்பற்றவில்லை.

பாதிக்கப்பட்ட தாய்மார்களே நீக்காக விட்டுக்கொடுப்பின்றி போராடுகின்றனர். அவர்களே அரசுக்கு எதிரான சாட்சியமாகவும் காணப்படுகின்றனர். தசாப்சக்கணக்கில் நீதி கீட்டாது தாய்மார் மாண்டு போவது அரசாங்கத்தினை பொறுப்புக்கூறலில் விடுவிக்கும் நிலைமையாகவே அமையும் என்பதை சர்வதேசம் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



# அருள்ஜோதி சிவாலயம்

ஸ்ரீ கௌரி அம்பிகா சகித சாம்பசிவ பெருமான்

ஏகாதச ருத்திர மகா சனிப்பிரதோஷம் உற்சவம்

25-6-2022 சனிக்கிழமை

மாலை 4 மணி தொடக்கம் ஏகாதச ருத்ர பாராயணம் ஹோமம்

## 108 சங்காபிஷேகம்

7.30 மணிக்கு விசேட அலங்கார பூஜை பஞ்சமுக அர்ச்சனை

என்பன சிறப்பாக நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும் அனைத்து அடியார்களையும்
கலந்துகொண்டு எம்பெருமானுடைய
பரிபூரணமான அருளை பெற்று உய்யும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்

ஏகாதச ருத்ர சங்காபிஷேக உபயம்

R. ராம்குமார்

அன்றைய தினம் பாலாபிஷேகம் பால்குட அபிஷேகம் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன்
தொடர்பு கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்

அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு ...

அருள் ஜோதி பக்தி பாடல்கள் இசைத்தட்டு வெளியீடு

1400 Bayly st unit 13 b Pickering

GURUJI: 647-989-6943 / 647-746-7474





# Dr. புஷ்பா வன்னித்தம்பி

பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates

Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



**Scarborough**

1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

**416-289-7187**


**Markham**

7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

**905-201-8900**

# நாட்டில் குழம்பிப்போயிருக்கும் நிர்வாகம்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



பள்ளிஹகார முன்பு வட மாகாண ஆளுநராக இருந்தவர். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் களில் ஒருவர். இவர் தமிழ்ப் பகுதிகளில் உள்ள நிர்வாகக் கட்டமைப்பின் வினைத்திறனை குறித்து உயர்வான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. போர்காலத்தில் மிக நெருக்கடியான ஒரு சூழலில் நிர்வாகம் செய்து பழகிய தமிழ் அதிகாரிகளிடமிருந்து முழு நாடும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறுவாராம்.

அதில் உண்மையும் உண்டு. நெருக்கடியான காலகட்டத்தில் இரண்டு நிர்வாகங்களுக்கு இடையே செயல்படுவது என்பது கயிற்றில் நடப்பது போன்றது. மூத்த தமிழ் நிர்வாகிகள் பலரிடம் அந்த ஆற்றல் இருந்தது. ஆனால் அண்மை நாட்களாக தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் எரிபொருள் வரிசைகளை வைத்துப் பார்த்தால் அப்படியான நிர்வாகத்திறமை எங்கே போனது என்று கேட்கத் தோன்றுகிறது.

இது நாடு முழுவதற்குமான ஒரு தோற்றப்பாடு, இதில் தமிழ்ப் பகுதியை தனித்துப் பார்க்க முடியாது என்று ஒரு விவாதம் முன்வைக்கப்படலாம். ஆனால் டெல்டா திரிபு வைரஸ் நாடு முழுவதையும் தாக்கியபோது தமிழ்ப் பகுதிகள் ஒப்பீட்டளவில் ஸ்திரமாக காணப்பட்டன. இறப்பு விகிதமும் ஒப்பீட்டளவில் தமிழ் பகுதிகளில் குறைவு என்று கூறப்படுகிறது. யுத்தமும் வைரசும் ஒன்று அல்ல என்பதனை ராஜபக்ஷக்களுக்கு உணர்த்திய ஒரு நெருக்கடி அது. டெல்டா திரிபு வைரஸின் தாக்கத்தின்போது தமிழ்ப் பகுதிகளில் மருத்துவ சுகாதார கட்டமைப்புக்கள் இயங்கிய விதம் முன்பு யுத்த காலகட்டத்தில் கிடைத்த அனுபவத்தின் விளைவு என்றும் எடுத்துக் கொள்ளலாமா?

இவ்வாறாக அனர்த்த காலங்களின்பொழுது தமிழ் மக்களின் கூட்டு அனுபவமும் சரி தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நிர்வாக கட்டமைப்புகளும் சரி முன்னைய யுத்த கால அனுபவத்தை அடியொட்டி சிறப்பாக செயல்பட முடியும். ஏனென்றால் இந்த பூமியிலே யாருக்கும் கிடைக்காத நூதனமான அனுபவங்கள் தமிழ் மக்களுக்கு கிடைத்தன. இந்த பூமியிலேயே யாரும் அனுபவித்திராத துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவித்தி ருக்கிறார்கள். நவீன வரலாற்றில் மரணத்தின் ருசி மிகத்தெரிந்த மக்கள் கூட்டங்களுக்குள் தமிழ் மக்களும் அடங்குவர். மரணத்தோடு நீண்டகாலம் உரையாடிய மக்கள் அவர்கள். மரணத்துள் வாழ்ந்து தப்பிப் பிழைத்த மக்கள் அவர்கள். அதாவது சாவினால் சப்பித் துப்பப்பட்ட மக்கள். ஒரு இனப் படுகொலையில் தப்பிப் பிழைத்தவர்கள். போரிலீடுபட்ட இரண்டு தரப்புக்களுக்கும் இடையே சான்றவிச் ஆக்கப்பட்டவர்கள். இக்கூட்டு அனுபவங்களின் விளைவாக தமிழ் மக்கள் எந்த நெருக்கடியையும் எதிர்கொள்வார்கள்.

யூதர்களின் வரலாற்றைக் கூறும் எக்சோடஸ் என்றழைக்கப்படுகின்ற நாவலில் அதன் ஆசிரியர் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தும்போது இவர் இந்த பெயருடைய நாசி வதை முகாமின் பட்டதாரி என்று அறிமுகப்படுத்துவார். அதாவது நாசி வதை முகாம்களில் இருந்து தப்பிய ஒவ்வொரு யூதரும் பட்டப்படிப்புக்கு நிகரான அனுபவங்களை கொண்டிருந்தார் என்று பொருள். இது தமிழ் மக்களுக்கும் பொருந்தும். தமிழ் மக்களைப் பொருத்தவரை எல்லா இடப்பெயர்வுகளும் புலப்பெயர்ச்சிகளும் அவர்களுக்குப் பட்டப்படிப்புகள்தான். எல்லாக் கூட்டுக் காயங்களும், கூட்டு மனவடுக்களும் சித்திரவதைகளும், அகதிமுகாம்களும் நலன்புரி நிலையங்களும் அவர்களைச் செதுக்கின. இப்படிப் பார்த்தால் இந்தப் பூமியிலேயே மிகக்கொழுத்த அனுபவங்களைக் கொண்ட மக்கள். இப்படியான அனுபவத்தைக் கொண்ட ஒரு சமூகம் இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையின்போது எப்படிச் செயல்பட வேண்டும்?

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவ்வளவுதான் எரிபொருள் உண்டு என்றால் அந்த அடிப்படையில் வாகனங்களை முதலில் பதிவு செய்து டோக்கன் கொடுத்து ஏதோ ஒரு முறைமையின் கீழ் எரிபொருள் விநியோகத்தை கொண்டு வரலாம் தானே? ஏன் இப்படி நாட்கணக்காக வாகனங்களையும் சாதிகளையும் தெருவோரங்களில் நிறுத்தி வைக்க வேண்டும்?

எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களில் ஒரு பகுதியினரைப் பார்த்தால், ஒரு இனப்படுகொலையில் இருந்து கற்றுக் கொண்ட மக்களாகத் தெரியவில்லை. மணிக்கணக்காக கிலோமீட்டர் கணக்காக நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள். நிற்கும் வரிசை நெடுகிலும் வெற்றிலை சப்பித் துப்பப்பட்ட அடையாளங்கள். வெற்றுத் தண்ணீர் போத்தல்கள், வெற்று பிஸ்கட் பக்கெற்றுக்கள். ஒருபகுதியினர் வரிசைகளில் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள். ஒரு பகுதியினர் திரும்பத் திரும்ப எரிபொருளை மீள நிரப்புகிறார்கள். அதை ஒரு குழுவாகத் திட்டமிட்டு வியாபாரமாகச் செய்கிறார்கள். அந்த எரிபொருள் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் 800 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. நிர்வாகம் சீர்குலைந்தால் கள்ளச் சந்தையும் பதுக்கலும் தலைவிரித்தாடும். யார் அதைக் கட்டுப்படுத்துவது? தெற்கில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் பொறுமையிழந்து மோதலுக்கு போனால் அதை போலீஸ் கட்டுப்படுத்துகிறது. ஆனால் வடக்கில், விசுவமடுவில் அதை ராணுவம் கையாண்டிருக்கிறது.

எரிபொருள் வரிசைகள் மட்டுமில்லை, கடந்த வாரம் பாடசாலைகளைத் திறப்பதா இல்லையா என்ற விடயத்திலும் அவ்வாறான குழப்பத்தைக் காணமுடிந்தது. இங்கு முதலில் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். எரிபொருட் தட்டுப்பாடு காரணமாக அன்றாட வாழ்வின் அசைவுகளை மட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. எனினும் தனியார் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக கல்விப் பொதுச்சாதாரணம், உயர்தரம், மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் போன்ற தேசிய பரீட்சைகளுக்கான தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து இயங்குகின்றன. அவற்றை நோக்கி ஆயிரக்கணக்கில் தமது பிள்ளைகளை பெற்றோர் மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி இறக்குகிறார்கள். ஒரு நண்பர் பகிடியாக சொன்னார்.....பெட்ரோல் கியூவில் நிற்கும் ஒரு பகுதியினர் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காகத்தான் எரிபொருளைச் சேமிக்கிறார்களா? என்று.

அரசாங்கம் மாறி மாறி அறிக்கைகளை விடுகிறது.ரணில் விக்ரமசிங்க பிரதமராக வந்த பின்னரும்கூட நாட்டில் அரசாங்கம் என்ற ஒன்று உண்டா என்று கேட்குளவுக்குத்தான் நிலைமை தொடர்ந்தும் காணப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் குழம்பிப் போனதால் நிர்வாக அதிகாரிகளும் குழம்பிப் போனார்கள், நிர்வாக கட்டமைப்பும் குழம்பிபோய் விட்டது, என்று ஒரு விளக்கத்தை தர முடியும்.

கடந்த வாரம் பாடசாலைகளை திறப்பதா இல்லையா என்ற விடயத்தில் முடிவெடுக்க முடியாத ஒரு நிலைமை காணப்பட்டது. முதலில் பாடசாலைகளை குறிப்பிட்ட காலகட்டத்துக்கு மூடப்போவதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் அது மேல் மாகாணத்துக்கு மட்டுமே பொருந்தும், என்றும் ஏனைய மாகாணங்களுக்கு பொருந்தாது என்றும் பின்னர் தெளிவுபடுத்தப்பட்டது. அதேசமயம் கிட்ட உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்கலாம் என்று கூறப்பட்டது. மேலும் இணைய வழியிலும் வகுப்புகளை நடத்தலாம் என்று கூறப்பட்டது. அதாவது ஹைபிரிட் முறைமை. முடிவில் அதிபர்கள் தற்துணிவாக முடிவெடுக்கலாம் என்று கூறப்பட்டது.

ஆனால் இப்போதுள்ள நிர்வாகக் கட்டமைப்பில் நெருக்கடிக்குள் ரிஸ்க் எடுத்து துணிவாக முடிவெடுக்க எத்தனை அதிபர்கள் தயார்? அவ்வாறு ரிஸ்க் எடுத்து முடிவெடுக்கக்கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பு நாட்டில் உண்டா? துணிந்து முடிவெடுக்கும் அதிபர்கள் அதன் விளைவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் எத்தனை பேருக்கு பதில் சொல்ல வேண்டும்? கல்வித் திணைக்களம், பெற்றோர், பழைய மாணவர் என்று எல்லாத் தரப்பும் அதிபரைத் தான் பிடுங்குவார்கள்.

இதுவிடயத்தில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் மட்டும் குழம்பிப் போயிருந்தன என்பதல்ல, ஊடகங்களும் குறிப்பாக இணையவழி ஊடகங்களும் தமது பங்குக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு நிலைமையைக் குளப்பின என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஒரு செய்தியின் மூலத்தை விசாரிக்காமல் பரபரப்பிற்காக செய்திகளைப் போடும் ஒரு போக்கை சமூக வலைத்தளங்கள் வளர்த்துவிட்டிருக்கின்றன. இதனால் செய்தியை விட வதந்தியே அதிகம் விற்பனை செய்யப்படுகிறது. உண்மையை விட வதந்தியே அதிகம் பரவலாகச் சென்றடைகிறது. இது கடந்த ஞாயிற்றுக்கிழமையும் நடந்தது. பதினோரு மணியளவில் அடுத்த நாள் பாடசாலைகள் இயங்காது என்று இணைய ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்தன. ஆனால் சுமார் அரை மணித்தியால இடைவெளிக்குள் அச்செய்தியை அதே ஊடகங்கள் மறுத்தன.

ஓர் அனர்த்த காலத்தின் செய்திகளை அறிக்கையிடுவதில் எத்தனை ஊடகங்கள் பொறுப்போடு செயற்படுகின்றன? நாட்டைக் குழப்புவதில் உறுதிப்படுத்தப்படாத செய்திகள், அல்லது பரபரப்பு செய்திகளுக்கும் ஒரு பங்கு உண்டு. குறிப்பாக பொருட்கள் பதுக்கப்படுவதற்கும் விலைகள் உயர்வதற்கும் பரபரப்புச் செய்திகளும் ஒரு விதத்தில் காரணம். ஓர் அனர்த்த காலத்தில் மக்களை குழப்பாமல் இருக்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் உண்டு.

அத்தியாவசிய சேவைகளுக்குரிய நிர்வாகக் கட்டமைப்பின்படி நாட்டின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு கீழ் ஒவ்வொரு மாவட்டச் செயலரும் பதவி வழியாக பிரதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராகச் செயற்பட முடியும். அதாவது மாவட்ட செயலர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக முடிவெடுக்கத் தேவையான முழு அளவு அதிகாரம் உண்டு. அவர்கள் தமது மக்களுக்காக ரிஸ்க் எடுக்கத் தயாராக இருந்தால் சரி. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்றங்கள் இல்லை. இதனால் கொழும்பினால் நேரடியாக நிர்வகிக்கப்படும் நிர்வாகக் கட்டமைப்பே உண்டு. இதுவும் தமிழ் நிர்வாகிகளின் சுயாதீனத்தை கட்டுப்படுத்துகிறது. வவுனியாவில் குட்செட் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாவட்டச் செயலகம் வினியோகத்தை கண்காணிக்கும் ஒரு செயலியை அறிமுகப்படுத்தியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முழு நாட்டுக்கும் உரிய ஒரு நெருக்கடியை தமிழ் மக்கள் மட்டும் தனியாகக் கையாள முடியாது என்று ஒரு விளக்கத்தை இந்த இடத்தில் கூறமுடியாது. ஏனென்றால் தமிழ் மக்களின் இறந்தகாலக் கூட்டுஅனுபவம் ஏனைய சமூகங்களைவிட வித்தியாசமானது. எனவே பதவி வழி அதிகாரமுடைய நிர்வாகிகள் துணிந்து ரிஸ்க் எடுக்க வேண்டிய ஒரு காலகட்டம் இது. தமிழ் அதிகாரிகள் மதிப்புக்குரிய, முன்னுதாரணமிக்க இறந்தகால அனுபவங்களைப் பின் தொடர வேண்டும்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியல் மக்களின் கோபத்தை திசை திருப்புவதற்காக இனவாதத்தை தூண்டுகிறார் சரத் வீரசேகர எம்.பி

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடியால் எரி பொருட்கள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக நாள் கணக்காக வரிசையில் காத்திருக்கும் செயற்பாடுகளால் சரத் வீரசேகர எம்.பி போன்றவர்கள் அங்கம் வகிக்கும் கோத்தபாய ராஜபக்ச அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு வாக்களித்து பொது மக்களே கடும் கோபத்தில் உள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் புதன்கிழமை (22) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அந்த மக்களின் கோபத்தை திசை திருப்புவதற்காக இனவாத கருத்தினை பரப்பும் சரத் வீரசேகர ஒரு மனநோயாளி.எங்களுடைய போராட்டம் என்பது எமது நிலத்திற்காகவும் எமது இனத்தின் விடுதலைக்காகவும் இருந்து வருகிறது.

அந்த வகையில் எங்களுடைய தேசத்தில் இருக்கின்ற நிலத்தையும் எங்களுடைய பூர்வீக சொத்துக்களையும் பூர்வீகமான வரலாறு சொல்லுகின்ற நிலங்களையும் அபகரிக்கும் நிலை-யில் தென்னிலங்கையில் இருக்கின்ற சரத் வீரசேகர போன்ற ஒரு சில பேர் இனத் துவேசத்தை ஊதி பெரிதாக்க முயற்சி செய்கிறார்கள்.

இந்த விடயம் இப்பொழுது ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக மக்களுடைய கிளர்ச்சியை திசை திருப்புவதற்கு ஒரு யுக்தியை கையாளுகிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு மனநோயாளி என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அவர் அமைச்சராக இருக்கின்ற போது கூடுதலாக இந்த நாட்டில் வாழ்கின்ற தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்களைச் சார்ந்த பிரச்சனைகளை மிகவும் மோசமாக நாடாளுமன்றத்தில் பேசி வந்தது காணக்கூடியதாக இருந்தது.

அந்த வகையில் எங்களுடைய சொத்தான குறுந்தூர் மலையில் பௌத்த விகாரை வைப்பதை தடுப்பது என்பது எமது உரிமை. சரத் வீரசேகர விற்கு அந்த இடத்தில் உரிமை இல்லை என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

குருந்தூர் மலை போராட்டத்தில் கலந்து கொண்டு நாங்கள் ஆதரவளிப்பது என்பது பெரி-ய விடயம் அல்ல. ஆனால் இலங்கை அரசாங்கம் எங்களுடைய இனப்பிரச்சினை சம்பந்தமாக சில விடயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாக இருந்தது.

ஆகவே இந்தப் போராட்டத்திலே இளைஞர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டால் விடுதலைப் புலிக-ளின் மீள் உருவாக்கப்பட்டு உள்ளார்கள் என்று சரத் வீரசேகர பொங்கி எழுவார்.

இந்த குருந்தூர் மலையில் எங்களுடைய உரித்தை உரிமையை நாங்கள் தட்டி இருக்கின்றபோது சிங்கள மக்களுடைய மௌனத்தை சோதிக்க வேண்டாம் என்று சிங்கள மக்களுடைய ஆதரவு இல்லாத சிங்கள மக்கள் எதிர்க்கின்ற சரத் வீர-சேகர அவர்கள் பாராளுமன்றத்தில் நகைச்சுவையாக ஒரு ஜோக்கரை போல போல பேசியிருப்பது நகைப்பிற்குரியது.

எங்களைப் பொறுத்தமட்டில் சிங்கள மக்கள் எமக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை போராட்ட காலத்தில் நாங்கள் நிரூபித் திருக்கின்றோம். கடை-சியாக முள்ளிவாய்க்கால் சமரில் விடுதலைப் புலிகள் நினைத்திருந்தால் சிங்கள மக்களை எதிரியாக கருதி இருந்தால் சிங்கள மக்கள் மீது தாக்குதலை நடத்தி இந்த போராட்டத்தை திசை திருப்பி இருக்க முடியும்.

அவர்கள் போராட்டத்தில் சிங்கள மக்கள் மீது நேசக்கரம் நீட்டி சிங்கள மக்கள் எங்களுக்கு எதிரி இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள். அதேபோல் போராட்டத்தில் இருக்கின்ற அத்தனை இயக்கங்களும் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை தொடர்ந்தும் சிங்கள மக்களோடு கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கமாக இருக்கிறது.

ஆகவே சரத் வீரசேகர போன்றவர்கள் இனியும் இனவாதம் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே கடந்த தேர்தல்களிலும் இவ்வாறு இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி தான் தேர்தலில் வெற்றி பெற்றார்கள்.

இவர்கள் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்து வெற்றி பெறவில்லை. சரத் வீரசேகர போன்றவர்களின் இனவாத கருத்துக்களை சிங்கள மக்கள் கேட்கக்கூடாது.

இவ்வாறான கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது என்பதை நான் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதை காலிமுகத்திடலில் நடைபெறுகின்ற போராட்டங்களில் எங்களுடைய மக்கள் சார்ந்த பல விஷயங்கள் பேசப்பட்டு வருத்தம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே சிங்கள மக்களை இனியும் இனவாதத்தை பேசி வாக்குகளை பெற முயற்சிக்காதீர்கள் உங்களுக்கு அது பகல் கனவாகவே தான் இருக்கும்.

ஆகவே எங்களுடைய தேசத்தில் எங்களுடைய மக்களின் பிரச்சினைகளை எங்களுடைய வரலாற்று சிறப்புமிக்க இடங்களை அணு அளவு கூட விட்டுக் கொடுக்க மாட்டோம்.

சரத் வீரசேகர இனியாவது வாயை மூடிக்கொள்ள வேண்டும். சரத் வீர-சேகர கூறிய கருத்தை மீண்டும் அவருக்கு நான் கூறுகிறேன். சிங்கள மக்களை நீங்கள் சீண்டி பார்க்காதீர்கள்.

சிங்கள மக்கள் ஒரு போதும் உங்களுடைய பக்கம் வரமாட்டார்கள். சரத் வீரசேகர சிங்கள மக்கள் கோபம் கொண்டால் சரத் வீரசேகர போன்றவர்கள் தாங்க மாட்டார்கள் என்பதை சரத் வீரசேகர வுக்கு ஞாபகப்படுத்திக் கொள்கிறேன் என்றார்.



கனடிய செய்திகள் Canadian News

# கனடா பிராம்டன் நகரில் அமையப் போகும் "தமிழினப்படுகொலை நினைவுத் தூபி"யின் மாதிரி வடிவம் காட்சிபடுத்தப்பெற்றது




இன்றைய நாள் புலம்பெயர் தமிழர் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதிய சிறப்பான நாள். முள்ளிவாய்க்காலில் நிர்மூலமாக்கப்பட்டு, அழித்துச் சிதைக்கப்பட்ட லட்சோப லட்சம் ஈழ்த்தமிழருக்கான நினைவுத் தூபியின் மாதிரிவடிவத்தை பிறம்ரன் பெருநகர் இன்று உத்தியோக பூர்வமாகப் பிரகடனப் படுத்திய பொன்னாள்.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியே தமிழ் இனப்படுகொலைக்கான நினைவாலயத்தை கனடா பிரம்ரன் மாநகரசபை உருவாக்க முன் வந்தமை மிகுந்த மன மகிழ்வைத் தருகின்றது. கனடாவின் புகழ் பூத்த பூங்காவான "செங்கூசி பூங்கா"வில் பிராம்ரன் நகரசபை இந்த நினைவாலயம் கட்டுவதற்கான நிலத்தை ஒதுக்கி தமிழ் மக்களுக்கு தந்துள்ளது: கோடை காலத்தில் லட்சோப இலட்சம் மக்கள் கூடுகின்ற அழகிய பூங்கா இது.

இந்த நினைவுச் சின்ன திட்ட வடிவமைப்பை மேயர் பற்றிக் பிறவுண் மற்றும் பிராம்ரன் நகரசபையின் பிராந்திய உறுப்பினர்களான மார்டின், பாற் வொற்னி, ஜெவ் போமன், கிரகம் மெக்ரிகோர் ஆகியோர் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றினார்கள்.

இந்த நினைவாலய வடிவமைப்பு உலகின் பல நூற்றுக் கணக்கான மாதிரிவடிவங்களில் இருந்துபோட்டியடிப்படையில் தகுதியானதை தேர்வானதாக்கிய வடிவாகும்.








இருபதாம் நூற்றாண்டில் நடந்து முடிந்த மிகப் பெரிய இனவழிப்பாக ஈழத்தமிழருக்கு நடந்தேறிய இனப்படுகொலை இருந்த போதிலும், அதனை இனவழிப்பு என்று ஐ. நா சபையும், மேற்குலக சமூகங்களும் இற்றைவரை இனப்படுகொலை என்று பேச மறுக்கின்றன.

இந்நிலையில் பிராம்ரன் மாநகரசபையின் தமிழ் இனத்திற்கான இந்த அங்கீகாரம் ஓர் வரப்பிரசாதம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

உலகில் இனவழிப்பில் சிக்குண்டவர்களென யூத, ருவாண்டா மற்றும் ஆர்மீனிய மக்களை அடையாளப் படுத்தி அவர்களுக்கு அங்கிகாரம் கொடுப்பவர்கள்; எம் ஈழத் தமிழ் மக்களின் பேரழிவைப்பற்றி பாராமுகமாக இருக்கிற இற்றைநாளில் இந் நிகழ்வு பெரு மகிழ்வு தருகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மகத்தான பெருவிழாவின் வரவேற்புச் சிறப்புரையை தமிழ் இனப்படுகொலை தூபி அமைக்கும் குழுவின் உப தலைவரும், கனடா ஒட்டாவா கால்ரன் பல்கலைக் கழகப் பொறியியல் துறை பேராசிரியர் சிவ சிவதயாளன் அவர்கள் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

இந்த நினைவாலயம் 12 அடி அகலமும், 18 அடி உயரமும் கொண்டதாக அமைய உள்ளது. உண்மையில் இதுதமிழரின் 12 உயிர்எழுத்துகளையும், 18 மெய்எழுத்துகளையும் உணர்த்தி நிற்கிற அழகிய தமிழின் அற்புதம். கார்திகை பூ வடிவமைப்பை மையமாக கொண்டு காலநிலை, மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு காரணங்களை கருத்திற் கொண்டு இதனை சிறப்பு கட்டிட நிபுணர் Ms. Bernia Ramic (from Bosnia) நேர்தியாக வடிவமைத்திருக்கிறார்.

தமிழர் தம் தேசத்தில் சிங்கள இனவெறியரசு நடத்திய நினைத்துப் பார்க்க முடியாத உயிர் இழப்புகளை கூட்டாக நாம் நினைவு கூர்வது புலம் பெயர் தமிழர்களாகிய எமது கடமையாகும்.

உலகளாவிய தமிழ் மக்களின் பங்களிப்புடன் கட்டியெழுப்பப்படும் இவ் தமிழ் இன அழிப்பு நினைவுத் தூபிக்கு உங்களனைவரின் நிதியுதவியினை தாராள மனதுடன் அளித்து பங்காளராவதற்கு:
https://tamilgenocidememorial.org/donation/





# இரண்டு ஜனாதிபதிகள்: ஒப்பீடும் வேற்றுமையும்

**- சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**

இந்தியாவில் ஜனாதிபதி அல்லது குடியரசுத் தலைவர் பதவி என்பது சம்பிரதாயமானது தான். நாட்டின் முதல் குடிமகன் என்கிற வகையில் அனைத்தும் மரியாதைகளும் அவருக்கே முதலில் அளிக்கப்படும். உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி, தேர்தல் ஆணையர், அரசுப் பணிகளுக்கான தேர்வாணைய குழுவின் தலைவர், மாநில ஆளுநர்கள் போன்று மத்திய அரசால் செய்யப்படும் அனைத்து நியமனங்களும் அவரது பெயரிலேயே நடைபெறும். பெயரளவில் அவரே முப்படைகளின் தலைமைத் தளபதியாகவும் இருப்பார். உலக வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் அதிபர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்யும் போது அவர்களை விமான நிலையம் சென்று வரவேற்று, விருந்தளித்து மரியாதை செய்வதும் அவரே. நாட்டின் வளர்ச்சி, சமூக மேம்பாடு, சிறந்த நிர்வாகம், கலை மற்றும் கலாச்சாரம், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு உயரிய விருதுகளை வழங்கி கௌரவிப்பது போன்ற பல பெருமைகள் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு உண்டு.

அவ்வகையில் இந்தியாவின் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவர் ஆளும் கட்சி அல்லது அவர்கள் சார்ந்திருக்கும் கூட்டணியைச் சேர்ந்தவராகவோ அல்லது அவர்களால் முன்மொழியப்படுபவர்களாகவே இருப்பார்கள். நேரடியான அரசியலில் இல்லாமல் ஆளும் கட்சியால் முன்மொழியப்பட்டு ஜனாதிபதியானவர் தமிழகத்தை நேர்ந்த அப்துல் கலாம். வாஜ்பாய் பிரதமராக இருந்த போது அவருக்கு அறிவியல் ஆலோசகராக இருந்தவர் கலாம். அதே போன்று இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக இருந்த கலாநிதி ராஜேந்திர பிரசாத்திற்குப் பிறகு யாரும் ஒரு பதவிக் காலத்திற்கு மேல் இருந்ததில்லை. அதேவேளை சர்ச்சையில் சிக்காத ஜனாதிபதிகளும் இல்லை. தத்துவக் கலாநிதி ராதாகிருஷ்ணன், இந்திய அரசியல் சட்டத்தில் முதலாவதாக ஆய்வை மேற்கொண்டு கலாந்திதி பட்டத்தைப் பெற்றிருந்த சங்கர் தயாள் சர்மா, ஐந்து ஆண்டுகள் பதவிக் காலத்தில் நான்கு பிரதமர்களை எதிர்கொண்டு அவர்களுடன் செயல்பட்ட ஆர் வெங்கட்ராமன் போன்றவர்களும் இந்திரா காந்தியின் கைப்பாவையாக இருந்தவர்கள் என்கிற விமர்சனத்திற்கு ஆளான வி வி கிரி, ஜெயில் சிங் போன்றவர்களும் குடியரசுத் தலைவர்களாக இருந்துள்ளனர். அதே போன்று 1969 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் கட்சியால் வேட்பாளராக நிறுத்தப்பட்ட நீலம் சஞ்ஜீவ ரெட்டி அக்கட்சியாலேயே தோற்கடிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது. அந்த தேர்தல் எப்படி இந்தியாவின் அரசியல் ஆட்சி அதிகாரத்தையே மாற்றியமைத்தது என்பது வரலாறு. காங்கிரஸ் கட்சி குறுக்காக பிளவுபட்டதும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மூத்த தலைவர்கள் பிரிந்து சென்று "மக்கள் கட்சி" என்று அறியப்பட்ட ஜனதா கட்சியைத் தோற்றுவித்ததும் அந்த தேர்தலில் பின்னணியிலேயே நடைபெற்றது.




ஒரு பெண் ஜனாதிபதியாக வரவேண்டும், அதன் மூலம் பெண்களின் வாக்குகளை கவரவேண்டும் என்பதால், முதல் நாள் வரை யாரென்றே அறியப்படாத பிரதீபா பாட்டிலை குடியரசு தலைவர் பதவிக்கான வேட்பாளாராக காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அறிவித்து வெற்றிபெறச் செய்தார். தற்போது குடியரசுத் தலைவராக இருந்து ஜூலை மாதம் பதவி விலகவுள்ள ராம்நாத் கோவிந்த் அவர்களும் பதவிக்கு வருவதற்கு முன்னர் நாடாளவில் பெரிதாக அறியப்பட்டவர் அல்ல.

எனினும், அவர்கள் அனைவருமே பெரும்பாலும் அரசியல் யாப்பின் மாண்பை மதித்து நடந்துள்ளனர். சம்பிரதாய நாட்டின் முதல் குடிமகன் என்ற பெருமை அவருக்கு இருந்தாலும், ஆட்சி அதிகாரம் அவரிடம் நேரடியாக இல்லாததால் அவரது எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க இயலாது. மிகவும் நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகள் ஏற்பட்டு, நாடாளுமன்றத்தில் ஆட்சி தொடர்பில் இழுபறி நிலை உருவாகி மிகவும் இக்கட்டான ஒரு சூழல் ஏற்பட்டால் மட்டுமே குடியரசு தலைவர் அரசியல் யாப்பின்படி நடவடிக்கை எடுக்க முடியும். நாட்டில் சிறுபான்மையினராக இருக்கும் முஸ்லிம் மற்றும் சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். காங்கிரஸ் கட்சியிலிருந்த இஸ்லாமியர்களாக ஜாகிர் ஹுசைன் மற்றும் ஃபக்ருதீன் அலி அகமது ஆகியோரும், சீக்கியரான சர்தார் ஜெயில் சிங்கும் இந்தியக் குடியரசின் தலைவர்களாக இருந்துள்ளனர். ஆனால் துரதிஷ்டவசமாக ஜாகிர் ஹுசைன் மற்றும் ஃபக்ருதீன் அலி அகமது ஆகியோர் தமது முழுமையான ஆட்சிக்காலத்தை நிறைவு செய்யும் முன்னரே உயிரிழந்தனர். எனினும் அப்துல் கலாம் தனது முழு ஆட்சிக் காலத்தையும் செவ்வனே நிறைவு செய்தார். அதே போன்று சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குடியரசு துணைத் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். நாட்டின் உயர்ந்த பதவிகளான உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, முப்படைகளின் தலைவர்கள் ஆகியவற்றிலும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்து சிறப்பித்துள்ளனர்.

தற்போது குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி பழங்குடி இனத்தைச் சேர்ந்த திருமதி திரௌபதி முறுமுவை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அவர் வெற்றி உறுதிசெய்யப்பட்ட ஒன்றாகவே தோன்றுகிறது. இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 2021 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி அவர்கள் சுமார் 12-13% இருப்பதாக அறியப்படுகிறது. இந்தியா விடுதலையடைந்து 75 ஆண்டுகள் ஆவதை நாடு கொண்டாடத் தயாராகிவரும் வேளையில், பழங்குடியினத்தைச் சேர்ந்த திருமதி முறுமு நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது பல்லின சமூக ஒற்றுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். மேலும் இந்தியாவில் மதச் சிறுபான்மையினர் மற்றும் பழங்குடிகளின் கூட்டுத் தொகையை எடுத்துக் கொண்டால் அது 30% மேல் இருக்கும்.



சரி, இதை இலங்கைச் சூழலுடன் ஒப்பிடுவோம். இந்தியா சுதந்திரம் அடைந்த அதே காலப் பகுதியில் தான் இலங்கையும் சுதந்திரம் பெற்றது. இந்தியாவைப் போல் இலங்கையிலும் மத மற்றும் மொழிச்சிறுபான்மையினர் குறைந்தது 25% மேலுள்ளனர். சரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுமாயின் இது மேலும் கூடுதலாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆனால் இதுவரை சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த யாரும் நாட்டின் உயர் பதவிகளில் அமர்ந்ததில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்த பிறகு, "நரி" ஜெ ஆர் 1978 ஆம் ஆண்டில் மிகவும் சர்ச்சைக்குரிய புதிய அரசியல் யாப்பை கொண்டுவரும்வரை நாட்டின் அதிபர் என்பவர் மகா-தேசாதிபதி அல்லது கவர்னர் ஜெனரல் என்றே அழைக்கப்பட்டார். சிறுபான்மைச் சமூகத்தினர் யாரும் எந்த உயர் பதவிக்கும் - ஏன் எதிர்க்கட்சித் தலைவராகக் கூட வந்துவிடக் கூடாது என்கிற உள்நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு சிறுபான்மையினருக்கு நிரந்தரமாக வைக்கப்பட்ட "ஆப்பாகவே" உள்ளது.




இந்தியாவில் இருப்பது போன்று துணை ஜனாதிபதி என்கிற ஒரு பதவி இலங்கையில் இல்லையென்றாலும் நாட்டின் ஆட்சியமைப்பில் இரண்டாவது அல்லது மூன்றாவது நிலையில் முக்கியப் பதவிகளில் சிறுபான்மையினர்கள் யாரையும் அமர்த்துவதற்கான வழிமுறைகளோ அல்லது மனமோ ஜனாதிபதி மற்றும் பிரதமர்களிடம் இருக்கவில்லை. அரசியல் யாப்பில் அப்படியான வழியில்லை என்றாலும், அதை ஒரு மரபாகக் கூட சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவில்லை. இதன் காரணமாக சிறுபான்மை மக்கள் ஆட்சி அதிகாரத்திலிருந்து திட்டமிட்டு ஒதுக்கப்பட்டு அவர்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகள் புறக்கணிப்படுவதற்கு நேரடியாகவே வழி வகுத்தது. பல சந்தர்ப்பங்களில் சிறுபான்மை கட்சிகளே இலங்கை அரசின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தின, அதன் மூலம் குறிப்பிட்ட கட்சிகளும் அதன் தலைவர்களும் பலனடைந்தனர். மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் அரசாங்கத்துடன் நின்ற சௌமியமூர்த்தி தொண்டமான், அவருக்குப் பிறகு ஆறுமுகன் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுக்கு கூட ஆட்சி அதிகாரத்தில் முக்கியமான இடமளிக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை.

அமைச்சரவை பொறுப்புகளில் மட்டுமின்றி உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, வெளியுறவு, பாதுகாப்பு, நிதி, வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாடு, தொழில்துறை போன்ற முக்கிய அமைச்சுகளில் செயலாளர் பதவிகளில் கூட சிறுபான்மை சமூகத்தினர் எப்போதவது அத்திபூத்தாற்போன்று இருந்துள்ளனரே தவிர முக்கிய பொறுப்புகளில் அமரவைக்கப்படவில்லை. பாகிஸ்தானில் கூட இல்லாத வகையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமது பேரினவாதக் கொள்கைகளை தக்கவைக்கவும், வாக்குவங்கி அரசியலை முன்னெடுக்கவும் முக்கியப் பதவிகளில் முன்னாள் படைத்தளபதிகளை அமர்த்தினர். இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு மிகத் தெளிவாக ஒரு செய்தி தொடர்ந்து சொல்லப்பட்டது, அதாவது. இது சிங்கள நாடு, இங்கு சிங்களவர்களின் ஆட்சிதான் நடைபெறுமென்று`. சிறுபான்மை மக்கள் ஆட்சி அதிகாரத்தில் புறக்கணிக்கப்படுவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் எந்தளவிற்கு பொறுப்போ அந்தளவிற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளும் கட்சிகளும் பொறுப்பு என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. குறுகிய நோக்கு கொண்ட சொந்த சுயநலன்களிற்காக தமது மக்களின் நலன்களை சிங்கள ஆட்சியாளர்களிடம் அடமானம் வைத்துவிட்டனர் என்கிற குற்றச்சாட்டு தொடர்ந்து நிலவி வருகிறது.

சிறுபான்மையினர் புறக்கணிப்பு என்பது இலங்கையில் அதிகாரபூர்வமாகவும் அதிகாரபூர்வமற்ற வகையிலும் ஒரு உள்ளார்ந்த பலவ-
னமாகவே இருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறைமை கொண்டுள்ள நாடுகளிடமிருந்து இலங்கை எதுவும் இதுவரை கற்றுக்கொள்ளவில்லை. அவ்வகையில் சிறந்த உதாரணங்களாகத் திகழும் அமெரிக்கா மற்றும் பிரான்ஸிடமிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும். நாட்டில் புதிய அரசியல் யாப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் நடைபெறும் வேளையில் சிறுபான்மைச் சமூகத்தை சட்டரீதியாக அனைத்து மட்டங்களிலும் உள்வாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள், குறிப்பாகத் தமிழர் தரப்பு, இது சிங்கள தேசத்திற்கான அரசியல் யாப்பு, தனி நாடே நிரந்திர தீர்வு என்கிற காணல் நீரிலிருந்து விடுபட வேண்டும். தமக்கான உரிமைகளை வென்றெடுக்க அவர்கள் இதயசுத்தியோடு செயல்படவில்லை என்பது யதார்த்தமான உண்மை. நாட்டிலிருக்கும் மக்கள் தொகையை ஒப்பிடும் போது தமிழ், முஸ்லிம் கட்சிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். இந்த கட்சிகள் தமக்குள்ளே அடித்துக் கொண்டு யார் பெரியவர்கள் என்பதற்காகப் போட்டியிட்டு தமது சமூகம் சார்ந்த நலன்களை முன்னெடுக்கவில்லை. "நீடித்திருக்கும் நிலையான அரசியல் தீர்வு" என்று மேடைதோறும் முழங்கி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது அவர்களை எதிர்ப்பதே தமது அரசியல் கொள்கை என்று இருக்கும் இதர தமிழ் அரசியல் கட்சிகளோ தமிழ் மக்களுக்கான தீர்வு இப்படியாகத்தான் இருக்க வேண்டும் என்று பொதுவெளியில் தெரிவித்து அவர்கள் முன்னால் அதை வைக்கவில்லை.



இனியாவது காலம் தாழ்த்தாமல், புதிய அரசியல் யாப்பில் சிறுபான்மை மக்களுக்கு உயர் பதவிகளில் ஒதுக்கீடு இருக்கும் வகையில் அதில் அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இந்தியா எமது "தாய் நாடு , தந்தை நாடு" என்று சவடால் பேசுவதையும், எமக்கான தீர்வு உள்நாட்டில் இல்லை அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் தான் உள்ளது என்பதையெல்லாம் கூறுவதைவிட்டு, அங்கிருக்கும் ஆட்சி முறைமையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்காவில் இருப்பதைப் போன்று ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் போட்டியிடும் போது, அவருடன் இணையாக சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் துணை ஜனாதிபதியாகப் போட்டியில் நிறுத்தப்பட வேண்டும் முறை, அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மாற்றப்பட்டு நாடாளுமன்ற ஜனநாயக முறை கொண்டுவரப்பட்டால், துணை ஜனாதிபதி அல்லது துணைப் பிரதமர் போன்ற பதவி சிறுபான்மையினருக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட புதிய அரசியல் யாப்பில் வழி செய்யப்பட வேண்டும். இதற்குச் சிறந்த உதாரணம் லெபனான் நாட்டின் அரசியல் யாப்பு. அதை நாட்டிலுள்ள மெத்தப்படித்த மேதாவிகள் வாசிக்க வேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

என்பதை இலங்கையிலுள்ள மூவின மக்களும் புரிந்து நடந்துகொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

# பழனிசாமிக்கு உற்சாக வரவேற்பு, ஓபிஎஸ் மீது பாட்டில் வீச்சு...

## 23 தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்ட அதிமுக பொதுக்குழுவில் நடந்தது என்ன?

நீதிமன்ற உத்தரவால் அதிமுக பொதுக்குழுவில் ஒற்றைத் தலைமை குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 23 தீர்மானங்களையும் பொதுக்குழு உறுப்பினர்கள் நிராகரித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, ஜூலை 11ம் தேதி மீண்டும் பொதுக்குழு கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.பொதுக்குழுவில் பழனிசாமிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கூட்டத்தில் இருந்து ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பாதியில் வெளியேறினர். அவர்கள் மீது தண்ணீர் பாட்டில், காகிதம் வீசப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.அதிமுகவில் அண்மையில் உள்கட்சித் தேர்தல் நடத்தப்பட்டு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகள் பட்டியலுக்கு கட்சியின் பொதுக்குழுவில் ஒப்புதல் பெற வேண்டும். இதற்காக கட்சியின் பொதுக்குழு கூட்டம் ஜூன் 23ம் தேதி நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனிடையே, அதிமுகவில் ஒற்றைத் தலைமை குறித்த விவகாரம் எழுந்தது. இதற்கு ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் எதிர்ப்பு தெரிவித்ததால் இரு தரப்பினரிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.இதனிடையே, பொதுக்குழுவுக்கு தடை கோரிய வழக்கை விசாரித்த தனி நீதிபதி, பொதுக்குழுவை நடத்த அனுமதி அளித்து நேற்று முன்தினம் இரவு உத்தரவிட்டார். இதையடுத்து, உடனடியாக ஓபிஎஸ் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அந்த மனு மீது இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, விடிய விடிய விசாரணை நடத்தியது. பின்னர், பொதுக்குழுவை நடத்தலாம். ஆனால், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 23 தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றலாம். மற்றவை குறித்து முடிவெடுக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தது.இந்நிலையில், சென்னையை அடுத்த வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி மண்டபத்தில் நேற்று காலை 10 மணிக்கு அதிமுக பொதுக்குழு தொடங்கியது.

பொதுக்குழுவுக்கு வந்த பழனிசாமிக்கு வழிநெடுகிலும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனால், காலை 11.20 மணிக்குதான் அவர் மண்டபத்துக்கு வந்தார். 11.30 மணிக்கு அவர் மேடைக்கு வந்ததும், ஓபிஎஸ்ஸும் மேடைக்கு வந்தார். தற்காலிக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் நடுவில் அமர்ந்திருக்க அவருக்கு வலதுபுறம் பழனிசாமி, கே.பி.முனுசாமி ஆகியோரும், இடதுபுறம் ஓபிஎஸ், ஆர்.வைத்திலிங்கம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். இரு தரப்பினரும் கடைசி வரை பேசிக்கொள்ளவில்லை. தற்காலிக அவைத் தலைவர் தமிழ்மகன் உசேனை பொதுக்குழு கூட்டத்தை நடத்தி வைக்கும்படி ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் முன்மொழிந்து பேச, இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி அதை வழிமொழிந்தார்.



தொடர்ந்து, பொதுக்குழு தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில், முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் அழைக்கப்பட்டனர். பொன்னையன் தீர்மானத்தை வாசிக்க வந்தபோது, குறுக்கிட்டு பேசிய முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், "அனைத்து தீர்மானங்களையும் இந்த பொதுக்குழு நிராகரிக்கிறது" என்று ஆவேசமாக பேசினார்.அதைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் பி.வளர்மதி வரவேற்புரை ஆற்றினார். துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி பேசும்போது, "தீர்மானங்களை அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் நிராகரித்துவிட்டனர். அவர்கள் வைக்கும் ஒரே ஒரு கோரிக்கை, ஒற்றைத் தலைமை வரவேண்டும் என்பதுதான். அடுத்து எப்போது பொதுக்குழு கூடுகிறதோ, அப்போது ஒற்றைத் தலைமைக்கான தீர்மானத்துடன் அனைத்து தீர்மானங்களும் நிறைவேற்றப்படும்" என்றார்.இதையடுத்து, முன்னாள் அமைச்சர் செம்மலை, இரங்கல் தீர்மானத்தை வாசித்தார். இதில், கட்சியின் மூத்த முன்னோடிகள், பாடகி லதா மங்கேஷ்கர், ஜெயலலிதா வீட்டில் பணியாற்றிய ராஜம்மாள் உள்ளிட்டோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அவைத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட தமிழ்மகன் உசேன் தலைமையுரை ஆற்றினார். அவரிடம் 2,190 பொதுக்குழு உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்ட கோரிக்கை மனுவை சி.வி.சண்முகம் வழங்கினார். அப்போது சி.வி.சண்முகம் பேசியதாவது:இரட்டை தலைமையால் கட்சிக்கு பின்னடைவுகள், சங்கடங்கள், நிர்வாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஆளும் திமுக அரசையும், கட்சியையும் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் இரட்டைத் தலைமையால் கடுமையாக எதிர்த்து செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், தொண்டர்களிடையே மிகப்பெரிய சோர்வு ஏற்பட்டுள்ளது.எம்ஜிஆர், ஜெயலலிதாவைப்போல வலிமையான, வீரியமான, தெளிவான ஒற்றைத் தலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே, இரட்டைத் தலைமையை ரத்து செய்துவிட்டு, ஒற்றைத் தலைமையின்கீழ் தொண்டாற்றுவது குறித்து விவாதித்து பதிவு செய்ய வேண்டும். அடுத்த பொதுக்குழுவுக்கான தேதியை முடிவு செய்து அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.இதுகுறித்து பேசிய அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், "பொதுக்குழு உறுப்பினர்களால் கையொப்பமிட்டு அளிக்கப்பட்ட ஒற்றைத் தலைமை குறித்த கோரிக்கையை ஏற்று, வரும் ஜூலை 11ம் தேதி காலை 9.15 மணிக்கு மீண்டும் பொதுக்குழு கூட்டம் நடக்கும்" என்று அறிவித்தார்.

அப்போது, மேடையில் இருந்த ஓபிஎஸ், வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன், ஜே.சி.டி.பிரபாகர் ஆகியோர் எழுந்தனர். முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி நன்றியுரை தெரிவித்த நேரத்தில், குறுக்கிட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஆர்.வைத்திலிங்கம், "சட்டத்துக்கு புறம்பான இந்த தீர்மானத்தை எதிர்த்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்" என தெரிவித்துவிட்டு அரங்கில் இருந்து வெளியேறிச் சென்றனர்.அப்போது, ஓபிஎஸ்ஸை வெளியேறும்படி பொதுக்குழு உறுப்பினர்கள் கோஷமிட்டனர். வெளியே சென்ற ஓபிஎஸ் உள்ளிட்டோர் மீது தண்ணீர் பாட்டில், காகிதங்கள் வீசப்பட்டன. அதில் ஒரு பாட்டில் ஓபிஎஸ் மீது விழுந்தது. இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது. எஸ்.பி.வேலுமணி நன்றியுரை ஆற்ற, அத்துடன் பொதுக்குழு நிறைவடைந்தது.பொதுக்குழுவையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. நீதிமன்றம் உத்தரவிட்டதன் அடிப்படையில் நடைபெற்ற அதிமுக பொதுக்குழுவில் எந்த தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 23 தீர்மானங்களும் நிறைவேற்றப்படாத நிலையில், பொதுக்குழு உறுப்பினர்கள் கோரிக்கை அடிப்படையில், ஒற்றைத் தலைமைக்காக மீண்டும் பொதுக்குழுவை கூட்ட பழனிசாமி தரப்பு முடிவெடுத்துள்ளது. இதனிடையே, இந்த நடவடிக்கை செல்லாது என ஓபிஎஸ் தரப்பு தெரிவித்துள்ளது.ஓபிஎஸ் டெல்லி பயணம்அதிமுக பொதுக்குழு முடிந்த நிலையில், ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், அவரது மகன் ஓ.பி.ரவீந்திரநாத், வழக்கறிஞரும், எம்எல்ஏவுமான மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட 5 பேர் நேற்று இரவு விமானத்தில் டெல்லி புறப்பட்டுச் சென்றனர். அதிமுகவில் ஏற்பட்டுள்ள ஒற்றைத் தலைமை சர்ச்சை, பொதுக்குழுவில் நடந்த நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு தீர்வுகாண தேர்தல் ஆணையத்தை அணுக ஓபிஎஸ் தரப்பு திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.டெல்லி புறப்பட்ட ஓ.பன்னீர்செல்வம், முன்னதாக செய்தியாளர்களிடம் கூறும்போது, "குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் திரவுபதி முர்மு நாளை (இன்று) வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார். அதில் பங்கேற்க வேண்டும் என்று பாஜக நிர்வாகிகள் அழைத்துள்ளனர். அதற்காக டெல்லி செல்கிறேன்" என்றார்

# திமுகவை அழிக்க நினைத்தவர்கள் அழிந்தார்கள்: திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



'திமுகவை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போயிருக்கிறார்களே தவிர திமுக அழிந்ததாக வரலாறு கிடையாது' என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரனின் பேத்தி தீப்தி வஷ்வக்சேனா ஆகியோர் திருமணம், சென்னை திருவான்மியூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடந்தது.

திருமணத்தை நடத்தி வைத்து முதல்வர் பேசியதாவது:இந்த பெரிய மண்டபத்தில் நம் வீட்டு திருமணம்போல் எண்ணி நாம் பங்கேற்றுள்ளோம். இன்னொரு பக்கம் திருமண மண்டபத்தில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். அந்தப் பிரச்சினைக்குள் எல்லாம் போக விரும்பவில்லை. அதில் நாம் தலையிட அவசியமே இல்லை. அவர்கள்தான் நம்மை அழிக்க முடிவெடுத்துள்ளார்களாம். திமுகவை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போயிருக்கிறார்களே தவிர, திமுக அழிந்ததாக வரலாறு கிடையாது.

இந்த திருமணம் ஓர் சீர்திருத்த திருமணமாக, 'திராவிட மாடல்' திருமண விழாவாக நிறைவேறியிருக்கிறது. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், இருக்கிற இடத்தில் எப்போதும் விசுவாசமாக, நன்றி உணர்வோடு இருந்து பணியாற்றுபவர். எம்ஜிஆர் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர். முன்னாள் முதல்வர் கருணாநிதியின் அமைச்சரவையிலும், இப்போது என் தலைமையிலான அமைச்சரவையிலும் அமைச்சராக இருக்கிறார் என்றால் எந்த அளவுக்கு அவர் தன்னை பொதுப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் என்பது தெரியும்.மருது சகோதரர்கள் போல்அவர் அதிமுகவில் இருந்து விலகி திமுகவில் இணைந்து பணியாற்றியபோது, தங்கபாண்டியன் மறைவுக்குப் பிறகு அந்த மாவட்டத்துக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின், கட்சியின் வளர்ச்சிக்காக மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்ட போது ஒரு பகுதிக்கு தங்கபாண்டியன் மகன் தங்கம் தென்னரசுவும் மற்றொரு பகுதிக்கு கே.கே.எஸ்.எஸ்.ஆரும் மாவட்டச் செயலாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். இருவரும் பெரிய மருது, சின்ன மருதுபோல் விளங்குகின்றனர். கே.கே.எஸ்.எஸ்.ஆரின் மருமகன் அருண்குமார், என் வீட்டின் அருகில் வசிக்கிறார். அவர் அடிக்கடி என்னிடம் பேசுவார்.எங்கெங்கு சரியில்லை, எங்கு நன்றாக இருக்கிறது என்றெல்லாம் தெளிவாக சொல்வார். அவர் சொல்லக்கூடிய கணக்கு சரியாக இருக்கும். தேர்தல் நேரத்தில்கூட, இந்த இடம் சரியில்லை, இந்த இடம் கொஞ்சம் சுமாராகத்தான் இருக்கிறது. கொஞ்சம் கவனியுங்கள் என்று சொல்லிவிட்டுச் செல்வார். எதையும் சரியாகச் சொல்வார். அவர் சொல்லும் சினிமாவைக்கூட தட்டாமல் நான் பார்த்துவிடுவேன். அந்த அளவுக்கு எதையும் எடைபோட்டு பேசக்கூடியவர்.

மணமகள் தீப்தி, கே.கே.எஸ்.எஸ்.ஆருக்கு மட்டும் பேத்தியல்ல; எனக்கும் பேத்திதான். என் தாயார் தயாளு அம்மாளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு, லண்டனுக்கு அழைத்துச் சென்றபோது அருகில் இருந்து எல்லா சிகிச்சைகளுக்கும் துணை நின்றவர் அருண்குமார். அதை என்றைக்கும் மறக்க மாட்டேன். அதனால்தான் கொஞ்சம் உடல் நலிவுற்று ஓய்வில் இருந்தாலும், இந்த திருமணத்துக்கு எப்படியும் வரவேண்டும் என வந்துள்ளேன். இவ்வாறு முதல்வர் பேசினார்.



# இலங்கைக்கு இப்போதைக்கு மீட்சி இல்லை

- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

“இலங்கையின் பொருளாதாரம் முழுமையான வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது” என்பது பரமரகசியமல்ல. 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற கோதாபய ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெருமான்மையைப் பெற்ற ராஜபக்ஷக்களும் அவர்களுடன் இணைந்த ஆளும் வர்க்கத்தினரும் “தோற்றுப் போன அரசை” - 'Failed State' - ஆணை வழங்கிய மக்களுக்கு பரிசாக வழங்கியுள்ளனர்.

“தோற்றுப் போன அரசை“ வழங்கிய நிலையிலும் “மக்கள் ஆணையை கேடயமாக்கி” தொடர்ந்தும் ஆட்சியில் அமர்ந்துள்ளனர்.

இடைக் கால சர்வ கட்சி அரசாங்கத்திற்குப் பதிலாக அரசியலில் முகவரியற்றிருக்கின்ற ரணில் விக்ரமசிங்கவை பிரதம மந்திரியாக்கி “பொம்மலாட்ட அரசியலை” ராஜபக்ஷக்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். மொத்தத்தில் மக்களின் நம்பிக்கையை இழந்தவர்கள் அரசியலை நடத்துகின்றனர் என்று கூறுவதே பொருந்தும்.

தென்னிலங்கை மக்களுக்கு வேறு தெரிவு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது இருக்கும் தலைமைகளே மீண்டும் மேலெழும்ப முயற்சிக்கின்றன.

இந்தத் தலைமைகள் ராஜபக்ஷக்களுக்கு பதிலீடாகப் பார்க்கப்படுகின்றனவேயொழிய சரியான பாதையில் நாட்டை இட்டுச் செல்பவர்களாக இல்லை.

இன்றைய நெருக்கடிகள் என்பது “சுதந்திர இலங்கையின் சிங்கள பௌத்த தேசிய அரசியல்வாதிகளினால்” உருவாக்கப்பட்டவை.

தமிழ் மக்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட அரசு: அரச இயந்திரம்: அரசியல்வாதிகள் என அனைத்துமே தமிழர்களை அழிக்கவே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவு சகல துறைகளிலும் சிங்கள இனத்தின் போஷிப்பவர்களாக மாறினர்.

இன்றைய நெருக்கடிகளுக்கு ராஜபக்ஷக்களும் அவர்கள் சார்ந்தவாகளினதும் ஊழல் மோசடிகள் கொள்ளைகள் ஓரங்கமாக இருந்த போதும் அதிகாரப் பகிர்வில் தமிழ் மக்களுடன் எந்தவிதத்திலும் சமரசத்திற்கு வரமறுத்ததன் நிலைப்பாடும் காரணமான அமைந்தது. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரங்கள் சொத்தழிவுகள் பிரகடனப்படுத்தப்பட்ட போர் என்பன தமிழ் மக்களை மாத்திரம் தின்று தீர்க்கவில்லை இலங்கையின் பொருளாதாரத்தையும் இரையாக்கிக் கொண்டது.

ஆனால் இன்றும் இனவாதம் பேசும் அரசியல்வாதிகள் நீதிமன்ற தீர்ப்புக்கள் சிங்கள மக்களால் மீறப்படலாம் என்றும் தெரிவிக்கின்றனர்.

எனவே தென்னிலங்கை எதிர்பார்க்கின்ற அரசியல் மாற்றங்கள் தற்போதைய ஆளும் வர்க்கத்திற்கு சார்பானதாக சற்று முன்னேற்றகரமானதாக அமையும் என்பதைத் தவிற பெரிதாக எதிர் பார்ப்பதற்கு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு இனக் கலவரம் ஒன்றுக்கு அடித்தளமிடுவதற்கான முஸ்தீபுகளும் தென்னிலங்கை அரசியலில் காணக் கூடியதாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

குருந்து மலை விவகாரம் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி நடத்தப்படுவதன் நோக்கம் அதுவாகவேத் தெரிகின்றது. குறிப்பாகக் கூறுவதாயின் மீண்டும் இனவாதத்தைக் கையில் எடுத்து அரசியலில் ராஜபக்ஷக்களும் அவர்களின் அணி சார்ந்தோரும் தம்மை நிலை நிறுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

மறுபுறம் புலம் பெயர் தமிழர்களின் டொலர்களை இலங்கையின் பொருளாதாரத்தின் மீட்சிக்காக கையேந்தும் நிலையிலும் தமிழர் விவகாரத்திற்கான தீர்வு குறித்து கிஞ்சித்தேனும் கரிசனை கொள்ளும் நிலையில் தென்னிலங்கை அரசியல் தலைமைகளோ மக்களோ இல்லை. தமிழர் விவகாரத்தை தென்னிலங்கை அரசியலில் பேசு பொருளாக்க எந்த சக்தியும் முன்வரத் தயாராக இல்லை. ஆனால் இன்றைய நெருக்கடிகள் குறித்து நிறையவே பேசப்படுகின்றன.

உணவு நெருக்கடியானது எதிர்காலத்தில் 4 மில்லியன் முதல் 5 மில்லியன் இலங்கையர்களை நேரடியாகப் பாதிக்கக் கூடும் என்றாலும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

- எரிபொருள் மற்றும் பால் விலை இரண்டும் சுமார் 400% அதிகரித்துள்ளது.
- நேர்மை சுயநலமின்மை மற்றும் சட்டத்தை மதிக்கும் அரசியல்வாதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட அரசியல் கலாச்சாரம் கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாக இலங்கைக்கு அரசியல் இருக்க வேண்டும்.
- மத்திய வங்கியின் கூற்றுப்படி பணவீக்கம் 33 வீதம் ஆகவும் உணவுப் பணவீக்கம் 45 வீதத்துக்கும் அதிகமாகவும் உள்ளது.
- அடுத்த சில மாதங்களில் மக்கள் உயிர்வாழ முடியாமல் போகும் அபாயம் உள்ளது.
- எரிபொருள் மற்றும் பால் விலை இரண்டும் சுமார் 400 வீதம் அதிகரித்துள்ளது.
- பொருளாதார மறுமலர்ச்சிக்கு அரசியல் ஸ்திரத்தன்மை முக்கியம். அது இன்னும் இலங்கையில் தோற்றுவிக்கப்படவில்லை.
- இந் நிலையில் தோற்றுப்போன அரசை வைத்துக் கொண்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களால் நாட்டை மீட்டெடுக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.
- சாதாரண உடை தரித்த படைத்தரப்பினர் மற்றும் புலனாய்வுாளர்களின் அதிகரித்த பிரசன்னம் காரணமாக “கோதா கோ கம” நோக்கிய பொது மக்களின் நகர்வுகள் குறைவடைந்திருந்தது. தீர்வின்றி தொடரும் பிரச்சனைகளால் மக்கள் மீண்டும் “கோதா கோ கம” நோக்கி படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். இது தென்னிலங்கை அரசியல் களம் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டதையேக் காட்டுகின்றது. இது ஆட்சியாளர்களை மீண்டும் கிலி கொள்ள வைத்துள்ளதுடன் குருந்து மலை விவகாரம் மற்றும் தமிழர் பகுதிகளில் காணி அபகரிப்பு என தென்னிலங்கையின் கவனத்தை திசை திருப்ப முயற்சிக்கின்றனர்.
- மொத்தத்தில் இலங்கைக்கு இப்போதைக்கு மீட்சி இல்லை.

Email : vathevaraj@gmail.com

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் நிபந்தனை



கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு கடன் வழங்கும் திட்டங்களில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் உயர்மட்ட அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அனைத்து பரிவர்த்தனைகளிலும் சட்டத்தின் ஆட்சி, பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாச்சாரம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திற்கு (IMF) சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மே மாதம் இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் தொழில்நுட்ப கலந்துரையாடல்களை முன்னெடுத்த, பிரதிநிதிகள் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யும் என சர்வதேச நாணய நிதியம் (IMF) அண்மையில் அறிவித்துள்ளது.

தொலைநோக்குப் பார்வையற்ற பொருளாதாரக் கொள்கைகளால் மீள செலுத்த முடியாத இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் புதிய கடன்களைப் பெறுவதற்கு கோட்டாபய - ரணில் கூட்டணி அரசாங்கம் நம்புகிறது.

கடன்களை மீளச் செலுத்தும் திட்டங்களை உருவாக்கும் போது ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீங்கு விளைவிக்காமல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும், சர்தேச நாணய நிதியத்தின் முன்னைய அறிக்கையை நினைவுகூர்ந்த சர்வதேச மன்னிப்புச் சபை, அந்த அறிக்கையை உண்மையாக்கும் வகையில் செயற்பட வேண்டிய பொறுப்பை கொழும்பு வதிவிடப் பிரதிநிதியிடம் வலியுறுத்தியுள்ளது.

“இந்த கடினமான காலங்களில் மேற்கூறிய வாக்குறுதிகள் உண்மையான மற்றும் பயனுள்ள பாதுகாப்பாக மாற வேண்டுமானால், சர்வதேந நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படும் எந்தவொரு எதிர்கால பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமும் மனித உரிமை மையமாக இருக்க வேண்டும்” என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா கூறியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் நிறுவனமான சர்வதேச நாணய நிதியம் உறுதிபூண்டுள்ளது என மன்னிப்புச் சபை குறிப்பிடுகிறது.

இதற்கமைய மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு விரோதமான எந்தவொரு கொள்கையிலும் அல்லது திட்டத்திலும் முதலீடு செய்வதைத் தவிர்க்க வேண்டும் என மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

“கடன் வாங்கும் அரசாங்கத்திற்குள் மனித உரிமைகளை மீறும் அல்லது எதிர்காலத்தில் மீறும் நடவடிக்கைகள் அல்லது திட்டங்களில் முதலீடு செய்யக்கூடாது. அதேவேளை, கடன் வாங்கும் நாடுகள் தங்கள் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றும் திறனை சமரசம் செய்யாமல் வெளிநாட்டுக் கடனைத் மீளச் செலுத்தும் திறனைக் கொண்டுள்ளன என்பதில் கடன் வழங்குபவர்கள் திருப்தி அடைய வேண்டும்”.

500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான காற்றாலை மின்சாரத் திட்டத்தை வடக்கில் சர்ச்சைக்குரிய இந்தியாவின் அதானி குழும நிறுவனத்திற்கு வெளிப்படையான டெண்டர் கோராமல் இலங்கை வழங்கியதற்கு எதிராக கொழும்பில் உள்ள போராட்டக்காரர்கள் தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர்கள் ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவித்ததுடன், மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படும் பாதிப்பினால் தமது வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படும் என எச்சரித்தனர்.

இலங்கையுடனான பொருளாதார, சமூக மற்றும் நாணயக் கொள்கை சீர்திருத்தம் தொடர்பான அனைத்து உடன்படிக்கைகளும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொது ஆய்வுக்கு உட்பட்டவை என்பதை உறுதிப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியத்தின் கொழும்பில் உள்ள கொழும்பு பிராந்திய பிரதிநிதியிடம் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மேலும் கோரியுள்ளார்.



# Discover the flavour of a legendary Sinha Stout from the exotic island of Sri Lanka




Lions have fascinated mankind since time immemorial. They form an integral symbol of strength and clan identities for tens of thousands of years. The mystery and allure of the king of the jungle pervaded civilizations for centuries and in the late 19th century, deep within central Sri Lanka, British explorer, Sir Samuel Baker, discovered a lion that would one day enliven palates around the world – but, it remained a secret.

Whilst on a hunting trip in the cool climes of Sri Lanka's (then Ceylon) salubrious central hills of Nuwara Eliya, situated 6000 feet above sea level, legend says Baker took aim at a magnificent stag in the distance. Baker hit his target, and as he strode to retrieve his price, he was struck with awe at the beauty and abundance that surrounded him including a sparkling spring flowing down to the lake below. There, Sir Samuel Baker set up what would become the Ceylon Brewery in 1881.

Since then, the Ceylon Brewery – now Lion Brewery (Ceylon) PLC,– produced golden brews that for long remained some of the best kept secrets from the rest of the world. Visitors to the golden isle and its dwellers savoured the exclusive flavours for decades, before Lion ventured out to the world in 1981 – more than a century after its inception.




Upon its discovery by global beer connoisseurs, its flagship product, Lion Lager, is now exciting drinkers around the world. With a unique flavour stemming from its century-old recipe, Lion Lager is now available at selected Beer Stores under the brand name Sinha Lager in Canada. The beer is available in 6 packs and retails for $17.45 for a 6 pack.

But the jewel in the crown of this King is its famous Stout – the indisputable king of dark beers. Lion Stout, known as Sinha Stout in Canada, is for long considered the best kept secret in beer. The traditional dark stout comes with sweet notes of chocolate, toffee, mocha, caramel and roasted barley, and trapped by its dense creamy head offers drinkers a burst of flavour that keeps them coming back for more.

The late Beer Hunter, Michael Jackson, officially endorsed this Stout as 'the best in the world'. During a visit to Sri Lanka, in 1986 to track down this cask-conditioned stout, Jackson savoured this legendary beer and fell in love with it immediately. This was definitely 'love at first sip'. What adds a real tang to this tale is that Jackson did not seek any form of compensation for his endorsement or review – he loved it so much.

It's difficult to detail the richness of a Sinha Stout. It is a flavour that must be indulged for a palatal experience that is unparalleled. Over the years Sinha Stout has earned the privilege of converting countless lager faithful towards dark beer, and it is all down to the most unique and rich flavour of this beer – what was once the best kept secret in beer. Now that the secret is out, it is waiting to be discovered by Canadian beer enthusiasts. Sinha Stout is available at selected LCBO outlets around Ontario.

Tipplers love this Stout. So-muchso, it enjoys a 97-99 rating on ratebeer.com and has acquired a loyal consumer base in many European markets for its distinct taste profile. It's not just the consumers, even quality agencies love Lion/Sinha Stout, winning multiple Gold Awards continuously from the prestigious Monde Selection over several years. The Lion Brewery works in partnership with Carlsberg AG, and is compliant with the latter's Global Quality Management System.

It happens it was a cocktail competition that drew the late Beer Hunter Michael Jackson to Sri Lanka back in the day. Sinha Stout was used in the competition, and mixing was evidently popular from the olden days. Jackson recounts his experience as below.

"The (Lion) brewery's principal product is lager, but it made a pale ale until the 1960s, and it still produces a stout. This pattern is typical in former British colonies. As golden lagers became more popular, the bronze or copper "middle" color vanished, but a black porter or stout survived for those who wanted something truly dark. All beers were stronger in colonial times, and these old black brews typically had between 6.0 and 9.0 per cent alcohol by volume.

Sinha Stout, a wonderfully sweet but assertive tropical gem, is bringing the rich heritage of Sri Lankan flavour to Canada's discerning drinkers. This legendary dark beer is presently served in 26 countries, brewed untouched by hand using nothing but the finest ingredients from around the world said Stefan Atton, Vice President International Business for Lion Brewery (Ceylon) PLC. True to the nation's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence. In Sri Lanka, the company represents brands from Carlsberg, Diageo, Brown-Forman, AB InBev and Warburn demonstrating its commitment to working with world-leading brands and serving nothing but the best.

Sinha Stout is a favourite on Sri Lanka's golden sun-bathed beaches, and even in the cool climes of the hills within which it was discovered. It is a beer that keeps connoisseurs coming back for more, with its soft, fresh and extraordinary chocolatey mocha character. Reach out for a Sinha Stout, a beer that is exotic as the island within which it was born.

Enjoy the best kept secret.

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்
2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை
ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.
Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick
ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.



- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே
3 to 4 Star Hotel or Motel
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
சொகுசு பேருந்து தங்குமிட வசதி காலை உணவு பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்
சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
Contains: Barley, Sulphites
Contient : Orge, Sulfites
SINHA
LAGER
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
SINHA
1881
SINHA
LAGER
IMPORTED
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

# MORTGAGES & REFINANCES

## WE WILL GET THE MORTGAGE FOR

- LOW INCOME
- BAD CREDIT
- CONSUMER PROPOSAL



அனைத்துவிதமான
மோட்கேஜ்
தேவைகளுக்கும்,
ஆலோசனைகளுக்கும்
அழையுங்கள்!

## PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS



WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU

**Shan Thayaparan**
Mortgage Architect M08009140

MORTGAGE ARCHITECTS

416-826-7426
shan@shan123.com

# சனாதிபதி கோட்டாபய இராசபக்சாவை வீட்டுக்கு அனுப்புவது தலையிடிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது!

**- கனடா நக்கீரன்**

சாத்தான் வேதம் ஓதுகிறது என்பார்கள். ஜெனிவாவில் யூன் 13, 2022 அன்று நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 50 ஆவது அமர்வில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றினார்.

பேராசிரியர் காமினி இலக்ஷ்மன் பீரிஸ் தற்போதைய அமைச்சரவையில் மிகவும் புத்திசாலித்தனமான உறுப்பினர் ஆவர். இன்றைய நாடாளுமன்றம் பெரும்பாலும் தண்டனை பெற்ற குற்றவாளிகள் மற்றும் ஒழுக்கக் குறைவானர்களால் நிரப்பப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சர் பீரீஸ் இலங்கைக் குடியரசின் வரலாற்றில் அமைச்சரவைப் பதவியை வகிக்கும் மெத்தப்படித்த, சிறந்த கல்வியறிவு பெற்ற ஒரு சிலரில் இவரும் ஒருவர் ஆவர். நாற்பது அகவைக்குள் ஒக்ஸ்போர்டுக்கு றோட்ஸ் அறிஞர் **(Rhodes scholar to Oxford),** கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டத் துறைத் தலைவர்.



ஆனால் அரசியலில் அமைச்சர் பீரீஸ் ஒரு பச்சோந்தி என அவரது அரசியல் எதிரிகள் கருதுகிறார்கள். அவருக்கு அமைச்சர் பதவி-தான் முக்கியம். அமைச்சர் பதவி கொடுத்தால் போதும் ஆட்சிக்குப் போற்றி பாடுவார். பதவி இல்லை என்றால் தூற்றிப் பேசுவார். 2015 இல் சிறிசேன - இரணில் விக்கிரமசிங்க அணி தேர்தலில் வெற்றிபெற்று நல்லாட்சி அமைச்சரவை அமைத்தபோது அதில் சேர்ந்து அமைச்சர் பதவி பெற பெருமுயற்சி எடுத்தார். நல்லாட்சி அரசு அவரைக் கண்டுகொள்ளவில்லை. உடனே எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டார். சிறிலங்கா பொதுசன பெரமுன முன்னணியின் உருவாக்குவதில் அமைச்சர் பேராசிரியர் பீரீஸ் அவர்கட்குக் கணிசமான பங்குண்டு.

கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் பீரீஸ் ஜெனிவாவுக்குச் சென்றிருந்தபோது அவரது குணாம்சங்கள் அப்பட்டமாகத் தெரிந்தன. ஐரோப்பிய நகரத்திற்கு மேற்கொண்ட பயணத்தில், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாட்டின் மனித உரிமைகள் பற்றிய அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் சொத்தை வாதத்தை பேரவையில் முன்வைத்தார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், முன்னைய சந்திப்பின் பின்னர், இலங்கை பல முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

”இந்தப் பேரவையின் கடைசி அமர்வுக்குப் பிறகு, மார்ச் முதல் யூன் 2022 வரை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்” என்றார்.

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் வலியுறுத்தப்பட்ட விடயங்களில் பின்வரும் விடயங்கள் பற்றித் தனது உரையில் குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை எண் 1 இன் கீழ் நியமிக்கப்பட்ட தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. தற்போது 318 தனிநபர்கள் மற்றும் 04 அமைப்புக்கள் பட்டியலில் இருந்து நீக்க முன்மொழியப் பட்டுள்ளது. இது ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் **(ONUR)** நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் அதன் ஆணையைத் தொடர்கிறது.



நிலையான வளர்ச்சி இலக்குகளைப் **(SDGs)** பொறுத்தவரை, நிலையான வளர்ச்சி இலக்கு 16 **(SDG16)** உட்பட இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி அறிக்கை 2021 இலங்கையை 87வது இடத்தில் (165 நாடுகளில் **SL** இன் உலகளாவிய தர-வரிசை 7 நிலைகளால் அதிகரித்துள்ளது) வைத்துள்ளது மற்றும் நாட்டிற்கு ஒட்டுமொத்த தரவரிசை 68.1 வழங்கப்பட்டுள்ளது, இது பிராந்திய சராசரியை விட அதிகமாக உள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் **(OMP)** அதன் சரிபார்ப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக விசாரணைக் குழுவிற்கு அழைக்கப்பட்ட 83**%**க்கும் அதிகமான நபர்களை சந்தித்துள்ளது.

இழப்பீடுகளுக்கான அலுவலகம் **(OR)** தற்போதைய பொருளாதாரத் தடைகள் மத்தியிலும், ஆண்டுக்கான இழப்பீடு வழங்குவதற்காக அதன் தொடக்க ஒதுக்கீடான ரூ.759 மில்லியனுடன் கூடுதலாக ரூபா 53 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

மோதலின் முடிவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 92**%** க்கும் அதி-கமான தனியார் நிலங்கள் முறையான உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. கடைசியாக எஞ்சியுள்ள 8,090 இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றங்களுக்கு பல குற்றப்பத்திரிகைகளை அனுப்பியுள்ளதோடு, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

புலம்பெயர் சமூகத்துடனும், எமது நாட்டின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவில் சமூக அமைப்புகளுடனும் ஈடுபடுவதற்கு இலங்கை திறந்த மனதோடு உள்ளது.

அமைச்சர் பீரீஸ் அவர்களின் உரையைப் படிப்பவர்களுக்கு ”பேசுப் பல்லக்கு தம்பி கால்நடை” என்ற பழமொழி நினைவுக்கு வரும். இதில் இரண்டு விடயங்கள் தமிழ்மக்கள் தொடர்பானது.

**(தொடர்ச்சி 23 பக்கம்)**






# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




---

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**

**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**

*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**

*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**

**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**

www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# நீங்காத நினைவுகள் ... நிகழ்வு




கடந்த 16.06.22 அன்று ஜேர்மனி டோட்முண்ட் நகரில் உள்ள தமிழ் அரங்கம் மண்டபத்தில், பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினரால், மேற்படி ஒன்றியத்தில் தமிழுக்காய் தொண்டாற்றிய காலஞ்சென்ற திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களுக்கும், திருமதி. நிவேதா மோகன்ராஜ் அவர்களுக்கும் நீங்காத நினைவுகள் என்று தலைப்பிட்டு அவர்கள் இருவரும் பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துடன் இணைந்தாற்றிய பணிக்காக நினைவு கூர்ந்து ஒரு நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்தியிருந்தனர்.

கவிஞையும், தமிழாலய ஆசிரியையுமான திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள் பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், அதன் ஊடகவியலாளராகவும் சிறப்பாக தொண்டாற்றியவர். அத்துடன் அவர் அன்ரனா றூக என்ற வானொலியின் தமிழ்ப் பிரிவின் அறிவிப்பாளராகவும் இருந்தவர்.



பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின், உட்பிரிவான இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்துக்கு பொறுப்பாளராக இருந்து இளஞ்சூரியன் என்ற பெயரில் மூன்றுமாதத்துக்கொருமுறை அச்சஞ்சிகையை வெளியிட்டதுடன், ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து விழாக்களையும் இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்தின் இளந்தலைமுறையினரே சிறப்பாக நடத்தி வைத்தமைக்கு திருமதி. நிவேதா மோகன்ராஜ் அவர்களே காரணகர்த்தாவாகவும் இருந்தார். இவர் ஒரு பாடகி என்பதுடன் தமிழாலய ஆசிரியையுமாவார்.

இவ்விழாவினைப் பன்னாட்டு புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு.வி.சபேசன் ஆரம்பித்து வைத்து ஆரம்ப உரையாற்றினார்.

திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களின் உருவப்படத்துக்கு முல்கைம் நகரைச் சேர்ந்தவரும், திரு.திருமதி. சொர்ணலிங்கம் கோசல்யா தம்பதிகளின் நண்பருமாகிய திரு. புஸ்பகாந்தன் (முல்கைம் கண்ணன்) அவர்களும், திருமதி. நிவேதா மோகன்ராஜ் அவர்களின் உருவப் படத்துக்கு, அவரின் பெற்றோரான திரு.திருமதி. புவனேஸ்வரன் தம்பதிகள் ஆகியோர் முதன்மை தீபத்தை ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து சபையோர் அனைவராலும் தீபாஞ்சலியும் மலராஞ்சலியும் செய்யப்பட்டன.




அகவணக்கத்தில் தமிழீழ விடுதலைக்காக போராடிய அனைத்து போராளிகள், திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள், திருமதி. நிவேதா மோகன்ராஜ் அவர்கள், திரு. திலகேஸ்வரன், திரு. தியாகேஸ்வரன், திரு. ஜெகநாதன் ஆகியோருக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நினைவு விழாவில், ஒன்றியத்தின் தலைவர் திரு. வி.சபேசன், செயலாளர் ஏலையா க.முருகதாசன், ஒன்றியத்தின் கௌரவ அவைத் தலைவர் திரு. சு.பாக்கியநாதன், ஒன்றியத்தின் பொதுக்குழு உறுப்பினரும் பண்ணாகம் இணையத்தள ஆசிரியருமாகிய திரு. இ.க. கிருஸ்ணமூர்த்தி, தமிழருவி என்ற பத்திரிகையை வெளியிட்டவர்களும், இப்பொழுது தமிழருவி வானொலியை நடத்திக் கொண்டிருப்பவர்களுமாகிய திரு. திருமதி.நயினை விஜயன் சசிகலா தம்பதிகள், ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தலைவரும் ஆசிரியருமாகிய திரு. பொ. சிறீஜீவகன், இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்தில் உறுப்பினராக இருந்த சுதர்சினி கெந்தீஸ்வரன், திரு. மோகனதாஸ், ஊடகவியலாளர் திரு. முல்லை மோகன், என்னப்பெற்றால் நகரத்தில் இயங்கிவரும் சர்வோதயத்தின் தொடர்பாளர் திரு. க. மகாலிங்கம், ஜேர்மனி டோட்முண்ட் நகரில் தமிழர் வரலாறு என்ற நூலை எழுதிய திரு. நா. அன்னராசா ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

உரை நிகழ்த்திய அனைவருமே திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களினதும், திருமதி. நிவேதா மோகன்ராஜ் அவர்களினதும் படைப்பிலக்கிய ஆற்றல் பற்றியும், பன்முக ஆளுமை பற்றியும் நெகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் அவரவர் பார்வையில் நின்று உரையாற்றினார்கள். அவர்கள் இருவரும் விட்டுச் சென்ற இடத்தை அவர்களல்லாத எவராலும் இட்டு நிரப்ப முடியாது என்பதை ஊன்றித் தமதுரையில் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வில் திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களால் அன்னை பூபதி பற்றி எழுதிய கவிதையை ஒல்லாந்து நாட்டில் உள்ள பாடகர் திரு. விஜயன் அவர்களால் பாடபட்டு அதனை திரு. வி. சபேசன் ஒழுங்கமைத்த கணொளி இவ்விழாவில் காட்சிப்படுத்தப்பட்டது. ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கிணங்க இதனை ஒருங்கிணைத்தவர் பாடகர் திரு. முல்லைசசி அவர்கள்.

**செய்தியாளர்: ஏலையா க.முருகதாசன்**


கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START
வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%
கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments
உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)
மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA
55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4
Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation
Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


JULY 9
SATURDAY
@ 6:00PM
PRABHA
MAGISHA
RACHEL
SABEASAN
RAJITHA KIRUBAN
SHARMILA
AKALIYA THARMAKULARAJAH
Mega Tuners
FUNDRAISER EVENT
விடியலைத்தேடி
2022
PRIMA
DANCE SCHOOL
EST. 2011
இடம்
Ayyappan Temple
635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8
25th
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
VIBRANT
HOSPITALITY
GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality
Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
Majestic City
The Biggest South Asian
Indoor Mall in North America.
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Leasing Opportunity
Crish Sivakolunthu (Project Manager)
647 218 3698 or 416 291 3555

# சனாதிபதி கோட்டாபய இராசபக்சாவை வீட்டுக்கு அனுப்புவது தலையிடிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது!

(19ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது, புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் அமைப்புக்கள் சம்பந்தப்பட்டது. தற்போது 318 தனிநபர்கள் மற்றும் 04 அமைப்புக்கள் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்க முன்மொழியப்பட்டுள்ளது என்பதாகும்.

இலங்கை அரசாங்கம் 2014 ஆம் ஆண்டு 424 தனிநபர்களையும் 16 அமைப்புகளையும் "பயங்கரவாத அமைப்புகள்" பட்டியலில் பட்டியலிட்டது. 2015 நல்லாட்சி ஆட்சியில் 259 தனி நபர்களும் 8 அமைப்புக்களும் அந்தப் பட்டியலில் இருந்து அகற்றப்பட்டது. 2021 இல் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச மீண்டும் 389 தனிநபர்களையும் 7 அமைப்புக்களையும் பயங்கரவாதப்பட்டியலில் சேர்த்தார். ஆக இன்றைய நிலையில் 236 தனி நபர்களும் 9 அமைப்புக்களும் தொடர்ந்து பயங்கரவாதப் பட்டியலில் இருக்கின்றன. இந்தப் பயங்கரவாதப் பட்டியலில் எஞ்சி இருக்கும் தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களின் பெயர்களை அரசு முற்றாக நீக்க வேண்டும். இல்லையேல் அரசு எதிர்பார்க்கும் முதலீடுகளைப் புலம்பெயர் தமிழர்கள் செய்யமாட்டார்கள்.

இரண்டாவது, மோதலின் முடிவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 92% க்கும் அதிகமான தனியார் நிலங்கள் முறையான உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. கடைசியாக எஞ்சியுள்ள 8,090 இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பொய் கந்தபுராணத்தின் கடைசிப் பக்கத்தில் கூட இல்லை. உண்மை என்னவென்றால் 28,990 ஏக்கர் (37.85 விழுக்காடு) நிலம் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதிலும் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் மிகச் சொற்ப காணி-யே விடுவிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை 1 போர் முடிந்த மே 18, 2009 இல் இருந்து சனவரி 2019 ஆம் ஆண்டுவரை முப்படைகள் பிடித்து வைத்திருந்த மற்றம் விடுவிக்கப்பட்ட காணிகள் பற்றிய தரவுகளைத் தருகிறது.

மே 2009 தொடக்கம் சனவரி 2019 வரை விடுவித்த, விடுவிக்கப்படாத காணிகளின் விபரம்

அட்டவணை 1

| காலம் | அரச காணி ஏக்கர் | தனியார் காணி ஏக்கர் | மொத்தம் ஏக்கர் |
|---|---|---|---|
| மே 2009 இல் முப்படைகள் வசம் இருந்த காணி | 88,722 | 29,531 | 1,18,253 |
| மே 2009 - சனவரி 2015 விடுவிக்கப்பட்ட காணி | 21,581 | 20,078 | 41,659 |
| விழுக்காடு | 24.30 | 67.99 | 35.20 |
| மே2009 - சனவரி 2015 வரை விடுவிக்கப்படாத காணிகள் | 67,141 | 9,453 | 76,594 |
| சனவரி 2015 - சனவரி 2019 விடுவிக்கப்பட்ட காணிகள் | 41,677 | 5,927 | 47,604 |
| **விழுக்காடு** | 62.07 | 62.70 | 62.15 |
| சனவரி 2019 பின்னர் விடுபடாத காணிகள் | 25,464 | 3,526 | 28,990 |
| **விழுக்காடு** | **37.93** | **37.30** | **37.85** |

வெளிவிவகார அமைச்சர் கூறியது போல் 8% நிலத்தை அல்ல 37.85 % (28,990 ஏக்கர்) நிலத்தை முப்படையினர் இன்னும் தங்கள் பி-டியில் வைத்துள்ளனர்.

மரக்கறித் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் பொதுமக்களை வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்ளுமாறு கேட்கிறது. தரிசு நிலத்தைப் பயன்படுத்தலாம் எனவும் யோ-சனை கூறுகிறது. அதே சமயம் தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணி-யை இராணுவம் ஆண்டுக் கணக்கில் பிடித்து வைத்திருக்கிறது. வலிகாமம் வடக்கில் 6,381.5 ஏக்கர் காணியி-ல் தோராயமாக 3,500 ஏக்கர் காணி நல்லாட்சி காலத்தில் விடுவிக்கப்பட்டது. மிகுதி 2,881.15 ஏக்கர் நிலம் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்தக் காணிகள் வளம் கொழிக்கும் செழிப்பான தோட்டக் காணிகள்.

காணிகளை விடுவிக்காதது மட்டுமல்ல வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல இந்தக் காணிகளில் இராணுவம் தோட்டம் செய்கிறது. தங்கள் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொண்டு மிஞ்சிய விளைபொருளைச் சந்தையில் தமிழ்மக்களுக்கே விற்று இலாபம் ஈட்டுகிறது!

வலி வடக்கு மக்கள் 15 யூன் 1990 இல் இராணுவம் மேற்கொண்ட படையெடுப்புக் காரணமாக இடம் பெயர்ந்தார்கள். இன்று அவர்கள் தங்கள் சொந்த வீடுவாசல்களுக்கு போ-கலாம் என்ற எதிர்பார்ப்புப் பொய்த்து 32 ஆண்டுகள் ஓடிவிட்டன. தாங்கள் விட்ட கண்ணீரும் போட்ட சாபமும்தான் சிறிலங்காவின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளது என இந்த மக்கள் சொல்கிறார்கள். இடப்பெயர்வை நினைவுகொள்ளும் விதத்தில் ஒரு ஆர்ப்பாட்டப் பேரணி-யை **(https://newuthayan.com/877-11/)** நடத்தினார்கள்.


யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னும் 6511 குடும்பங்கள், 23178 நபர்கள் அடையாள முகாம்களில் மற்றும்/அல்லது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் **(https://colombogazette.com/2021/11/06/doors-remain-shut-for-over-6000-families/)** வாழ்கின்றனர்.


இனச் சிக்கலுக்கு ஒரு நியாயமான, நீதியான தீர்வைக் கண்டால் மட்டுமே தலைகுப்புற விழுந்து கிடக்கும் நாட்டை மீள் கட்டி எழுப்பலாம். அரசி-யல் நெருக்கடிக்குத் தீர்வு காணாமல் பொருளா-தார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. ஆனால் இந்த யதார்த்தத்தை சிங்கள - பவுத்த பேரினவாதம் உணர மறுக்கிறது. நிறைவேற்று சனாதிபதி முறைமையை நீக்கினால் நாடு இணைப்பாட்சி நாடாக மாறிவிடும் என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் காட்டமாகப் பேசியுள்ளார்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்ச வீட்டுக்குப் போக வேண்டும் என்று கடந்த இரண்டு மாதத்துக்கும் மேலாக மழையிலும் வெய்யிலிலும் போராடும் தென்னிலங்கை முற்போக்கு இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் தீவிரமாகப் போராடுகிறார்கள். இதனை நாம் வரவேற்கிறோம். ஆனால் சனாதிபதி போட்டாபய இராசபக்ச வீட்டுக்குப் போனாலும் அவருடைய இடத்துக்கு அவரைப் போன்ற ஒருவர்தான் வருவார். இன்றைய அரசியல் அமைப்பில் மாற்றம் வராது. அது தலையிடிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது.

MURALI BUS LTD. 29 years
416.455.3514


56 SEATER COACH BUS WWW.MURALIBUS.CA
Canada & US Anywhere • Aiport Service On Time

T1
EAST COAST
July 1st - 7th
4 Province Tour
* Mont Tremblant
* Longest covered bridge
* Reversing Falls
* Magnetic Hill
* Hopewell Rocks
* Peggy's Cove
* Swiss Airflight Crash Scene
* Maritime Museum
* Parliament Building (Charlottetown)
* Historical Place (Charlottetown)
* Potatoe Farm
* Beach
$1100
(each person)
(4 people in a room)
(4 மாகாணங்கள்)

*Quebec *Nova Scotia
*New Brunswick
*Prince Edward Island (P.E.I)

T2
Montreal Tour and Val Morin Temple
தேர் திருவிழா

July 16 and 17th
Saint Joseph Church - Lunch Buffet
Premium Outlet Shopping
(4 people in a room)
$230

T3
New York City, Washington DC, Pittsburgh
July 30th, 31st
August 1st, 2nd


4 people in a room
New York City: Times Square, Ground Zero, Statue of Liberty
Washington: White House, Capitol Hill, Air & Space Museum
Pitsburgh: வெங்கடேஸ்வரர் ஆலயம், Grove City Shopping
3 இரவுகள் தங்குமிட வசதியுடன் ஒருவருக்கு $550 மட்டுமே!
4 நாட்கள் சுற்றுலா

முன்பதிவு செய்தல் அவசியம். தொடர்புகளுக்கு அழையுங்கள்
Murali 416.455.3514 | muralitaran@outlook.com
Vaccination is mandatory (at least 2 doses)

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*




## 7-7-2022 வியாழக்கிழமை துர்க்கேஸ்வரத்தில் கொடியேற்றம்

துர்க்கேஸ்வரம், ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலில் எதிர்வரும் 7-7-2022 வியாழக்கிழமை கொடியேற்ற வைபவத்துத்துடன் 21வது மகோற்சவம் ஆரம்பமாகின்றது. ஒரு மகோற்சவத்தில் கொடிமரம், கொடியேற்ற வைபவம் இரண்டுமே மிக முக்கியமானவை. அனைத்துத் தெய்வ அம்சங்களையும் ஒருங்கே மந்திரபூர்வமாக அழைத்து கொடிஸ்தம்பத்தில் வீற்றிருக்க வைத்து வழிபடும் கொடியேற்றத் திருநாளில் இறைவனுடைய தரிசனம் மேன்மையானது.

கொடியேற்ற நாளுக்கு முன்தினம் மகோற்சவ சாந்தி நடைபெறும். யூலை 6ம் திகதி புதன்கிழமை மாலை விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, வாஸ்து சாந்தி, கிராம சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் போன்ற கிரியைகள் நடைபெற்று, யூலை 7ம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கும்பபூஜையுடன் கொடியேற்று வைபவம் ஆரம்பமாகும். ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்வாமிகள் மகோற்சவ குருவாக அமர்ந்திருந்து பூஜைகளை நிகழ்த்தவுள்ளார். யூலை 7ம் திகதி பகல் 10 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்று ஆடிப்பூர தினமாகிய யூலை 31ம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் மகோற்சவம் பூர்த்திபெறும். 25 தினங்களும் காலையும் மாலையும் யாகபூஜை, ஸ்தம்ப பூஜை நடைபெற்று அம்பாளின் அருள், ஆலயத்தினை நிறைக்கும் வகையில் வழிபாடுகள் நிகழும்.

**கொடியேற்றம்**
7-7-2022 வியாழன்
பகல் 10.00 மணி

**கைலாசவாகனம்**
12-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

**மஞ்சத் திருவிழா**
16-07-2022 சனி
இரவு 8.00 மணி

**வசந்தோற்சவம்**
24-07-2022 ஞாயிறு
இரவு 8.00 மணி

**பக்த முத்தி பாவனோற்சவம்**
26-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

**ஞானப்பால் உற்சவம்**
27-07-2022 புதன்
இரவு 8.00 மணி

**வேட்டைத் திருவிழா**
28-07-2022 வியாழன்
இரவு 8.00 மணி

**சப்பறம்**
29-07-2022 வெள்ளி
இரவு 8.00 மணி

**தேர்த்திருவிழா**
30-07-2022 சனி
காலை 9.00 மணி

**தீர்த்தம்**
**பூரகர்மம் ருதுசாந்தி**
31-07-2022 ஞாயிறு
காலை 9.00 மணி

**பூங்காவனம்**
1-08-2022 திங்கள்
மாலை 6.30 மணி

**வைரவர் மடை**
2-08-2022 செவ்வாய்
மாலை 6.30 மணி

## யூலை 7 வியாழன் கொடியேற்ற தின வழிபாடுகள்

| | | | |
|---|---|---|---|
| காலை | 08.00 | மணிக்கு | கும்ப பூஜை |
| காலை | 08.30 | மணிக்கு | அபிஷேகம் |
| காலை | 09.30 | மணிக்கு | காலை பூஜை |
| காலை | 10.00 | மணிக்கு | வசந்த மண்டபபூஜை |
| காலை | 10.30 | மணிக்கு | கொடியேற்றம் |
| பகல் | 12.00 | மணிக்கு | சந்தி ஆவாகனம் |
| பகல் | 01.00 | மணிக்கு | அன்னதானம் |

## துர்க்கேஸ்வரத்தில் தேர்த்திருவிழா 31-7-2022 சனி



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்

1003



## சோமாஸ்கந்த ஈஸ்வரம்
## (நயினை முத்துக்குமாரசுவாமிகள் கோவில்)
## நயினாதீவு, யாழ்ப்பாணம்

*"சித்துருவே நின்வடிவாய் சத்தியமே யாசனமாய்*
*முத்திக்கு வித்தாகி முளைந்தெழுந்த செழுஞ்சுடரே*
*சித்தனே சித்தித் திறங்காட்டி சீர்காட்டும்*
*மூர்த்தியே மலர்த்துங்க சங்கரனின் அடைக்கலமே"*

தொன்றுதொட்டு நின்றுநிலவி வரும்மதமாக சைவசமயம் போற்றப்படுகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக தோன்றியகாலம் எதுவென்றறியாது, உயிரினம் தோன்றியபோதே தோன்றிய மதமாக இன்றுவரை சைவசமயம் கருதப்பட்டு வருகின்றது. இச்சமயத்தின் தொன்மைபற்றி சனாதன தர்மம் என்றும், வேதங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளமையால் வைதீகதருமம் என்றும் போற்றப்படுகின்றது.

பண்டைக்காலத்தில் பாரசீகர்கள், கிரேக்கர்கள் முதலிய பிறநாட்டோர் பாரதநாட்டு சிந்துநதியையும், இதனைச் சார்ந்த நிலப்பகுதியையும் இந்து என்று அழைத்தனர். பின்னர் அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழக்கைமுறை சார்ந்த பழக்கம் பண்பாடுகள், மரபுகள், சமயம் அனைத்திற்கும் இந்து என்ற சொல் பயன்பாட்டில் காணப்பட்டது. ஆரம்பத்தில் நிலப்பரப்பாக இருந்த இந்து என்ற சொல், பின்னாளில் சமயப்பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக அமைந்தது.

இன்று ஆதிசங்கரர் வகுத்த நெறிமுறையினைப் பின்பற்றி, சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம் ஆகிய மதப்பிரிவுகளைக்கொண்ட ஒரு தொகுதிக்கெயராக, இந்துசமயம் என்ற வழக்காறு காணப்படுகின்றது. கடவுளுக்கு வடிவங்கள் பலவாகக் காணப்படினும், அவர் ஒருவரே என்பதை இந்துசமயம் தெளிவாக விளக்கியுள்ளது. "உண்மை ஒன்று, ஞானிகள் அதனைப் பல பெயர்களால் அழைப்பர்" ("Truth is one. Sages call it by many names") என ரிக்வேதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றுமையின் அடிநாதமாக, மூலவேராகக் காணப்படும் இச்சிறப்பியல்பு இந்துசமயத்திற்குரிய தனிப்பண்பாக, நோக்கமாக, கொள்கையாக விளங்குகின்றது.

இவ்வாறு கூறப்பட்டுள்ள இந்துமதத்திலே பல்லாயிரம் ஆண்டுகளாக சக்திக்கும், சித்தர்களுக்கும், பஞ்சபூதங்களுக்கும் வழிபாடு உண்டு. சித்தர்கள் என்று அழைக்கப்படுவோர் யார்? சித்தர்கள் என்பதற்குப் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. சித்தத்தை வென்றவர்கள் என்பது ஒரு கருத்து. சித்து என்பதன் பொருள் பேரறிவு. அந்தப் பேரறிவைப் பெற்றவர்கள் சித்தர்கள். சித்து என்பது அருள்விளையாட்டு. அத்தகைய சித்துக்களைச் செய்பவர்கள் சித்தர்கள். இவ்வாறு பல கருத்துக்கள் சித்தர்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளன.

மனிதனுக்கு உட்கருவிகளாய் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன அமைந்துள்ளன. இந்த நான்கிற்கும் இடையே மிக நுட்பமான வேறுபாடு காணப்படும். மனம் ஒரு பொருளை நினைக்கும். புத்தி ஒரு பொருளின் இயல்பை நிச்சயிக்கும். அகங்காரம் நான் என்ற தன் முனைப்பை உண்டாக்கும். இவை மூன்றுக்கும் அடிப்படையாக சித்தம் காணப்படுகின்றது. இவ்வாறான தன்மைகொண்ட சித்தத்திலிருந்தே, வாழ்வின் இன்ப துன்பங்களுக்குக் காரணமான அனைத்தும் தோன்றுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள் தோன்ற சித்தமே காரணமாயுள்ளது. இவற்றிலிருந்து சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என அழைக்கப்படும் ஐம்புல அறிவு தோன்றுகின்றது. கை, கால், வாய், எருவாய், கருவாய் ஆகிய ஐந்து தொழில்களும் சித்தத்திலிருந்தே தோன்றுகின்றன. சித்தமே அனைத்துத் தத்துவங்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது. அனைத்திற்கும் காரணமான சித்தத்தை அடக்கி வென்றால், புரியாத உண்மைகள் புலப்படும், ஞானத்தெளிவு ஏற்படும் என்பதையெல்லாம், சித்தர்பெருமக்கள் அறிந்து வைத்திருந்தார்கள். அதனால் அனைத்தையும் உள்ளடக்கிய சித்தத்தை வென்று, சிவனை சிவனாக எண்ணி வாழ்ந்தோரே, சித்தர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

பரம்பொருளைக் குறிப்பிடும் சான்றோர்கள், அதனை சச்சிதானந்தம் என அழைப்பர். சத்து, சித்து, ஆனந்தம் என்ற பண்புகளைக் கொண்டது சச்சிதானந்தம். சத்து என்பது என்றும் அழியாத பொருள். சித்து என்பது பேரறிவு கொண்ட பொருள். ஆனந்தம் என்பது பேரின்ப வடிவம் உடைய பொருள். சித்து என்னும் பேரறிவினைப் பெற்று, பேரின்பம் அடைந்து பரம்பொருளின் இறையனுபவத்தில் திளைத்தவர்களாக சித்தர்கள் வாழ்ந்தனர். இவ்வாறான பல சித்தர்பெருமக்கள் ஈழத்திலும் வாழ்ந்துள்ளனர். இச்சித்தர்கள் இலைமறை காயாகவே இன்றும் ஈழத்தமிழர்கள் மத்தியில் விளங்குகின்றனர். இச்சித்தர்களைப்பற்றி, அவர்கள் அருமை பெருமைகளைப்பற்றி அறியாதவர்களாகவே, ஈழத்தமிழினம் காணப்படுகின்றது. இச்சித்தர்களைப் போற்றி வணங்கி, எமது எண்ணங்களை அவர்களது பாதகமலத்தில் பதித்தால், வாழ்வு சிறப்புறும் என்பதை அவர்களுடைய வரலாறு எடுத்தியம்பியுள்ளது.

ஈழத்தில் அவதரித்த சித்தர்களுள் ஒருவராக, நயினாதீவுச்சாமியார் எனப் போற்றப்படும் நயினாதீவு முத்துக்குமாரசுவாமிகள், யோகசித்தராக விளங்கியுள்ளார். யாழ்குடாநாட்டின் தென்பால் அமைந்துள்ள சப்ததீவுகளின் மத்தியில், ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் அருளிய, தேவிமானசபூசையின் முதலாவது சுலோகத்தில் குறிப்பிடப்பட்டவாறு, அறுபத்து நான்காவதாகிய புவனேஸ்வரிபீடத்தில், அன்னை ஸ்ரீ நாகபூஷணி எழுந்தருளியுள்ள புண்ணியபூமியாகிய நயினாதீவிலே, சித்தர்ஒளியும் பரவிக்கிடக்கின்றது. இத்தீவிலே நயினாதீவு சுவாமிகள், ஆறுமுகம் பார்வதி தம்பதியரின் எட்டுப்பிள்ளைகளில் ஆறாவது பிள்ளையாக, 1897 ஆம் ஆண்டு அவதரித்தார்.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு


MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



14

## எறித்மியா (Arrhythmia)

இந்த இடைக்காலங்களில் பல்வேறு மேடை நிகழ்ச்சிகளில் நான் பங்குபற்றி இருந்திருப்பேன். இதயமே உனக்கு குறிப்பிடத்தக்கதாக பெரிய பிரச்சினைகள் எதுவும் வந்ததாக நினைவில்லை.

இலேசாகத் தெரியும் நெஞ்சு வலிக்கு அஸ்பிரின் (Asprin)ஐ மேலதிகமாக சப்பி சாப்பிடுவது அல்லது நாக்குக்குக் கீழே அடிக்கும் நைட்ரோ கிளிசரின் (Nitroglycerin - Oral Spray)ஐ பாவிப்பதுடன் உன் வலி கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போய் விடும்.

சுவாசப் பிரச்சினை - அதுதான் ஆஸ்த்மாப் பிரச்சினைகள் அடிக்கடி வந்து போகும். பவ்வர் (Puffer Inhaler) உள்ளிழுப்பு மருந்துகளுடன் சமாளிப்பேன்.



ஆனால் 2006 ஒக்டோபர் 9ஆம் திகதி என் இதயமே உனக்கு மறக்க முடியாத ஒரு நாளாக இருக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை.

கனடாவில் வாழும் கைதடி ஊர் மக்கள் 'தாழம்பூ' என்றொரு நிகழ்வைக் காலத்துக்கு காலம் செய்து வருவர். இதில் சேர்க்கும் பணத்தை தமது ஊர் அபிவிருத்திக்காக பயன்படுத்துவது நோக்கம். இந்த நிகழ்வின் ஒழுங்கமைப்பாளராக விளங்கிய திரு கந்தையா மாஸ்டர் (சமூக சேவையாளர் - தற்போது காலமாகி விட்டார்) என்னை அனுகி அன்றைய நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

நானும் மகிழ்வோடு அதனை ஏற்றுக் கொண்டேன். அந்த நிகழ்வில் மறைந்த பண்டிதர் அலெக்சாண்டர், இலங்கையன் செல்வரத்தினம், அதிபர் கனகசபாபதி, வீ. எஸ். துரைராஜா போன்ற பிரமுகர்களும் இருந்ததாக இப்போது நினைவு.

எனது அறிவித்தல்களோடு நிகழ்ச்சி மிகவும் கலகலப்பாக போய்க்கொண்டு இருந்தது.

இரண்டு பக்கமும் வைக்கப்பட்டிருந்த ஒலிபரப்புப் பெட்டிகளில் (Speaker Boxes) சத்தம் கூடுதலாகவே வந்து கொண்டிருந்தது. நான் அறிவிப்பு செய்து விட்டு இந்தப் பெட்டிகளின் அருகிலேயே நிற்க வேண்டி இருந்தது. அதனால் ஏதாவது தீமைகள் எனக்கு ஏற்படலாம் என்ற எண்ணமும் எனக்கு இருக்கவில்லை. மேடையில் அறிவித்தலை தொடர்ந்த போது என் நெஞ்சுக்குள் வித்தியாசமான நெருப்புச் சூடு போன்ற ஓர் உணர்வு உருவாகி அதிகரிக்கத் தொடங்கியது.

நான் இதுபற்றி எவருக்கும் சொல்லாது கழிப்பறைக்குள் சென்று இதய வலிக்கு அவசரத்துக்கு உபயோகிக்கும் நாக்குக்கு கீழ் அடிக்கும் நைட்ரோ கிளிசரினை (Nitroclyserin) அடித்துப் போட்டு தொடர்ந்தும் அறிவித்தல் பணியை செய்து கொண்டிருந்தேன்.

ஆனால் நெஞ்சுக்குள் அந்த வலி குறைந்தபாடாக இல்லை. இது மீண்டும் மீண்டும் கூடிக் கொண்டு போனது. இரண்டு மூன்று தடவைகள் இந்த நாக்குக்கு கீழ் அடிக்கும் மருந்தை அடித்தேன். ஆனால் இதயமே, உன் நிலை கொஞ்சமும் மாறவில்லை.

கந்தையா மாஸ்டருக்கு வேறு காரணத்தை சொல்லிவிட்டு மெதுவாக வெளியேறி எனது காருக்குள் இருக்கையில் சாய்ந்து கொண்டு எதற்கும் மனைவிக்குத் தெரியப்படுத்துவோம் என்று தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். "நெஞ்சில் ஒரு மாதிரி இருக்குது. ஆனால் நான் காருக்குள் இப்போது ஓய்வாக இருக்கிறேன். (அவ பயப்படக் கூடாது என்பதற்காக) இப்போது பரவாயில்லை. பயப்பட ஒன்றும் இல்லை" என்று சொன்னேன்.

மறுபக்கத்தில் என் மனைவி பதட்டத்தோடு "அம்புலன்ஸை கூப்பிடுங்கோ" என்று சொல்லவும் "கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம்" என்று சொன்னேன். அவர் மறுமுனையிலிருந்து "பக்கத்தில் ஆரும் இருந்தால் போனைக் குடுங்கோ" என்று சொல்ல அப்போது அங்கு வந்த நண்பர் சோதி (உதயன் பத்திரிகை விநியோகப் பொறுப்பாளர்) அவர்களிடம் போனை கொடுத்தேன்.

துணைவியார் சொன்னமாதிரி சோதி அங்கு அம்புலன்ஸை அழைத்தார். மண்டபத்துக்கு உள்ளே இருந்தபோது என் பிரச்சினை பெருத்து என்னால் அந்த நிகழ்ச்சி பாதிக்கப்படக் கூடாது என்பதையே மீண்டும் என் புத்தி சொல்லிக் கொண்டிருந்தது.


இது வெளியில் நடந்தபடியால் உள்ளே நிகழ்ந்து கொண்டிருந்த நிகழ்ச்சியை எந்த விதத்திலும் இது பாதிக்கவில்லை.

என்னை அம்புலன்ஸில் ஏற்றி கொண்டு செல்லும் போது அவர்கள் எனது இதயத் துடிப்பு மிகவும் கூடுதலாக ஏறிக் கொண்டிருப்பதாகவும் 200 ஐக் கடப்பதாகவும் சொன்னார்கள். அவர்கள் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவினருடன் தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருந்தபோதுதான் ஆபத்தான ஒரு கட்டத்தில் இருப்பதை என்னால் உணர முடிந்தது.

அம்புலன்ஸிலிருந்து என்னை இறக்கி ஸ்காபரோ பொது வைத்தியசாலையின் (Scarborough General Hospital) அவசர சிகிச்சைப் பிரிவில் என்னைச் சேர்த்தபோது 'என் இதயமே உனக்கு இனிப் பிரச்சினை இல்லை. எனக்கு இனி உயிராபத்து இல்லை' என்றே நினைத்துக்கொண்டிருந்தேன்.

ஆனால் இதயமே, உன் தாளம் குறைவடைவதாக இல்லை. அந்தத் துரிதத்துக்கு தவில் மேதை தட்சணாமூர்த்தி கூட ஈடு கொடுத்திருக்க மாட்டார். அந்தளவு துரிதமாகத் தாளம் கூடிக் கொண்டே இருந்தது. அது மிகவும் ஆபத்தான நிலைமை என்பதைத் தாதிமாரின் அவசர நடவடிக்கைகளிலிருந்து ஊகிக்க முடிந்தது.

அங்கிருந்த தலைமைத் தாதி மிகவும் துரிதமாகச் செயற்பட்டார். ஒரு படிவத்தை என்னிடம் நீட்டி கையொப்பத்தை வேண்டினார்கள். அந்த வேளையிலும் 'எதற்காக' என்று கேட்டேன். ஏதேனும் ஏடாகூடமாக அவசரத்தில் செய்து விடுவார்களோ என்றும் பயம்.




மின்சார அதிர்ச்சி சொக் ட்ரீட்மென்ட் (Shock Treatment) தரப்போவதாகவும் அதை விட வேறெந்த வழிகளிலும் காப்பாற்றுவது சிரமம் என்றும் சொன்னார்கள். நான் மீண்டும் "அதனால் உயிராபத்து இல்லையோ" என்று கேட்டுவிட்டு "வேறேதும் வழி இல்லையென்றால் தாமதிக்காது செய்யுங்கள்" என்று கையொப்பமிட்டேன்.

இருவர் தயாராக இரு பக்கங்களிலும் அயர்ன் பொக்ஸ் (Iron Box) மாதிரி கையில் ஏந்தியபடி நின்றார்கள்.

ஒருகணம் எனது பிள்ளைகளையும் மனைவியையும் நினைத்துக் கொண்டேன். அவர்கள் இரு புறமும் நெஞ்சில் அழுத்தி ஒன்று - இரண்டு - மூன்று என்று சொல்லி கரண்டை பாய்ச்சி எடுத்தார்கள்.

கணனித் திரையைப் பார்த்த தலைமைத் தாதி "ஓ... தாங்க்ஸ் மை கோட் (O... Thanks my God) நன்றி என் ஆண்டவரே" என்று கடவுளைக் கூவி அழைத்தார். அவரும் அவரோடு உடன் பணியாற்றிய மருத்துவப் பணியாளர்களுந்தான் எனக்கு அப்போது கடவுளராகத் தெரிந்தனர்.

மருத்துவ விஞ்ஞானத்தின் பெருமதியையும் (Defibrillator) கருவியை கண்டுபிடித்த விஞ்ஞானிகளையும் அர்ப்பணிப்போடு கடமையாற்றி உயிர் தந்த மருத்துவப் பணியாளர்களையும் மீண்டும் நன்றியோடு நினைத்துக் கொண்டேன்.

மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சி அனைத்துமே மானுட சக்தியின் ஒன்றிணைந்த செயல்பாடுகள்தாம். மின்சாரத்தின் பயன்பாட்டிற்கு பெஞ்சமின் பிராங்கிளின் (Benjamin Franklin), மைக்கல் வராடே (Michael Faraday), தோமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alva Edison) போன்ற பலர் பங்களித்திருக்கிறார்கள்.

இந்த விஞ்ஞானிகள் மின்சாரத்தின் பயன்பாட்டினைக் கண்டு பிடிக்காவிடின் இதயத்துக்குக் கொடுத்த அதிர்ச்சி (Shock) வைத்தியம் எப்படி சாத்தியமாகும்?

1900 ஆம் ஆண்டுகளில் இருந்து நாய் போன்ற மிருகங்களின் இதயங்களுக்கு மின்னதிர்ச்சியைக் கொடுத்து பரிசோதனைகளை மேற்கொண்ட ஜீன் லூயிஸ் (Jean-Louis), பெட்ரிக் பாட்டலி (Federic Battelli), வில்லியம் கோவென்குவேன் (William Kouwenhoven) ஆகியோரையும் 1947 இல் இதயம் செயலிழந்து இறந்துவிட்டான் என்று கருதப்பட்ட 14 வயதுச் சிறுவனின் இதயத்துக்கு மின்ன திர்ச்சியை ஊட்டி உயிர்ப்பித்த இதய சத்திரசிகிச்சை நிபுணர் கிளவுட் பெக் (Claude Beck) ஆகியோரையும் இவர்களை போன்ற விஞ்ஞானிகளையும் மறந்து போக முடியுமா?

ஒன்றிலிருந்து ஒன்று... ஒருவரிலிருந்து மற்றவர்... ஒரு அறிவியல் தேட்டத்திலிருந்து மற்றுமோர் அறிவியல் கோபுரம்... அறிவியல் தேடல்களும் அதையொட்டிய கண்டுபிடிப்புக்களும் செயற்பாடுகளுமே என்னைப்போன்று உயிராபத்தான நிலைமைகளிலிருந்த பலரையும் காப்பாற்றி வந்துள்ளன.

புரட்சிக்கவி பாரதிதாசனை இங்கு வரவழைக்கலாம்.

*'மானுடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த*
*வையத்தில் அவன் செய்த வரைக்கும்*
*மானுடனுக்கு வேறாய் ஒரு வல்லமை*
*கேட்டிருந்தால் அதைக் கூறாய்...'*

இந்த மருத்துவ விஞ்ஞானத்தைத் தந்தது மானிட சக்தி இன்றி வேறேது?

என்னை ஆபத்திலிருந்து மீட்ட மருத்துவ உதவியை

*காலத்தினால் செய்த உதவி சிறிதெனிலும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது*

என்றும் கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் அவரவர் உயிர் இந்த உலகத்திலும் பெரியதுதானே.

மீண்டும் மற்றும் ஓர் எமகண்டத்திலிருந்து தப்பியதாக ஆறுத லடைந்தேன்.

*'காற்றினால் உலைக்கப்பட்டு கழுத்தினைக் குவிந்து சாம்ப*
*நேற்றைய மழைக்குவந்த நெடும்புல்லோ நாங்கள்*
*வேருக்குள் உறுதிகொண்ட வேம்புகள் மனிதர்கள்'*

(மஹாகவி)

மானுடத்தின் உயர்ச்சி இந்த உறுதிக்குள்தானே தங்கி இருக்கிறது. 'நான் இப்போதைக்கு மரணிக்க மாட்டேன்' என்ற நெஞ்சுறுதி எனக்கும் இருந்தது.

எனது துணைவியாரும் மகன் கீர்த்தனனும் சகோதரியும் அவர் கணவரும் அங்கு என்னைப் பார்க்க வந்திருந்தனர்.

அதன்பின்னர் வீ. எஸ். துரைராஜா, இலங்கையன் செல்வரத்தினம், தாழம்பூ நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் கந்தையா மாஸ்டர், அலெக்சாண்டர் மாஸ்டர், நவம் அண்ணை அவரின் துணைவியார், முனைவர் பார்வதி கந்தசாமி அவரது கணவர் கந்தசாமி உட்பட நண்பர்கள் பலரும் உறவினர்கள் பலரும் வந்து பார்த்துப் போனார்கள்.

அத்துடன் இங்குள்ள எனது பல்கலைக்கழக நண்பர்கள் முருகையா, செல்வராஜா, சிவேஸ்வரன் ஆகியோரும் தமது துணைவியருடன் வந்து பாத்துச் சென்றனர். பல்கலைக்கழக நண்பர்களில் சிவேஸ்வரன் இன்று இல்லை என்பதும் துயரமே.

அப்போது அமெரிக்காவில் மருத்துவப் பயிற்சியில் இருந்த எங்கள் மகள் அடிக்கொருதரம் தொலைபேசியில் விசாரித்தபடி இருந்தார்.

இதயமே, இப்பொழுது உன்னைத் தாக்கியது மாரடைப்பு அல்ல. வேறு வகையான ஒன்று என்பதை அப்போது நான் சிறுகச் சிறுகப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன்.

"எறித்மியா" இந்தப் பெயரை இப்போதுதான் முதலில் கேள்விப் படுகிறேன். அதுபற்றி மருத்துவர்களும் பணியாளர்களும் விபரமாகச் சொன்னார்கள்.

நான் மேலும் வாசித்தும் அறிந்து கொண்டேன். எறித்மியா வருவதற்கு பல காரணங்கள். அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.

1. மாரடைப்பு - Heart Attack
2. இதய வாயில் நோய் - Heart Valve Disease
3. உயர் இரத்த அழுத்தம் - High Blood Pressure
4. மக்னீசியம்/பொட்டாசியம் குறைபாடு - Magnesium/Potasium
5. தைரோயிட் குறைபாடு - Thyroid Problems

இந்த ஐந்து வகையான காரணங்களில் எனக்கு வந்ததற்கான காரணம் மாரடைப்பு என்பதை நான் புரிந்து கொண்டேன். அதிலும் இது எப்போதோ வந்த மாரடைப்பு தொடர்பானது என்பதையும் நான் விளங்கிக் கொண்டேன். அது எப்படி... எப்போதோ வந்த மாரடைப்பு இப்போது இந்தப் பிரச்சினையைக் கொண்டுவரலாம் என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

கர்ம வினைப் பயன் என்று எண்ணிவிடாதீர்கள். முற்பிறப்பு மறு பிறப்பு என்று எதுவும் இல்லை. சரி.. இது எப்பிடி வந்தது? என் இதயமே நீ ஏன் இப்போது மௌனமானாய்?

ஒருவர் ஒழுங்காகச் செய்து கொண்டிருப்பதை ஒரு சிலர் தலையிட்டு குழப்பிக் கெடுப்பது பற்றி அறிந்திருக்கிறோம்.

இதயமே, உனக்கு வந்த இந்த எறித்மியா - ஒரு சங்கம் அல்லது அமைப்பு ஒழுங்காக இயங்கும்போது அதில் உள்ள சிறு குழுவினர் தனித்து பிரிந்து நின்று குழப்பம் விளைத்து கெடுப்பதை ஒத்ததுதான்.

ஏற்கனவே 1991 இல் நிகழ்ந்த மாரடைப்பும் அதன் விளைவுகளும் இதன் விளைநிலம். இதயமே, மாரடைப்புக் காரணமாக உன்னுள் இருக்கும் இறந்து போன அல்லது அரைகுறை உயிரோடு இருக்கும் இளையங்கள் தமக்குள் கூட்டாகச் சேர்ந்து மின்னலைகளை உருவாக் குவதனால் ஏற்படும் துடிப்புக்கள் வழமையாக சீராக ஒரு தாளத்தில் இயங்கும் உனது தாளத்தினை குழப்புவதால் நிகழும் சீரழிவே இந்த எறித்மியா என்று தெரிகிறது.

என் இதயமே உனக்குள்ளேயே உனக்கு எதிரான ஓர் இயக்கம் சீரான துடிப்பு இல்லாமையால் இரத்தச் சுற்றோட்டம் தடையின்றி நடைபெற இடமில்லாது போகின்றது. மூளைக்கு போதிய இரத்தம் போகாவிடின் என்ன நடக்கும் என்பதும் தெரியும்.

பாரிசவாதம், இறப்பு எது வேண்டுமானாலும் அதன் காத்திரமான நிலையைப் பொறுத்து நடக்கலாம். எனக்கு நடப்பது Ventricular Tachycardia (VT) என்று அழைக்கப்படுகிறது. இவைகளைத் தெளிவாக அறிந்ததும் ஒரு பெருங்கவலை சூழ்ந்து கொள்ளுகிறது. தீதும் நன்றும் பிறர் தர வாரா - என் இதயமே நீயே உனக்குத் தீங்கிழைத்துக் கொண்டாயா?

எதுவாயினும் எதையும் தாங்கும் இதயம் நீ. இதையும் தாங்குவாய் என்ற நம்பிக்கை களிமண்ணைக் கிழித்துக்கொண்டு வெளிக்கிளம்பும் விதையின் முகிழ்ப்பாய் அரும்பியது.

# கால் போட்ட மது'வில் பித்தம் கொண்டவன் கால் நீக்கிய மாது'வில் சித்தம் தெளிந்தவன்



நக்கீரன்

**(ஜூன் 24 கண்ணதாசன் பிறந்த நாள்)**




தத்து கொடுக்கப்பட்ட எட்டாவது பிள்ளையான முத்தையா, உலகெங்கும் பரவி நிரவி வாழும் தமிழர்களால் தத்தெடுக்கப்பட்டு, தத்தம் நெஞ்சத்து அறைகளில் பதியம் செய்யப்பட்டவர் அந்த முத்தையாதான், கவியரசு கண்ணதாசன்.

பருவ மங்கையர்பால் மங்காத மயக்கம் கொண்டவர் கவியரசர் கண்ணதாசன் என்று பொதுவாக சொல்லப்படுவதுண்டு. அதில் ஓரளவு பொருளும் உண்டு. ஆனால், அக்கவிப் பெருமகனார், பெண்மையை தொடக்கம் முதல் முடிவு வரை தன் பாவரிகளால் படம் பிடித்து அவற்றை இலக்கியச் செப்பேடுகளில் பதித்தவர் என்பதுதான் உண்மை.

பெண்மையின் பருவங்களான அரிவை, தெரிவை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, பேரிளம்பெண் என்னும் ஏழு நிலைகளையும் கடந்து பெண்மையை தன் பேனா முனையென்னும் உளியால் செதுக்கியவன் கண்ணதாசன். “காலமிது காலமிது மண்ணுறங்கு மகளே” என்றப் பாடலை நிதானமாகக் கேட்போருக்கு இது பொருள் பொதிய விளங்கும்.

இந்தத் தலைமுறை மக்கள் நன்கு அறிந்த தமிழ்க் கவிஞன் கவியரசு கண்ணதாசன். செம்மொழியான தமிழ் மொழி, கவிதை வடிவில் உயரமான பரணில் இருந்தது. அத்தகையத் தமிழைத் தரையில் இறக்கி வைத்தவன் மாகவி பாரதி. அதை இன்னும் எளிமைப்படுத்தி வீதியில் உலாவ விட்ட பாவலன் கண்ணதாசன். சொல்லில் எளிமையும் கருத்தில் வலிமையும் சேர்த்து சுவைபடப் பாடல்களை எழுதியப் பெருமை கண்ணதாசனைச் சேரும்.

வாழ்க்கைப் பயண வீதியில் ஓரோரம் அமர்ந்து மதுக் கிண்ணம் ஏந்தும் மனிதனை பரவசம் பற்றிக் கொள்ளும். ஆனால், கண்ணதாசனின் நெஞ்சத்தில் மதுக் கோப்பை மஞ்சம் கொண்டால் அப்பாவலப் பெருமகனின் எழுதுகோல் வஞ்சியின் உருவெடுக்கும். பின் என்ன? அவ்வஞ்சியுடன் கொஞ்சி விளையாட வாலைத் தமிழ் அஞ்சாது. அப்போது கண்ணதாசனின் எண்ணப் பெருக்கெல்லாம் வண்ணச் சொற்களாக வடிவெடுத்து பாடல் வரிகளாக வரிசைப் பிடிக்கும்.

சிறுகூடல் பட்டியில் இடை நிலைக் கல்வியைக்கூட எட்டாத ஒரு கவிமகனால், “எறும்பு தோலை உரிக்க ஒரு யானை வந்ததடா”; “கங்கை வெள்ளம் சங்குக்குள்ளே அடங்கி விடாது”; “நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றல்”; “இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியம்”; “உலக மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே”; “கண் வண்ணம் அங்கே கண்டேன், கை வண்ணம் இங்கே கண்டேன்”; “விதியென்று ஏதுமில்லை, வேதங்கள் வாழ்க்கையில்லை”; “அத்தான் என் அத்தான்”; “தொட்டிலுக்கு அன்னை, கட்டிலுக்கு கன்னி, பட்டினிக்கு தீனி, கெட்ட பின்பு ஞானி”; - என்றெல்லாம் எழுத முடிந்ததற்குக் காரணம், கண்ணதாசனின் தமிழியத் தேடலுக்குப் பின் சமூக சிந்தனையன்றி வேறென்ன?

பட்டினத்தாரின் சந்தப்பா இலக்கியம், கம்பனின் இராமாயணம், வள்ளலாரின் திருவருட்பா, திருவள்ளுவரின் திருக்குறள், பாரதியார் படைப்பு என்றெல்லாம் ஒன்று விடாமல் கற்றுத் தெளிந்தவர் கண்ணதாசன்.

ஆயினும் தனிப்பட்ட முறையில், நேற்றொரு கொள்கை, இன்றொரு மாற்றம் என் வாழ்ந்தவர் அரசியலிலும் அப்படித்தான். ஈ.வி.கே. சம்பத்துடன் அவர் அணி காணாமல் இருந்திருந்தால், உறுதியாக அமைச்சர் ஆகியிருப்பார்.

நேற்று தன்னால் தூற்றப்பட்டவருக்கு இன்று நேரில் மலர் மாலை - என்று மனிதர்களை மாறி மாறி போற்றியும் தூற்றியும் வாழ்ந்தவர் கண்ணதாசன். தமிழ் தேசியமாயினும் இந்திய தேசியமாயினும் சமயக் கொள்கையாக இருந்தாலும் அத்தனையிலும் முன்னும் பின்னுமாக பேசி, மாற்றியும் திருப்பியும் தன் கருத்தைப் பதிவு செய்தவர் கண்ணதாசன்.

“விதி” என்ற சிந்தனையைக்கூட புரட்டிப் புரட்டிப் போட்ட பாவலன் கண்ணதாசன். “விதியென்று ஏதுமில்லை, வேதங்கள் வாழ்க்கை இல்லை, உடலுண்டு உள்ளமுண்டு, முன்னேறு மேலே மேலே”; என்று “சொர்க்கம்” திரைப்படத்தில் சொன்ன அதேக் கண்ணதாசன் “நதி வெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றமில்லை, விதி செய்த குற்றமின்றி வேறு யாரம்மா?” என்று தியாகம் திரைப்படத்தில் பாடல் எழுதி இருக்கிறார்.

“கம்ப ரசம்” இயற்றிய அண்ணாவிற்குப் போட்டியாக தானும் கம்ப இராமாயணத்தைப் படிக்க முனைந்த கண்ணதாசன், அப்படியே வெகுதூரம் கடந்துவிட்டார். கடைசியில் திசைமாறியும் சென்று விட்டார். இப்படியெல்லாம் வாழ்ந்த கவியரசு கண்ணதாசனுக்கு இந்த மண்ணில் தமிழும் தமிழரும் நிலைக்குமளவு அவர்தம்புகழும் நிலைபெற்று இருக்கும் அந்த அளவிற்கு அவருக்கு பெருமை சேர்ப்பது அவரின் பாடல் வரிகள்தான். அப்படிப்பட்ட கண்ணதாசனுக்கு ஜூன் 24, பிறந்த நாள்.

மொழியறிஞர் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாருக்கும் இன்றைய ஜூன் 24-ஆம் நாள் பிறந்த நாள். மலேசிய திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர் இரெ.சு. முத்தையா அவர்களுக்கும் ஜூன் 24-ஆம் நாள் பிறந்த நாள்.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இடையறாது கொள்கைப் பணி ஆற்றவேண்டி இருந்ததால், மருத்துவத் துறையில் தான்பார்த்த பணியைத் துறந்து தன் வாழ்க்கையையே மலேசியத் தமிழ்ச் சமுதாயத்திற்காக ஈகம் செய்த இரெ.சு. முத்தையா அவர்கள், இன்றளவும் சுயமரியாதைச் சுடருடன் மலேசிய மண்ணில் பகுத்தறிவு உலா வருகிறார்.


**நக்கீரன் - கோலாலம்பூர்**

# திராவிட ஆட்சியாளர்கள், தமிழை வளர்க்கும் இலட்சணம் இதுதான்

## நாம் தமிழர் கட்சி சீமான் கண்டனம்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு முடிவுகளை வெளியிடும்போது பாடங்களின் பெயர்களை தமிழில் குறிப்பிடாததும், தமிழ் மொழிப்பாடத்தை வெறுமனே மொழிப்பாடமென்று மட்டும் பதிவுசெய்திருப்பதும் கண்டனத்திற்குரியது.

“எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!” எனும் முழக்கத்தை முன்வைத்து ஆட்சியதிகாரத்துக்கு வந்த திராவிட ஆட்சியாளர்கள், தமிழை வளர்க்கும் இலட்சணம் இதுதான்! தமிழைப் பின்னுக்குத் தள்ளி, ஆங்கிலத்தை உயர்த்திப் பிடிப்பதுதான் இவர்களது திராவிட மாடல் ஆட்சி! வெட்கக்கேடு!





அறிவித்தல்

**மொன்றியலில் இலங்கைத் உயர்ஸ்தானிகராலயம்வழங்கும் நடமாடும் சேவை**

இலங்கைத் உயர்ஸ்தானிகராலயம் மொன்றியல் மக்களுக்கான சேவைகளை வழங்கும் நோக்கில் தமது நடமாடும் சேவைகளைக் **Corporation de Gestion des Loisirs du Parc, 419 St-Roch, Montréal (Quebec) H3N 1K2** என்ற முகவரியில் வழங்குகின்றது.

**காலம்: யூன் 26, 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி முதல் 4:00 மணி வரை.**

கீழ்க்காணும் சேவைகளை அங்கு மக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

- புதிய கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்கள்
- இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பங்கள்
- ஆவணங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்
- பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ் போன்றவற்றைத் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு அல்லது பிரஞ்சு மொழிக்கு மொழிபெயர்த்தல்
- இலங்கைக் குடியுரிமை கொண்ட பெற்றோருக்குக் கனடாவில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பைப் பதிவு செய்தல்
- இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்வுச் சான்றிதழை உறுதிப்படுத்துதல்
- ஓய்வூதியம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குதல்
- இலங்கை வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரம் தொடர்பான கடிதங்களை வழங்குதல்
- மேலும் தேவையான உயர்ஸ்தானிகராலயச் சேவைகள்

விண்ணப்பங்கள் பிற்பகல் 3:00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

யூன் 24ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக 6132338449 6132337821 என்ற தொலைபேசி எண்களில் அழைத்து உங்கள் முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

குறிப்பு:
சேவைகளை நாடி வருவோர் கோவிட் தொற்றுகாலத்துக்குரிய கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதோடு, முகக் கவசமும் அணிந்து வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# ஜீவன் முக்தி 586

## பாதுகாப்பில்லாத தன்மையில் வாழ்வதே ஜீவன் முக்தி

பலபேர் என்னிடம் வந்து கேட்பதுண்டு "ஒன்பது வருஷம் பரிவிராஜக பாத்திரை செய்து எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பீர்கள். ஊர் ஊராகப் போய் பிச்சை எடுத்து சாப்பிடுவது கொடுமையான வாழ்க்கையாச்சே?" என்று.

நான் சொன்னேன் "ஐயா எனக்குத்தான் உங்கள் வாழ்க்கையைப் பார்த்தால் 9காடுமையாகத் தெரிகிறது.

என் வாழ்க்கை கொடுமையே கிடையாது. அது என்ன ஒரு ஆனந்தமான பாழ்க்கை என்று உங்களுக்குத் தெரியாது.

உங்களுக்கு எப்படி என் வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியவில்லையோ அதுபோல் உங்கள் வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

காலையில் எழுந்திருத்தால் அதே வீடு அதே கார் அதே வீட்டுக்காரர். ஒரே வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள். காலையிலிருந்து இரவுவரை

நீங்கள் பேசுகிற வார்த்தைகள்கூட நிலைப்படுத்தப்பட்டிருகிறது என்பதைக் கவனித்திருக்கிறீர்களா?

நீங்கள் காலையில் எழுந்த உடனே என்ன சொல்வீர்களோ அதைத்தான் ஒவ்வொரு நாளும் சொல்வீர்கள்.

வீட்டிலிருக்கும் அம்மா என்ன சொல்ல வேண்டுமோ அதைத்தான் தினந்தோறும் சொல்வார்கள்.

அதில் ஏதேனும் ஒன்றிரண்டு வார்த்தைகள்தான் புதிதாகச் சேரும் இல்லை நீக்கப்படும். அதுவும் வாரம் இருமுறைதான் புதிய வார்த்தை சேரும் அல்லது நீக்கப்படும்.

அதனால்தான் வீட்டிலிருப்பவர்கள் இப்பொழுதெல்லாம் பேசிக்கொள்வதுகூட இல்லை. தினசரி வாழ்க்கையைப் பார்த்தீர்கள் என்றால் நீங்கள் சொல்கிற வார்த்தைகள்கூட தயார் செய்யப்பட்ட வசனமாகி அச்சடிக்கப்பட்டதாகி விட்டது.



உங்கள் வாழ்க்கையில்கூட தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்களைத்தான் பேசுகிறீர்கள். இதற்கு மேலே அதிகம் பேசி என்ன செய்யப் போகிறோம்? அட விடப்பா! "என்றிருப்போம். அது மட்டுமில்லாமல் நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் அவர்கள் என்ன பதில் சொல்வார் என்பதும் உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும்.

அதனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் "நாம் சொல்லி அவர் பதில் சொல்வதை விட நாமே மனத்தில் சொல்லிக் கொள்ளலாம்" என்று விட்டுவிடுகிறீர்கள். அதனால் பெரிய கொடுமை பாருங்கள் நீங்கள் பேசுகிற வார்த்தைகளைக்கூட நிரந்தரமானதாகச் செய்துவிட்டீர்கள்: தயார் செய்து விட்டீர்கள். அதில்கூட பாதுகாப்பற்ற நிலை போய்விட்டது.

நான் எப்போதும் பிரம்மச்சாரிகளிடம் சொல்வேன் "புதிது புதிதாகத் தவறு செய்யுங்கள் புதிது புதிதாகச் சண்டை போடுங்கள் வளருவீர்கள் ஆனால் புதிது புதிதாகச் சண்டை போடுகிற அளவிற்குக்கூட நீங்கள் யோசிப்பது இல்லை. ஒரே தவறை பெரிய அளவிலோ சிறிய அளவிலோ செய்வீர்கள். அவ்வளவுதான்.

உங்கள் வாழ்க்கையில் புதிது புதிதாகத் தவறு செய்ய வேண்டும் என்றால்கூட பாதுகாப்பில்லாமல் யோசனை செய்தாக வேண்டும்.

உங்களுடைய வார்த்தைகள்கூட தன்னிச்சையாக இருப்பதில்லை எல்லாமே முன்பே திட்டமிட்டதாக முடிவெடுக்கப்பட்டதாக பாதுகாப்பாக இருக்கின்றன. முழுமையான பாதுகாப்பற்ற தன்மையில் வாழ்வதுதான் 'ஜீவன் முக்தி".

## கொடுத்ததே போதும்! எதுவானாலும் என்னிடமிருந்து எடுத்துக்கொள்

"கொடுத்ததே போதும்! எதுவானாலும் என்னிடமிருந்து எடுத்துக் கொள். எனக்காகக் கொடுத்தது போதும்! உனக்காக நான் எதையும் கொடுப்பேன் என்று வாழ ஆரம்பித்துவிட்ட ஒவ்வொருவரும் கோபிகைகளே!

வாழ்க்கையோடு இன்று முடிவு செய்யுங்கள் "வாழ்க்கையே! சுவாசமாக எனக்குள்ளே சென்று வெளியே வருகிற வாழ்க்கையே! ஜீவாதாரமே! இந்த உலகத்திற்கே உயிராக இருக்கிற இந்த உலகத்தை நான் உணர்வதற்கு ஆதார சக்தியாக இருக்கிற வாழ்க்கையே! இன்றிலிருந்து நீ எனக்கு எதுவும் தர வேண்டாம்".

"என்னுடைய சுவாசமாக மலர்ந்து இருக்கிறாயே இது போதுமானது நீ என் உடலுக்குள்ளே உயிராக உலவுகிறாயே அது போதுமானது.

ஒரு பொருளைத் தொட்டால் என்னால் உணர முடிகிறது. அது போதுமானது.

ஒரு பொருளை என்னால் பார்க்க முடிகிறது. அது போதுமானது.

ஒரு பொருளை ருசிக்க முடிகிறது. அது போதுமானது.

"வாழ்க்கையே நீ ஏற்கெனவே அளவுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டாய். இதற்குமேல் உன்னிடமிருந்து நான் கேட்பதற்கு ஒன்றுமே இல்லை. உன்னிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஒன்றுமே இல்லை நீ எதை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் என்னிடம் இருந்து எடுத்துக் கொள்.

"அனைத்தையும் என்னிடம் இருந்து எடுத்துக்கொள். உனக்காகவே அனைத்தையும் நான் விரித்து வைக்கிறேன்" எனும் இந்த உணர்வை எடுத்துக்கொண்டுவந்து வாழ ஆரம்பித்தீர்களானால் அதுதான் 'ஜீவன் முக்தி'.

அந்த வினாடியே உங்களுக்கும் வாழ்க்கைக்கும் இடையே இருக்கிற உணர்வு கிருஷ்ணருக்கும் கோபியருக்கும் இடையிலே இருக்கிற உணர்வாக மாறி விடுகிறது. உங்களின் வாழ்க்கையே ராசலீலையாகத்தான் இருக்கும்.

ஹோலி பண்டிகை என்பது ராச லீலை என்பது ஏதோ சிறிது நேரம்

கோலாட்டம் அடித்து கும்மியாட்டம் அடித்து கலரைப் பூசிக்கொண்டு ஆடுவது இல்லை. அதை அடையாளமாகச் செய்ய வேண்டும் அவ்வளவுதான். அது ராசலீலை கிடையாது.

வாழ்க்கையே ஞானத்தைத் தாண்டிய ரசமாக மாறுவதுதான் ராசலீலை. உலகம் முழுவதும் பக்தர்கள் ராசலீலையைக் கொண்டாடுகிறார்கள். ஹோலிப்பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள்.

அன்று மட்டும் ராசலீலையைக் கொண்டாடுவது ராசலீலை அல்ல. ஞானத்தைத் தாண்டிய ரசத்தை வாழ்விலே உணர்வதனால் வாழ்க்கையே ராசலீலையாக மாறுவது வாழ்வே ராசலீலையாக மாறுவது வாழ்வே ராசலீலையில் கரைவது வாழ்வே ராசலீலையில் மலர்வது.

இல்லையென்றால் வாழ்க்கைக்கும் நமக்கும் உள்ள உறவு சிசுபாலனுக்கும் சிசுபாலனோடு தங்கியிருந்த பெண்களுக்கும் இருக்கிற உறவு மாதிரிதான்.

வாழ்வுக்கு ஏதாவது தருவது என்பது வாழ்வுக்காகத் தம்மை மலர்த்துவது என்பது வாழ்க்கை எனும் பழத்திற்குள் சாற்றைச் சேர்ப்பதற்கான நீராக வருவதைப் போன்றது.

நீங்கள் தொடர்ந்து வாழ்க்கையில் இருந்து எதையாவது திருடிக்கொண்டே இருப்பது வாழ்க்கை என்கிற பழத்தின் சாற்றைப்பிழிந்து அதிலிருந்து திருடி சேர்த்து வைத்துக்கொள்வதற்குச் சமம். பலர் இருபத்தி நான்கு மணிநேரமும் இப்படியே முயற்சி செய்வீர்கள். வாழ்க்கை என்ன செய்யும்? உங்களுக்குக் கொடுக்கிற மாதிரி கொடுத்துவிட்டு உங்களோடு பொம்மலாட்ட விளையாட்டு விளையாடிக்கொண்டே இருக்கும்.

நீங்கள் வேறு எங்கிருந்து எடுத்துக்கொண்டு வந்தாலும் அதையும் சேர்த்து மொத்தமாக எடுத்துக்கொள்ளும்.

வாழ்க்கை உங்களோடு பொம்மலாட்டம் விளையாட்டு விளையாடுவதற்கு அனுமதிக்காதீர்கள்.

வாழ்க்கையோடு முழுமையாகத் திறந்து இருங்கள். இதற்கு என்ன அர்த்தம் என்றால் உங்களுடைய உணர்வு முழுவதையும் ஒரே நிலை நோக்கி ஒன்றாக்குங்கள்

எதை நம்புகிறீர்களோ...
அதை மட்டும் பேசுங்கள்
எதை நம்புகிறீர்களோ...
அதை மட்டும் செய்யுங்கள்
எதை நம்புகிறீர்களோ...
அதை மட்டும் வாழுங்கள்.

நம்புதல் என்றால் உங்களுக்குள் அனுபவமாக மாறியவற்றை மட்டும் வாழ்தல். நம்பாத விஷயங்களை வாழ ஆரம்பிப்பது என்பது சமூகக் காரணங்களை கருதி போலி வாழ்வு வாழ்வது.

நம்பாத விஷயங்களை வாழ ஆரம்பிக்கிறவர் அனுபவமாகாத அனுபவங்களோடு வாழ்பவர் அது உளுத்துப் போன மூங்கில் மாதிரி. உளுத்துப்போன மூங்கில் புல்லாங்குழலாக மட்டும் அல்ல பாடை கட்டக்கூட உபயோகம் ஆகாது.

## புல்லாங்குழலா உளுத்துப்போன மூங்கிலா?

உளுத்துப்போன மூங்கில் உள் உலகத்தில் மட்டும் அல்ல வெளி உலகத்தில் ஜெயிப்பதற்குக்கூட உபயோகம் ஆகாது.

காலியான மூங்கில் புல்லாங்குழலாக உபயோகம் ஆகும். ஆனால் உளுத்துப்போன மூங்கில் பாடை கட்டக்கூட உபயோகம் ஆகாது. காலியான மூங்கில் இறைவன் கையில் புல்லாங்குழலாக இருக்கும். கனமான மூங்கில் பாடை கட்டி பிணம் தூக்க உபயோகம் ஆகும்.

அகங்காரம் இல்லாமல் போகும் பொழுது இறைவன் கையில் புல்லாங்குழலாக மாறிவிடுகிறீர்கள்.

கனமான மூங்கிலாக.. அகங்காரத்தோடு வாழும் பொழுது இந்த உடல் என்ற பிணத்தைத் தூக்கிக்கொண்டு போகிற "பாடை" கட்டுவதற்குத்தான் உபயோகம் ஆக வேண்டியிருக்கும். கடைசியில் உடம்பைத் தூக்கிக்கொண்டு வாழ்வதற்குக்கூட உபயோகம் இல்லாத நிலையில் வீழ்ந்து மாய்கிறீர்கள்.

ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள் ஆழ்ந்து உள்வாங்கிக்கொள்ளுங்கள். இந்த வாழ்க்கையோடு உங்களுக்கு இருக்கிற உறவை நேராக்குங்கள்.

உங்கள் உடல் வியாதிகள் மறைந்து உள்ளத்தின் வியாதிகள் மறைந்து உணர்வைக் சீரமைக்கும்".

கிராமத்து மக்களிடம் நான் பார்த்து இருக்கிறேன் உணர்வைச் சீரமைத்து வைத்திருப்பார்கள்.

மத்தியபிரதேசம் பக்கத்தில் ஒரு கிராமம் அருமையான ஒரு இடம். அந்தக்கிராமத்தில் இருக்கிற பழக்கம் என்னவென்றால் அந்த மக்கள் கனவில் யாரையாவது பார்த்துத் திட்டிவிட்டால் இல்லை ஏதாவது அவர்களுக்குத் தவறு செய்துவிட்டதாகக் கனவு கண்டால்கூட மறுநாள் அவர்கள் வீட்டிற்குச்சென்று அந்த நபரிடம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுவிட்டு வருவார்களாம்.

நமக்கு ஆச்சர்யமாக இருக்கலாம் "கனவில் செய்ததற்கெல்லாம் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும்? நிஜத்தில் அவர்களுக்குத் தெரியக்கூட தெரியாதே" என்று.

அதுபோல் செய்ய வேண்டி இருந்தால் தினம் எத்தனை பேர் காலில் விழ வேண்டி இருக்கும்?

அவர்கள் "நாம் கனவில் ஒரு தீங்கு இழைத்திருந்தாலும்கூட அதற்கும் நம் உணர்வற்ற நிலையில் அவர்கள் மேல் ஒரு வெறுப்பு எப்படியேனும் நினைவுப்பகுதியில் பதிந்துவிடும் என்றும். அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று நமக்குத் தோன்றும்" என்று நம்புகிறார்கள்.

நமது உணர்வற்ற நிலையில் ஏதாவது ஒருகோபம் இருக்கும். அதனால்தான் இந்தச்செயலை நாம் செய்கிறோம்" என்ற மிகத் தெளிவான சத்தியம் அவர்களுக்கு புரிந்திருக்கிறது.

அதனால் உணர்வை நேராக்குவதற்காக அவர்களுடைய உணர்வைச் சீர்செய்து கொள்வதற்காக கனவில் யாரையாவது காயப்படுத்திவிட்டால்கூட அல்லது உடலாலோ மனதாலோ கனவில் ஒருவருக்கு வஞ்சம் செய்துவிட்டாலும்கூட நனவிலே சென்று அவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பார்கள்.

அதுதான் நேர்கொண்ட உணர்வு நிமிர்ந்த வாழ்க்கை. பாரதி சொல்கிறார் "நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச்செருக்கும்" என்று அது இதுதான்.

ஞானத்தினாலே வருகிற தெளிவு... அதுதான் வாழ்க்கையோடு நமக்கு இருக்க வேண்டிய உறவு... இதைத்தான் ஞானத்தைத் தாண்டிய ரசம் என்று சொல்கிறோம்.

## ராசலீலா தீக்ஷை

கோபியர்களுக்கும் கிருஷ்ணனுக்கும் எதுவும் கொடுக்க வேண்டியதும் வாங்க வேண்டியதும் இல்லை. அவர்கள் ஒரே உணர்வு என்பதை உணர்ந்து விட்டார்கள். ஆனாலும்கூட எளிமையோடு இருந்தார்கள்.

ஒரே உணர்வுதான் என்று உணர்ந்துகொண்டு எப்போதும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் அது ராசலீலையாக இருந்திருக்காது போரடிக்கும். கட்டாயமாகப் போரடிக்கும். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை.

ஞானம் அடைவது எல்லோருக்கும் ஒன்றுதான் என்றாலும் "வெளிப்பாடு" வேறு வேறாக இருக்கும். புத்தர் நாற்பது வயதிற்குப்பிறகு ஞானம் அடைந்தார். சோர்வான உடல். ராசலீலைக்கான சக்தி வெளிப்பாடு நிகழ்வதற்கு அந்த உடல் தயாராக வேண்டிய நிலையில் இருந்தது.

அவர்களின் உடல் தயாராகிவிடும் பொழுது அந்த உடலின் மூலமாகப் பிறருக்குள் ஞானத்தை மலர்த்துகிற லீலை தொடங்கிவிடும்.

அவதார புருஷர்களைச் சந்தித்து ஆசிபெறுவதனாலும் தியான சிகிச்சை பெறுவதனாலும் சக்தி தீக்ஷை பெறுவதனாலும் நோய் குணமடைகிறது.

அவர்கள் உடலில் குணமடைதல் எப்படி நிகழ்கிறது?

எப்படி இவை எல்லாம் நடக்கிறதென்றால் சின்ன வயதிலேயே ஞானமடைந்து உடல் அதற்காகத் தயாராகும் போதுதான் நிகழும்.

இடி இறங்கி வெளிப்படுவதற்கான ஓடிடிரான்ஸ்பார்மராக உடல் சின்ன வயதிலிருந்து யோகம் தியானம் மூலமாகத் தயாராக இருக்க வேண்டும்.

ஞான சக்தி உடம்பிற்குள் இடிபோன்று இறங்கும்போது அதைத் தாங்கும் ஒரு சக்தி டிரான்ஸ்பார்மராக உடல் இருக்க வேண்டும். உடலையே மாற்றுகிற மனத்தையே மாற்றுகிற சக்தி டிரான்ஸ்பார்மராக அந்த உடல் இருந்தாக வேண்டும்.

ஞானியின் உடல் ஒரு அனுசக்தி நிலையம் போன்று இருக்க வேண்டும். சிறு வயதிலேயே ஞானமடைந்து தீக்ஷை தருகிற அளவுக்கு சக்தியை வெளிப்படுத்துகிற ஒரு அனுசக்தி நிலையம் போன்று இருக்க வேண்டும்.

கிருஷ்ணரின் உடல் மிகச் சரியாக ஞானத்தைத் தாண்டிய ரசத்தை தீக்ஷையாக தருமளவிற்குத் தயாராக இருந்தது. இதுபோன்ற அவதார புருஷர்கள் மலர்வது எப்போதாவது நிகழும் ஒன்று.

(தொடரும்...)


OM SHAKTI ASTROLOGER & PSYCHIC
PALM READING, FACE READING, HOROSCOPE
OVER 25 YEARS OF EXPERIENCE
PANDIT: GURUDEV
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS
REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA, BUTTU, JINN & GIVES N100% PROTECTION
SPECIAL PRAYERS FOR FULL MOON & DARK MOON
Solves problems like Health, Love, Marriage, Job, Depression, Family, Husband-wife, Jealousy court etc
SPECIALIST IN BRINGING BACK LOVED ONES
REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION
No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE
100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL
ஆந்திர பிரதேஷ் வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: GURUDEV சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!
கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்
• கைரேகை
• நாம சட்சத்திரம்
• கல்வி, உத்தியோகம்
• தொழில், வியாபாரம்
• இலட்சுமி வசீகரம்
• வதிவிடப் பிரச்சனைகள்
• வெளிநாட்டுப் பயணங்கள்
• பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
• நீதிமன்ற வழக்குகள்
• திருமண யோகம்
• குழந்தைப் பாக்கியம்
• சர்ப்ப தோஷம்
• கர்ப்பதோஷம்
• கஸ்ட - நஸ்டங்கள்
• வாகனப் பொருத்தம்
• ஒன்று கூடுதல்
100% Guarantee
Private & Confedential
2681 EGLINTON AVE E, SCARBOROUGH, ON, M1K 2S2
BRIMLEY & EGLINTON, NEXT TO CIBC BANK
4377-888-977


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

மலேசிய மடல்

# வள்ளல் ரெனா'வின் குலவிளக்கு தாமரைக்கு மணவிழா ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஜுன் 20:





பிரிட்டிஷ் காலத்து மலாயா முதல் தற்போதைய சுதந்திர மலேசியாவரை மலேசியத் தமிழ்ச் சமூகத்தில் வள்ளல் என்ற அடைமொழிக்கு உரியவரான "ரெனா" என்னும் ரெங்கசாமி பிள்ளையின் மகன்வழி பெயர்த்தி தாமரைக்கு கோலாலம்பூரில் கோலாகல மணவிழா நேற்று நடைபெற்றது.

மலேசியத் சமுதாயத்தில் வள்ளல் என்னும் அடைமொழியுடன் அழைக்கப்படும் ஒரே மனிதர் "நினைவில் வாழும்" நா. ரெங்கசாமி பிள்ளை.

நாடு விடுதலை அடைந்த காலக் கட்டத்தில், வடபுலத்தே வாழ்ந்துவந்த இவர், புக்கிட் மெர்தாஜம் என்னும் தோட்டத்தில் வாழ்ந்த முப்பது தமிழ்-மலாய்க் குடும்பங்களுக்கு தேச விடுதலைப் பரிசாக குடும்பத்திற்கு ஓர் ஏக்கர் நிலம் என அன்பளிப்பு செய்தவர்.





தமிழ்ப் பள்ளிகள், ஆலயங்கள், பொது மண்டபங்கள், தோட்டப் பாட்டாளிகளுக்கு வீட்டு மனை என்றெல்லாம் வாரிவாரி வழங்கி வள்ளல் எனப் பெயரெடுத்த ரெங்கசாமி, கவிஞர் கண்ணதாசனுக்கு குடும்ப நண்பரைப் போல விளங்கினார்.

வர்த்தகத்தில் கொடி கட்டிப் பறந்த வள்ளல் ரெனா, அரசியலிலும் அகலக் கால்வைத்து செயல்பட்டார். குறிப்பாக, மலாய் அரசியல் கட்சியான அம்னோவில் ஏராளமான நண்பர்களைக் கொண்டிருந்த அவர், மலேசியாவின் பிரதமர்களான துங்கு அப்துல் ரகுமான், துன் அப்துல் ரசாக், துன் உசேன் ஓன் என முதல் மூன்று பிரதமர்களுடன் நெருக்கமாக இருந்தார்.

அவரைப் போலவே, அவரின் அடியொற்றி வாழும் அவரின் புதல்வர்களான துரைசிங்கம், இராமலிங்கம், நாகலிங்கம் உள்ளிட்ட மக்கள் தாமரைக் குழுமம் என்ற பெயரில் மலேசியாவில் வர்த்தகக் குழுமத்தை உருவாக்கி, தரமான தங்குமிட வசதியுடன் கடற்கரைப் பட்டணங்களில் ஹோட்டல் தொழில், நாட்டின் மையப் பகுதியான கிள்ளான் பள்ளத்தாக்கில் உணவகத் தொழில், தேசிய அளவில் திரையரங்கத் தொழில் என்றெல்லாம் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தில் செம்மாந்த தொழில் குழுமப் புலிகளாக வலம்வருகின்றனர்.



தலைநகரில் பாரம்பரியச் சிறப்புக்குரிய கொலிசியம் திரையரங்கம் விற்பனைக்கு வந்தபோது, அதைக் கொள்முதல் செய்து அதேப் பெயரில் நடத்தி வருகின்றனர். மலேசியத் தமிழ்த் திரைப்பட ரசிகர்களுக்கு 'LFS' என்னும் சுருக்கெழுத்து மிகவும் பிரபலம் Lotus Five Star என்னும் பெயரில் நாடு முழுவதும் ஏராளமான திரையரங்குகளை நடத்தி வருகின்றனர் இந்தத் தாமரை வர்த்தகக் குழுமத்தினர்.

இத்தகைய தாமரைக் குழுமத்தின் பெருந்தூண்களில் ஒன்றான டத்தோ ரெனா. இராமலிங்கம் என்னும் நல்லாரின் அரும்புதல்வி தாமரைக்கும் அர்விந்த்-ற்கும் கோலாலம்பூர், டுத்தா மாஸ் சாலை-2இல் அமைந்துள்ள மலேசிய பன்னாட்டு வர்த்தக-கண்காட்சி மையத்தில் நேற்று ஜுன் 19, ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் நடைபெற்றது.

டத்தோ இராமலிங்கம் குடும்பத்திற்கும் பத்திரிகைத் துறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் மலர் நாளிதழ் இவர்களின் குடும்பத்தின் சார்பில் நடத்தப்பட்டது.

அந்தப் பாரம்பரியத்தின் அடிப்படையில், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஒரு நாளிதழை நடத்த டத்தோ இராமலிங்கம் மேற்கொண்ட முயற்சி, சில அரசியல் தலைவர்களின் தலையீட்டினால் தடைபட்டது.

இதனால், தாமரை வர்த்தகக் குழும வளர்ச்சியில் முழு ஈடுபாடு காட்டியதுடன், மலேசிய இந்திய உணவக உரிமையாளர் சங்கத்தை உருவாக்கி, அதை நீண்டகாலமாக வழிநடத்தியதுடன் அந்தச் சங்கத்திற்கு சொந்தமாக ஒரு கட்டடமும் இவரின் தலைமையில் கொள்முதல் செய்யப்பட்டது.



மலேசியாவின் 5-ஆவது பிரதமர் துன் அப்துல்லா அகமது படாவியுடன் நெருக்கமான நட்பு கொண்டிருந்த டத்தோ ரெனா. இராமலிங்கம், தற்பொழுது மலேசிய இந்திய உணவக உரிமையாளர் சங்கத்தின் நிரந்தர சிறப்புத் தலைவராக செயல்படுகிறார். இவரின் மகளான தாமரையின் மணவிழாவில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

மலேசிய இந்தியர் காங்கிரஸ் தலைவர்கள் உள்ளிட்ட இந்திய சமுதாயத் தலைவர்கள், மலாய்த் தலைவர்கள், வர்த்தகப் பெருமக்கள், பத்திரிகை வட்டத்தைச் சேர்ந்தவர்கள், நண்பர்கள், தமிழ் நாட்டில் பூர்வீக ஊரான சிவ கங்கைச் சீமையைச் சேர்ந்த திருப்புத்தூரில் இருந்த ஒரு வாரத்திற்கு முன்பே வருகைதந்திருந்த உறவினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்ட சிறப்பு நிகழ்ச்சியாகவும் கொரோனா பருவத்திற்குப் பின் தலைநகரில் அதிகமானோர் பங்குபெற்ற ஒன்றுகூடலாகவும் தாமரை-அர்விந்த் மணவிழா அமைந்தது.





**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# இந்திய சமுதாயத்திற்காக குரல்கொடுக்க வலிமையான தலைவர்கள் தேவை!



பொன். வேதமூர்த்தி

**கோ**லாலம்பூர், ஜுன் 20:

இந்தியர்களுக்கு வலிமைமிக்க ஒரு தலைவர் தேவை என்றும் நாட்டின் நூறாவது மெர்டேக்கா (சுதந்திர தினக்) கொண்டாட்டம் அர்த்தமுள்ளதாகவும் தேசப்பற்றை முழுமையாக பிரதிபலிக்கக் கூடியதாகவும் அமைய வேண்டும் என்று மலேசிய முன்னேற்றக் கட்சி-எம்ஏபி தேசியத் தலைவர் பொன்.வேதமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்திய சமுதாயத்தைப் பாதிக்கும் வகையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகள் குறித்தும், அரசாங்கத்தின் தவறான கொள்கை குறித்தும் கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள தலைவர்களை நோக்கி துணிந்து கேள்வி எழுப்பக்கூடியவர்களாகவும் இந்திய சமுதாயத்திற்காக குரல் எழுப்புவதால் ஏற்படும் சவாலை சந்திப்பவர்களாகவும் அந்தத் தலைவர்கள் விளங்க வேண்டும் என்று, இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒற்றுமைத் துறை முன்னாள் அமைச்சருமான அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் 35 ஆண்டுகளில் மெர்டேக்கா நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறோம். பி-40 தரப்பினர் உள்ளிட்ட நலிந்த இந்திய மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் அளவிற்கு மலாய்த் தலைவர்களை எந்த அளவிற்கு நம்முடைய தலைவர்கள் இசைய வைக்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் நம் எதிர்கால சந்ததியரின் வாழ்வும் இருக்கும். பெரும்பாலான மலேசியத் தலைவர்கள் நம்பிக்கை இழந்துள்ளதுடன் கேள்வி எழுப்பினால், எங்கே தமது பதவியும் அதிகாரமும் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர். இத்தகைய தலைவர்கள்தான், மலேசிய இந்திய அரசியலில் நீண்ட காலமாகமே, ஏகபோக உரிமையைப் பெற்றுள்ளனர்.

கோலாலம்பூரில் வணிகத் தரப்பினரை அண்மையில் சந்தித்தபோது, அவர்கள் தைரியமான தலைவர்கள் வேண்டும் என்றனர். அதேவேளை, பயத்தின் காரணமாக இருக்கும் தலைவர்களை எதிர்கொள்ளத் தயங்குகின்றனர். இருப்பினும், சுயநல இந்தியத் தலைவர்கள் அரசியல் ஏகபோகமாக ஆக்கிரமித்து இருப்பதற்கு முடிவு காண வேண்டும் என்ற அவாவை அவர்கள் வெளிப்படுத்தினர்.

ஹிண்ட்ரா·ஃப் இயக்கத்தில் இருந்து உருவான எம்ஏபி கட்சி, இந்தியர்களின் உரிமையில் எந்த சமரசத்தையும் ஏற்படுத்திக் கொள்ளாது என்று அவர்களிடம் உறுதியளிக்கப்பட்டதாக வேதமூர்த்தி கூறினார். இந்தியர்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை வரைந்துள்ள எம்ஏபி, இதன் தொடர்பில் மத்தியக் கூட்டரசு அக்கறைக் காட்டினால் இணைந்து செயல்படக்கூடிய பல்துரைசார் வல்லுநர் குழுவையும் கொண்டிருப்பதாக மலேசிய இந்தியர்களுக்காக பன்னாட்டு நடுவர் நீதிமன்றம் வரை சென்று குரல்கொடுத்த தலைவருமான பொன்.வேதமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, தன்னலமற்று, மக்களுக்காக சேவையாற்றும் உறுதியான தலைமைத்துவத்தையும் எம்ஏபி கொண்டிருக்கிறது என்றும் நம் எதிர்கால சந்ததிக்காக எந்தத் தியாகத்திற்கும் எம்ஏபி தலைவர்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# கடந்தவையும் கடப்பவையும் (36)

- உமா மோகன் -

ஆண்டு ஒன்று கழிந்ததும் - தந்தை
கொண்ட அந்த வேலையும் முடிந்தது

மீண்டும் ஊருக்குத் திரும்பிட - பொதிகள்
கட்டும் வேலைகள் ஆரம்பம் ஆனாலும்

சேர்ந்து போவது எப்படி? - அங்கு
சேர்ந்த பள்ளியும் தான்சனும் நல்லதே - மீண்டும்

புதுப்பள்ளி ஒன்றில் சேர்வது என்பது
ஏதுவாய் ஆவது எப்போது? - அதுவரை

நல்லவள் நண்பி வீட்டில் அடைக்கலப் பொருளாய் - வெளித்
தொல்லைகள் ஏதுமின்றி கல்வியைத் தொடர்ந்த நாட்கள்

இன்றதை நினைக்கும் போதும் மனம்
இன்ப உணர்வினில் திளைத்துக் கொள்ளும் - அன்று

அமைதிக்காய் வந்தவர் ஆங்காங்கு நின்றவர்
திரும்பிப் போயினர் தம் தேசம்

அமைதி அற்று அலைந்து திரிந்தவர் - சிலர்
மீண்டும் போயினர் சொந்த இடம்

அரண்களோடு இணைந்த பள்ளிகள் பல
ஆரவாரமாய் திறக்கப்பட்டன

சரிந்து போன கூரைகள் பல
நிமிர்த்தி அங்கு நிறுத்தப்பட்டன

ஆலய மணி ஓசைகள் எல்லாம்
வீசிடும் காற்றோடு கலந்தே வந்தன - ஆனாலும்

உறுதியாய் ஒரு சில அரண்களில் இருப்பவர் - தம்
இருப்பினை வெடிகளால் ஆங்காங்கு
உணர்த்தியே நின்றனர் - எனினும்

நேருக்கு நேர் என்ற தொல்லை - அங்கு
ஆருக்கும் கொஞ்ச நாள் இருந்ததில்லை - அப்போ

உயிர்ச் சேதம் இல்லா நாளென்றால் - அது
மிகச் சிறப்பான நாளாய் இருந்ததுண்டு

அமைதிக்காய் அனுதினமும் ஏங்கிய இனம் - மிக
எளிதாக மறந்ததுவா நடந்தவையை? - அன்று

மண்ணுக்காய் மருணித்த மான இனத்து - சில
சின்னன் சிறுசுகள் இன்று பிறரின்

பொன்னுக்காய் பொருளுக்காய் தன்னிலை மறந்து
என்னவெல்லாம் செய்கிறார்கள் கேவலமாய்

வாள்தூக்கும் வல் அரக்கர்களாய் சிலர்
தள்ளாத வயதினரிடம் ஈவு இரக்கம் இல்லாது

கொள்ளையடிப்பவர் சிலர் அவர்களைக்
கொலையும் செய்கிறார் சிலர்

கள்ளமில்லாப் பிஞ்சுகளை கல்நெஞ்சர் சிலர்
வஞ்சகமாய் வதைக்கிறார்கள் சிதைக்கிறார்கள் - இன்று

குடிப்பதற்கு பால் இல்லை - அங்கு
உண்பதற்குப் பானும் உகந்த விலையிலில்லை - ஆனாலும்

போதைப் பொருளுக்கோ என்னாளும் குறைவில்லை
பாதை மாறிப்போகும் இவர்களைத் தடுப்பதற்கு

உகந்த ஆட்கள் இல்லை - அங்கு
உறுக்கிக் கேட்பார் வாழ்க்கைக்கும் உறுதி இல்லை

நல்ல காலம்

அக்காலம் இப்படி இருந்திருப்பின்
எப்படிச் சாத்தியம் அடைக்கலம் கொடுப்பதும் பெறுவதும் ?

(தொடரும்)

# தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சி




அனைத்துலக மருத்துவ நல அமைப்பு - IMHO USA மற்றும் இரட்ணம் பவுண்டேசன் (RATNAM FOUNDATION) அமைப்பினரது நிதி அனுசரணையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கும் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 45 ஆரம்ப மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கான திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சிநெறி யூன் மாதம் 11,12 ஆம் திகதிகளில் முதல் கட்டமாக தென்மராட்சி வலய கணனி வள நிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறி இசுருபாய கல்வி அமைச்சின் ஈ- தக்சலாவ மற்றும் வடமராட்சி வலய கணனி வள நிலைய வளவாளர்களினால் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சியின் இரண்டாம் நாளில் குறித்த அதிபர்களுடன் திறன் பலகை பாவனை பற்றியும் வலய கல்வி அலுவலக மேற்பார்வை நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டு ஆசிரியர்களுக்கான விரலிகளும் பெயர் பலகைகளும் வழங்கப்பட்டன.

இதில் வலயக் கல்வி பணிப்பாளர் திரு. கிருபாகரன் அவர்களும் கலந்து கருத்துக்களை வழங்கியிருந்தார்.

இப்பயிற்சி அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் - IMHO USA இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் திரு. கிருஷ்ணகுமார் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது.



இப்பயிற்சி நெறியின் இரண்டாம் கட்டம் ஆசிரியர்களுகளினது வேண்டுகோளுக்கமைய மூன்று வாரங்களில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு வழங்கப்பட 10 பாடசாலைகளுக்கான திறன் பலகை கொள்வனவுக்கான நிதியில் 50% அனைத்துலக தென்மராட்சி அமைப்பினரால் வழங்கப்பட்டிருந்தது.




# இவ்வார ராசிபலன்

**24-06-2022 வெள்ளி தொடக்கம் 30-06-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** புதிய வாய்ப்புக்கள் வரும். பொல்லாத காரியங்கள் சொல்லாமல் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். செயல் திறமை அதிகரிக்கும். கடன்சுமை அதிகரிக்கும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் குறையும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசியலில் புகழ் சேரும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மன நிறைவு தரும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர்கள் நட்பு ஏற்படும். பணவிரயம் ஏற்படும். சொத்துக்கள் சேரும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். கல்வியில் கவனம் குறையும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். மன அமைதி கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றம் நன்மை தரும். பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P





**ரிஷபம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். நண்பரால் சங்கடம் நேரும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் சேரும். பெற்றோர்களால் பாராட்டப் பெறுவீர்கள். செயல் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை வெளிப்படும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். மனை வாங்கும் சிந்தனை உண்டு. மனைவியால் ஆறுதல் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி ஏற்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் வெளிப்படும். பெருமைகள் கூடி வரும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. விசேஷ பலன்கள் உண்டு. வறுமை நிலை மாறும். வஸ்திர தான பிரார்த்தனையால் வளமும், நலமும், ஜெயமும் உண்டாகும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடன் பிரச்சனை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும் வாரம். காரிய அனுகூலம் தரும். பூர்வீகச் சொத்து வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மற்றவர் உதவி கிட்டும். உறவினர்கள் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு கிட்டும். எதிர்பாராத ஏற்றம் கிட்டும். இனிப்பானச் செய்திகள் வரும். கோதுமை தானப் பிரார்த்தனையால் குலவிருத்தி சேரும். மனை வாங்கும் சிந்தனையும், மனதில் உள்ள காதலும் பூர்த்தியாகும். ஆடம்பர சுகங்கள் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர்களால் மனஅமைதி கெடும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடை ஏற்படும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். அரசாங்க அனுகூலம் கூடும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பிள்ளைகள் வகையில் இருந்த தொல்லைகள் விலகும். தீர்த்த யாத்திரைகள் உண்டு. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். காரியத்தடை அகலும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். புத்திரரால் பூரிப்பு உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,A




**கடகம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். இரும்புத்தொழில் லாபம் உண்டு. சங்கடங்கள் அதிகமாகும். அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைப்பளு கூடும். அரிசி தானப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரத்தில் வெகு லாபம் கிடைக்கும் காலம். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். இனிக்கும் சம்பவம் அமையும். தொழில் நிம்மதி கொடுக்கும். சகோதரியால் லாபம் உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். விரக்தி நிலை மாறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் வரும். எள் தானப் பிரார்த்தனையால் ஏற்றமும், மாற்றமும் உண்டாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. முயற்சி பலன் தரும். பழிச்சொல் தேடி வரும். காரியம் இழுபறியாகும். சுபிட்ஷம் பெருகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை காணப்படும். வீடு, மனை யோகம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் கைமேல் பலன் கிடைக்கும். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆதாயம் மிகுதியாகும். கஷ்ட காலம் விலகும். சுபச்செய்திகள் வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
**'ராஜயோகம்'**
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். பயணம் லாபம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மனநிறைவு உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். காரியத்தில் வெற்றி கிடைக்கும். கனவுகளும், ஆசைகளும் நிறைவேறும். கௌரவம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பரப் பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். நினைத்தது நிறைவேறும். மின்சாரத்தில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கருத்து வேறுபாடுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொறுமையைக் கையாள வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 4,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,C




**கன்னி:** பணவரவு திருப்தி தரும் வாரம். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். பழையக் கடன் தீரும். அச்சத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். முற்போக்கு சிந்தனை வரும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பெத்தவங்க ஆசியும், மத்தவங்க வாழ்த்தும் கிடைக்கும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பிரபல்ய ஆசை ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. கண் நோய் வந்து போகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பரபரப்பு இல்லாமல் பணவரவு பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 6,9,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதாநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,U




**துலாம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். பொன் பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். நண்பர்களால் நன்மையுண்டு. பாதகமான சூழ்நிலைகள் காணப்படும். பணியாட்கள் ஆதரவு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சினை தீரும். வியாபாரம் சிறக்கும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். கிருபைகளும், பெருமைகளும் கிடைக்கும். காரிய வெற்றி கிட்டும். துயரங்களையும், தோல்விகளையும் தாண்டி உயரங்களைத் தொடும் காலம். குடும்ப ஒற்றுமை கூடும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். தோற்றப் பொலிவு கூடும். பொறியியல் துறை லாபம் தரும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். தொலைநோக்கு சிந்தனை உருவாகும். விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J




**விருச்சிகம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். புண்ணியம் சேரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். வேண்டிய உதவி கிட்டும். வாகனயோகம் அதிகரிக்கும். வகையான செல்வம் சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதியப்பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. தொழில் போட்டி அதிகமாகும். மருத்துவச் செலவு கூடும். பணவரவு திருப்தி தரும். முயற்சிகள் பலிதமாகும். சேமிக்கும் எண்ணம் மேலோங்கும். தனவரவு பெருகும். மேன்மைகள் அதிக அளவில் நடைபெறும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். வீண் வம்பு அகலும். வியாபாரத்தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,1,9,6
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P

*(தொடர்ச்சி 34 பக்கம்)*


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
123
Mini Library
NESCAFE Sunrise
MAHANARAYAN TAILA
BRU
KILLI
Fair & Lovely
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

## இவ்வார ராசிபலன்

(32 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** கலகலப்பான வாரம். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினரால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியை தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சுக்களால் சாதகமான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன் மனைவி ஒற்றுமை கூடும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். விவசாயம் பலன் அளிக்கும். பாதகம் விலகும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டாகும். மங்களச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சி கூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழிலில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,7
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மகரம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. தொழில் வாய்ப்பு கூடி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். மனநிறைவுகள் உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். மிகையான நன்மைகள் கிட்டும். முறிந்து போன உறவுகள் மகிழ்ந்து வந்து இணையும் காலம். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். கலகலப்பான செய்திகள் வரும். ஆபத்துக்கள் விலகக்கூடிய மகத்தான காலம். ஆலய தரிசனத்தால் ஆத்ம பலன் பெறக்கூடிய அற்புதமான காலம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். திருப்பு முனை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கும்பம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மேலான ஆசியும் மேதைகளின் நட்பும் கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் கிடைக்கும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலைப்பளு அதிகரிக்கும். ஐஸ்வர்யம் சேரக்கூடிய அற்புதமான காலம். ஆபரணப் பொருள்கள் சேரும். எண்ணிய காரியம் கைக்கூடும். தொழிலில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். ராகு காலப் பிரார்த்தனையால் “ராஜயோகம்” கிடைக்கும். நன்மதிப்பு உருவாகும். வாடும் நிலை விலகி வீடு நிலமும் வாங்கும் காலம். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மனிதரால் வசதி உண்டு. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியலில் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்ப தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்புக்கள் கூடி வரும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு ஆறுதல் தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீவிஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,3,5
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** ஆதாயம் கிடைக்கும் வாரம். உற்சாகம் மேலோங்கும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நிர்வாக அலைச்சல் கூடும். வெளியூர் பயணம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. வியாபார லாபம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. சொந்த தொழில் அமையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். துன்பம் விலகும் காலம். மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பும். தீய எண்ணம் விலகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்துக் கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். வம்புதும்புகள் ஒழியும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எதிலும் நிதானம் தேவை. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. அரசு உதவிள் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். காதலில் கண்ணியம் கூடும்.பெரியோர்களிடம் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். இனிய செய்தியால் மனம் மகிழும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

கனடிய செய்திகள்
Canadian News

# எதிர்வரும் 26-06-2022 ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் நகரில் FIVE STAR HOTEL ஒன்றின் மண்டபத்தில் நடைபெறவுள்ள

## Miss Tamil Universe-2022

### மிகவும் அழகிய மண்டபத்தில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள சர்வதேச விழாவில் நாம் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொள்வோம்



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் AGA Beauty Academy நிறுவனத்தின் ஆதரவில் எதிர்வரும் 26-06-2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணி தொடக்கம் மார்க்கம் நகரில் Hilton Hotel and Convention Centre மண்டபத்தில் நடைபெறவுள்ள Miss Tamil Universe - 2022 உலகத் தமிழ் அழகியை தேர்ந்தெடுக்கும் போட்டி மற்றும் அந்த விழா பற்றிய விபரங்களை ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு விளக்கும் சந்திப்பு செவ்வாய்கிழமை (21) மாலை ஸ்காபுறோ நகரில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

AGA Beauty Academy நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவியுமான சசிகலா நரேன் அவர்கள் அவரது கணவர் திரு. நரேன் ஆகியோர் இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த 'Miss Tamil Universe - 2022' உலகத் தமிழ் அழகிப் போட்டி விழாவில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்து பத்துக்கு மேற்பட்ட போட்டியாளர்களும் மற்றும் கனடா இந்தியா ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிலுமிருந்து சுமார் 20 இளம் பெண் போட்டியாளர்கள் இந்த போட்டியில் கலந்து கொள்கின்றனர்.



For more information, please contact:

SISIKALA NAREN at (416) 677-5511

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Holiday Party
- Children's Party
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின்
மடியில்:

28
-
05
-
1954



மண்ணில்
மடியில்:

04
-
07
-
2021

## திரு. தனபாலசிங்கம் நவரட்ணம் (தனா)

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த எங்கள் அன்பிற்குரிய அமரர் திரு. தனாபலசிங்கம் நவரட்ணம் (தனா) அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி.

புன்னகையே உங்கள் வதனத்தின் அழகுக் கவசம்
புரிந்துணர்வே தங்கள் இதயத்தின் உச்சம்
மென்மையாய் சிந்தித்து மெதுவாகப் பேசி
மற்றவரை மெச்சும் பண்பு உங்களது சித்தம்
என்றும் எமக்கு அன்பை அள்ளி சொரிந்த துணைவராய்
ஏற்றதொரு அப்பாவாய் எழுபதை எட்டி நின்ற வேளையிலே
நின் உயிரைக் கவர்ந்தான் அந்த கொடியோன் இயமன் எம்
நிம்மதி தொலைந்தது நினைவுகள் அழிந்தன நாசம் தான்

இதயத்தில் நிறைத்து நின்ற இனியவரே நீங்கள் இல்லா
இவ்வுலகம் எமக்குக் கசந்துத எஞ்சிய நாட்கள் எப்படியோ
உதயத்துச் சூரியனாய் எம் குடும்பத்திற்கு ஒளியூட்டியவரே
உம் உம்மை இழந்ததனால் கண்ணை பறிகொடுத்தவரானோம்
சிதறியது எங்கள் சீரான வாழ்வு சிரித்து மகிழ முடியவில்லை
சீக்கிரமாய் மீண்டு வந்து எம்மோடு சேர்ந்திடுங்கள்
பதறும் எம் மனங்களிலே பாசத்தை கொட்டுங்கள்
பரமனிடம் நாமெல்லாம் அதைத் தான் வேண்டுகின்றோம்

இங்ஙனம், அன்பு மனைவி. ஆசைப் புதல்வர் மற்றும் புதல்வி
(647) 515-9923 அல்லது (647) 467-0027

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com


Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1368 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 24, 2022

## ஜூன் 2 தேர்தலில் என்.டி.பி கட்சி ஒன்பது இடங்களை இழந்தது ஏன் என்பதை ஆழ்ந்து நோக்க வேண்டும் என்கிறார் முன்னாள் தலைவி



நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட ஒன்றாரியோ மாகாண கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கமானது டக் போர்ட் தலைமையில் அதிக பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்த கடந்த ஜூன் 2 தேர்தலில் தமது என்டிபி கட்சியானது ஒன்பது இடங்களை இழந்தது ஏன் என்பதை கட்சியின் முக்கிய தலைவர் ஆழ்ந்து நோக்க வேண்டும் என ஆண்ட்ரியா ஹோர்வத் தெரிவித்துள்ளார். தலைமைப் பதவியிலிருந்து வெளியேறும் அவர். எவ்வளவு காலத்திற்கு மாகாண சபை உறுப்பினராக பதவி வகிப்பேன் என்பதை தமது வானொலி பேட்டியொன்றில் தெரிவிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)

## கவிநாயகர் கந்தவனம் அவர்களது இல்லத்தில் "உதயன்-இலங்கைச் சிறப்பிதழை" ஜேர்மனி "வெற்றிமணி" ஆசிரியருக்கு வழங்கிய பிரதம ஆசிரியர்



கடந்த செவ்வாய்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள கவிநாயகர் கந்தவனம் அவர்களது இல்லத்தில் "உதயன்-இலங்கைச் சிறப்பிதழை" ஜேர்மனி "வெற்றிமணி" ஆசிரியர் திரு மு. க. சு. சிவகுமாரனுக்கு "உதயன்"பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் வழங்கினார்.

தற்போது கனடாவில் தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்துள்ள திரு மு. க. சு. சிவகுமாரன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோரை சந்தித்து உரையாடும் வகையில் அவர்களது இல்லத்தில் சில நண்பர்கள் கூடினர். அச்சமயம். மேற்படி உதயன் பிரதிகள் வழங்கப்பெற்றன.

## Ontario's Minister Raymond Cho Team hosted 'Scarborough North Victory Celebration'

## ஒன்றாரியோ அமைச்சர் றேமண்ட் சோ தேர்தல் பிரச்சாரக் குழு ஏற்பாடு செய்த "வெற்றிக் கொண்டாட்டம்" சிறப்பாக நடைபெற்றது

கனடாவின் நீண்ட கால அரசியல் அர்ப்பணிப்பாளரும், தொடர்ச்சியாக துர்தல் வெற்றிகளை தனதாக்கிக் கொண்டவரும் ஒன்றாரியோ மாகாண அமைச்சருமான கௌரவ றேமண்ட் சோ தேர்தல் பிரச்சாரக் குழு ஏற்பாடு செய்த "வெற்றிக் கொண்டாட்டமும் தொண்டர்கள் கௌரவிப்பு நிகழ்வும்" சிறப்பாக நடைபெற்றது.

(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)





## கனடாவில் உதயன் இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை நேரடியாகக் கையளித்து வரும் பிரதம ஆசிரியர்






கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்கள் சிலர் கடந்த 29-05-2022 அன்று நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ள இயலவில்லை.

அவ்வாறான வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நண்பர்களுக்கு இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை நேரடியாகக் கையளிக்கப்பெறுகின்றன.

அந்த வரிசையில், இங்கு காணப்படும் படங்களில் பத்திரிகைக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவரும் வர்த்தகப் பிரமுகரும் வர்த்தக முயற்சிகள் தொடர்பாக ஆங்கிலத்தில கட்டுரை எழுதி வருபவருமான குலா செல்லத்துரை மற்றும் உதயன் பத்திரிகைக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வருபவரும் பிரபல வீடு விற்பனை முகவரும் மோட்கேஜ் நிதி ஆலோசகருமான திரு சாண் தயாபரன் ஆகியோர்க்கு "இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கையளிப்பதைக் காணலாம்.

## கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ் பிரதியைப் சென்னை நண்பர்களுக்கு வழங்கிய கனடா எழுத்தாளர் வீணைமைந்தன்





கனடா உதயன்பத்திரிகையின் "இலங்கைச் சிறப்பிதழ் பிரதிகள் தற்போத உலகெங்கும் உள்ள கலை இலக்கிய ஆர்வலர்களின் கரங்களில் உதயன் எழுத்தாளர்களால் கையளிக்கப்படுகின்றன. இந்த வகையில் மேற்படி இதழின் பிரதிகளை தற்போது சென்னையில் தங்கியுள்ள கனடா எழுத்தாளர் வீணைமைந்தன் அவர்கள் சென்னை மதுரா ட்ரவல்ஸ் பிரயாண முகவர் நிறுவன அதிபர் திரு விகேடி. பாலன் மற்றும் சென்னை மணிமேகலைப் பிரசுர அதிபர் ரவி தமிழ்வாணன் ஆகியோருக்கு வழங்கினார். சென்னையில் எழுத்தாளர் வீணைமைந்தன் அவர்கள் கனடா உதயன் பத்திரிகையில் தொடராக எழுதிய கட்டுரைகளை நூலாகத் தொகுக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டர்ஹாம் தமிழ் ஒன்றியத்தால் நடத்தப்பெறும் நிதி சேர் இராப்போசன நிகழ்விற்கான அழைப்பு

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் சமூகத் திட்டங்கள் மற்றும் சுயதொழில் தொழில்முனைவோர் தேவைகளை ஆதரிப்பதற்காக நிதி திரட்டும் இராப்போசன நிகழ்வில் கலந்துகொள்ள அனைவரும் அழைக்கப்பெறுகின்றார்கள்.

ஏதிர்வரும் யூன் 25ம் திகதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு

**Audley Recreation Centre (Banquet Hall)**
**1955 Audley Road North, Ajax** என்னும் விழா மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இங்ஙனம், டர்ஹாம் தமிழ் ஒன்றியத்தின் நிர்வாகசபையினர்

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H Selvanayagam Broker